
இதழ் - 8

ஜனவரி - 2026

கேலக்ஸியின்

# விண்மீன்

மின்னிதழ்



## 'கற்றதை விட இழந்தவைகள் அதிகம்'

— முல்லை அமுதன்

## கனவாயும் குளங்களும்!!!

-நில்வாவின் நிழலில்



ISBN 978-81-994856-2-2

www.galaxybs.com

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

விண்மீன்
மின்னிதழ்

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல
தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே
நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.
- நாலடியார்

ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
- ஔவையார்

**பதிப்பாளர்**
பாலாஜி பாஸ்கரன்

**ஆசிரியர்**
பரிவை சே குமார்

**இணை ஆசிரியர்**
தேவதர்சினி நடராஜன்

**வடிவமைப்பு**
சென் பாலன்
ஹரிபிரசாத்

**Published by**
Galaxy Book Sellers & Publishers

**Print Partners**
Printech, UAE

**Travel Partner**
FJ Tours & Travels, UAE

**Galaxy Book sellers & Publishers**
www.galaxybs.com
+91 99944 34432

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

ISBN 978-81-994858-2-2

9 788199 485822

# வரலாறு

நாம் வரலாறுகளை முழுமையாகப் பாதுகாத்து வைக்கவில்லை என்பதுடன் நமக்கு எது தேவையோ, நாளைய தலைமுறை இதை மட்டுமே வரலாறாய் பார்க்க வேண்டும் என்பதை மட்டுமே வரலாறாகவும் மாற்றி வைத்திருக்கிறோம். எல்லா வரலாறுகளுமே சில விஷயங்களில் மிகைப்படுத்தப்பட்டதாகவோ அல்லது திணிக்கப்பட்டதாகவோ இருக்கின்றன. இந்த ஆண்டு சென்னை புத்தகக் கண்காட்சிக்கு நிறைய வரலாற்றுப் புதினங்கள் வெளிவந்திருக்கின்றன என்பது மகிழ்வான விசயம். வரலாற்றில் இருந்து ஏதோ ஒரு இழையை எடுத்து அதன் வழி தங்களின் கற்பனையை விரித்து புதினமாக்குகிறார்கள். இதில் வரலாறு என்பது ஒரு நூல்தானே என்றெல்லாம் யோசிக்க வேண்டியதில்லை, காலம் காலமாக நாம் அப்படித்தானே வரலாறை எழுதுகிறோம். இப்படியாவது வரலாறு எழுதப்படுகிறதே என்று சந்தோசப்பட்டுக் கொள்ளலாம்.

நமக்கு இரண்டு அல்லது மூன்று தலைமுறைக்கு முன் நடந்தவற்றைக் கூட நம்மால் இப்போது திரும்பிப் பார்க்க முடியாது. உங்க தாத்தா வீரமா இருந்தாருன்னு அம்மாவோ, அப்பாவோ அல்லது ஊரோ சொல்லக் கேட்டிருப்போம் ஆனால் அந்தத் தாத்தா செய்த ஏதாவது ஒரு வீரதீரச் செயலாவது நமக்குத் தெரியுமா என்றால் அதுதான் இல்லை. மேலே சொன்னதைப் போல் ஒரு இழையை எடுத்து 'பராக்கிரம பாண்டியனின் பொன்வாள்' அப்படின்னு எழுதுபவர்கள், இணையத்தில் ஏதோ ஒன்றைத் தேடி, அதை வைத்து தேடுதலைத் தீவிரமாக்கி இதுதான் இந்த வரலாறு என்று எழுதுபவர்கள், முன்பு யாரோ எழுதிய வரலாற்றுப் புத்தகத்தில் இருந்து ஒரு பகுதியை எடுத்து அதில் தன் கற்பனையைக் கலந்து எழுதுபவர்கள் என இவர்களை எல்லாம் விட, தனக்குச் சில தலைமுறைக்கு முந்தைய மனிதர்களின் கதைகளை கேட்டு, அப்போது இந்த நகரம் எப்படி இருந்தது என்பதை அவர்களின் விபரணையை வைத்து தனது நாவல்களில் வரலாறாய் பகிர்ந்து வரும் கரன் கார்க்கி சிறந்தவர் என்பதைவிட, தமிழ் எழுத்தாளர்களில் முக்கியமானவர் என்று சொல்லலாம். அவர் எந்த இடத்திலும் நானே பெரியவன், என் எழுத்தே பெரிது எனப் பேசியதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமீபமாய் எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களின் உரைகளைக் கேட்க ஆரம்பித்து, இப்போது அவரின் பேச்சுக்கு அடிமையாகி விட்டேன் என்றும் சொல்லலாம். ஒவ்வொரு பேச்சிலும் எத்தனை எத்தனை விசயங்கள்... வரலாறுகள், புத்தகங்கள், சினிமாக்கள் என்று விரிவாகப் பேசுகிறார். மிளகுக்காக வந்தவன் நம்மை அடிமையாக்கியது, உப்புவேலி போட்டது, நிலஅளவை, எவரெஸ்ட்டின் பெயர் விளக்கம், ராகுல் சாங்கிருத்தியாயன், டால்ஸ்டாய், டார்வின், ஷேக்ஸ்பியர், தான் கடந்து வந்த பாதை எனப் பேச ஆரம்பித்தால் எஸ்.ரா என்னும் பெட்டகத்துக்குள் இருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விசயங்கள் கொட்டிக் கொண்டே இருக்கிறது. போனில் ரீல்ஸ், அரட்டை என இருக்கும் நம் பிள்ளைகள் புத்தக வாசிப்பை அதிகமாய் விரும்புவதில்லை, சிலர் ஆடியோ கதைகளை கேட்டால் போதும் என நினைக்கிறார். அதுவும் கதை சொல்கிறேன் என தங்களின் எண்ணைத்தையெல்லாம் சேர்த்து கதை விடுபவர்களின் பேச்சைக் கேட்பதைவிட எஸ்.ரா போன்றோரின் உரைகளைக் கேட்கச் சொல்வோம். நிறைய விசயங்களை நாம் தெரிந்து கொள்ள முடியும்.

பரிவை சே குமார்

# இதழில்.....


**சிறுகதை**

தாபா - வசந்தி முனீஸ்

கொட்டு சத்தம் - சுந்தர் சுப்ரமணியன்

தலையாட்டி பொம்மை - பாலமுருகன்.லோ

அகத்தின் வண்ணம் - அப்புசிவா

மீளுமா அந்த நிமிஷங்கள் - பாத்திமா ஹம்தா

**நேர்காணல்:**

'கற்றதை விட இழந்தவைகள் அதிகம்' – முல்லை அமுதன்

**கட்டுரை:**

நிஸ்வாவின் நிழலில் (பகுதி – 6) - இளங்கோ ராமசாமி

2025 வாசித்த புத்தகங்களில் கவர்ந்தது எது..? ஏன்..?

**புத்தகப் பார்வை:**

பால்யகால சகி - செ. இராசாராம்

**கவிதை**

இரவின் குரல் - புனிதா பார்த்திபன்

உலகார்ந்த பறவை - ராம்பிரசாத்

காலப்பயணம் - ராம்பிரசாத்

# தாபா

வசந்தி முனீஸ்

"பெங்களூருக்கு வெல்டிங் வேலை சம்பந்தமாக மும்பையிலிருந்து வந்திருந்த செல்லப்பாவின் முகம், வேலை விரைவாக முடிந்ததாலும் வேலை முடிந்து வழிந்த வியர்வைத் துடைக்கும் முன்னே கம்பெனி முதலாளி கேட்ட தொகையைவிட கூடுதலாய் சில ஆயிரம் கொடுத்ததாலும் மகிழ்ச்சியில் வெல்டிங் பண்ணும்போது வரும் வெளிச்சம்போல் பளிச் பளிச்சென்று மின்னியது.

கத்தையாகக் கொடுத்த ஐநூறு ரூபாய் காந்தி நோட்டுகளை கட்டை விரலில் எச்சில் வைத்து எண்ணி, செலவுக்குத் தனியாகவும் சேமிப்பை தனியாகவும் எடுத்து வைத்துவிட்டு, "தம்பியோ! சீக்கிரம் சட்டுபுட்டுன்னு வேலைய முடி. இன்னைக்கி அண்ணன் பார்ட்டி" குனிந்து வேலை செய்துகொண்டிருந்த நாராயணன் நிமிர்ந்து பார்ப்பதற்குள் சொல்லிவிட்டு குடுகுடுவென குளியலறைக்குள் ஓடினார் செல்லப்பா.



"நாராயணன் தான் அந்த கம்பெனியின் சூப்பர்வைசர். நாராயணனுக்கும் செல்லப்பாவுக்கும் சொந்த ஊர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கொம்பன்குளம்; சொந்தக்காரர்கள். செல்லப்பா நாராயணனுக்கு அண்ணன் முறை. நாராயணன் சிபாரிசில் தான் செல்லப்பா பெங்களூரு வந்திருந்தார்.

வேலை நேரம் முடிந்ததும் நாராயணன் விறுவிறுவென கை, கால், முகம் கழுவி அறையில் செல்லப்பா செய்த அடுக்குக் கட்டிலில் அமர்ந்தான்.

குளித்து முடித்து அறைக்குள் நுழைந்த செல்லப்பா, " தம்பி.. அண்ணன் பண்ண கட்டுலு எப்படில இருக்கு?" என்றார்.

"நல்லாருக்குண்ணே" என்றான்.

"அங்கபாரு தலமாட்டுல போனு, தண்ணிப்பாட்டுலு வைக்க பாக்ஸ்லாம் பண்ணிருக்கேன் பாரு" என்று தான் செய்த வேலைப்பாடுகள் ஒவ்வொன்றையும் காட்டினார்.

"பாத்தேன் பாத்தேன் சூப்பர். நல்லா ஸ்ட்ராங்கா இருக்கு" என்று செல்லப்பாவின் கையைக் குலுக்கினான்.

"சரி தம்பி, பத்து நிமுசத்துல ரெடியாயிருதேன்" என கட்டிய துண்டோடு கட்டிலிலமர்ந்து தேங்கண்ணெய்யை உள்ளங்கையில் ஊற்றி, உச்சி முதல் பாதம்வரை ஒரு இடம் விடாமல் தேய்த்தார். அந்தரங்கப் பகுதியில் தேய்க்கும்போதும் மட்டும் "தம்பி கொஞ்சம் அந்தப்பக்கமா திரும்பிக்கோ! கண்ணு நொள்ளையாயிறப் போவு"தென்று சிரித்தபடி தேய்த்து, நைலான் தோள்பட்டை பையிலிருந்து 'பான்ஸ்' பவுடரையெடுத்து ஒவ்வொரு கம்புக்கூட்டிலும் கால்கிலோ கொட்டினார். கழுத்திலும் மூஞ்சிலும் சாமியாடிக்குச் சந்தனம் பூசுவதுபோல் பூசிக்கொண்டு கண்ணாடி முன் நின்று கண்களை உருட்டி உருட்டிப் பார்த்தார்.



கண்ணாடிக்கு மேல் சுவற்றிலொட்டியிருந்த கரும்பல்லி பயந்து மூலையில் போய் ஒளிந்து கொண்டது.

கண்ணாடி முன் நின்ற செல்லப்பாவைப் பார்த்து, “எண்ணோவ்.. பொங்கலுக்கு வீட்டுக்கு வெள்ளடிச்சமாரி இதென்ன அலங்கோலம்!! மொதல்ல பவுடரத் தொடப்பா! நாயி கியி வெரட்டப்போவுது…” என்றான் நாராயணன்.

“கொஞ்சம் பவுடரு கூடிட்டு என்ன தம்பி” துண்டையெடுத்து முகத்தைத் துடைத்து பேண்ட் சர்ட் போட்டுக்கொண்டு “போலாமா”என்றார்.

“எண்ணே! பாருக்குத்தானப் போறோம். என்னமோ ஊருக்குப் போறமாரி கெளம்பிட்ட”

“பாருக்குப் போயிட்டு ஊருக்குப்போறேன். ” முழுக்கைச் சட்டையை மணிக்கட்டுக்கு மேல் சுருட்டி மடித்தபடி சொன்னார் செல்லப்பா.

“எப்பும் பம்பாயிக்கு டிக்கெட் போட்ட”

“பம்பாயிக்குப் போவலப்பா. நம்ம ஊருக்குப்போறேன். எங்க வேல இழுத்துரும் ஊருக்குப் போவ முடியாமப் போயிருமோன்னு நெனச்சேன். ஆண்டவன் புண்ணியத்துலயும் ஒங்களுடய ஒத்துழைப்பிலும் இருவது நாளுல முடியிற வேல மூணு நாளைக்கி முன்னக்கூட்டியே முடிஞ்சிருச்சி. அதான் ஊருக்குப் போயிட்டு வீட்டையும் தம்பி, தங்கச்சிப் புள்ளையளையும் ஒரெட்டுப் பாத்துட்டு அங்கிருந்து பம்பாயிக்குப் போலாமுன்னு முடிவு பண்ணிருக்கேன். “

“கரைட்டு. இவ்வளவு தூரம் வந்துட்டு ஊருக்குப் போவலன்னா நல்லாவா இருக்கும். சரி சார்ஜரு, துணிமணி எல்லாத்தையும் மறக்காம பேக்குல எடுத்து வை” ஒவ்வொன்றாய் நாராயணன் எடுத்துக் கொடுத்ததை வாங்கி வைத்தபடி, “தம்பி இங்கருந்து நம்ம ஊருக்கு டைரக்ட் பஸுருக்கா?” என்றவரிடம், “இங்கலாம் நிப்பாட்ட மாட்டான். இங்கருந்து அஞ்சி கிலோமீட்டர் கர்நாடகா பார்டர் அத்திப்பள்ளிப் போணும். இல்ல தமிழ்நாடு பார்டர் ஒசூர் போணும். நம்ம ஒசூரே போவோம். அங்க ஒரு ‘குடில்’ தாபா இருக்கு. எடமும் சுத்தமா இருக்கும்; சாப்பாடும் நல்ல ருசியா இருக்கும். பக்கத்துலயே பஸ்டாண்டு. சாபுட்டுட்டு பஸ்லேறி படுத்து ஓம்பாட்டுக்கு கொறட்டவுட்டுத் தூங்கு! விடியக்காலம் அஞ்சி மணிக்கெல்லாம் அலாரம் வச்சமாறி டான்னு தட்டியெழுப்பி திருனவேலில ஏறக்கிவுட்டுருவான்.” என்று நாராயணன் பைக்கை ஸ்டார்ட் செய்து, தோள் பையை சீட்டில் வைத்து செல்லப்பா ஏறியதும், “ எண்ணே! எதும் மறக்கலளா“ என்றான்.



ஒசூர் ‘குடில்’ தாபா முன் நாராயணன் பைக்கை நிறுத்தியதும் செல்லப்பா கீழிறங்கி தாபா முகப்பில் வைக்கப்பட்டிருந்த பெயர்ப் பலகையை அண்ணாந்து எம்.வியி. தா..ப்பா என்று வாசித்ததும் சைடு ஸ்டாண்ட் போடாத பைக்கைப்போல் கீழே சரிந்து விழுந்து சிரி சிரியென்று சிரித்து, “ படுபாவி! ‘எம்.வி தாபா’ன்னு எத்தாப் பெரிய போர்டு வச்சிருக்கான். நீயென்னன்னா தாபாவ ‘தாப்பா’ன்னு வாசிக்கீயப்பா” மீண்டும் சிரித்ததில் நாராயணனுக்கு வயிறு கொருத்துப் பிடித்துவிட்டது. சிரித்து சிரித்து கண்ணீர் வழிந்து கன்னமிரண்டும் மழையிலெடுக்க மறந்த துணியைப் போல் தொப்பென்று நனைந்துவிட்டது. செல்லப்பாவிற்கு ஒரே வெட்கமாய் போய்விட்டது.

“லைட்டு வெளிச்சத்துல கண்ணு கூசிடுச்சி. அதான் தாபா ‘தாப்பா’ ஆயிடுச்சு. இதுக்குப்போயி எவனாவது இப்படி இளிப்பானா? “

“சும்மாருண்ணே. அன்னைக்கி அப்படி தான் முடிவெட்டுறக் கடையில ‘ரஜினி பாபாவை தரிசிக்க இமயமலைச் சென்றார்’ன்னு பேப்பர்ல போட்டுருக்கு. நீ ‘பாப்பா’வை தரிசிக்கச் சென்றாருன்னு வாசிச்ச. கேட்டதுக்கு பழைய பேப்பரு, குட்டி எழுத்து, அது இதுன்னு கண்ணுத் தெரலன்ன. இன்னைக்கி என்னன்னா கொட்டயெழுத்துல போட்டுருக்கான் கண்ணு கூசிடுச்சின்னு புளுவுற. பள்ளிக்கொடத்துக்குப் போறேன்னு வீட்ல ஏமாத்திட்டு பாங்கெணத்துல புறாக்குஞ்சு எடுக்கவும் பெரிய கொளத்துல எலந்தப் பழமும் பண்ணையார் தோடத்துல மாங்காப் பறிக்கவும் திரிஞ்சா இப்படித்தான் ‘பாபா’ பாப்பாவாவும்;




தாபா தாப்பாவாவும்" என்று நாராயணன் எப்போதும்போல் மதுபானக்கூடத்தின் கடைக்கோடியில் நிற்கும் கசகசா மரத்தின் அருகேயிருக்கும் குடிலின் கீழ் போடப்பட்டிருக்கும் நார் கட்டிலில் தலைக்கவசத்தை வைத்துவிட்டு அமர்ந்தான். செல்லப்பா தோள்பட்டை பையை கட்டிலுக்குக் கீழ் வைத்துவிட்டு சாப்பிட உட்காருவதுபோல் சம்மணங்கால் போட்டு கட்டிலில் அமர்ந்தார்.

பருவப்பெண்ணின் உதட்டைப்போல் பழுத்துத் தொங்கிய கசகசா பழங்களை ஐந்தண்ணம் பறித்து செல்லப்பாவுக்குக் கொடுத்தான் நாராயணன். செல்லப்பா கடித்துவிட்டு, "தம்பி சீனிப்பழம் தேனா இனிக்கப்பா!! சரக்குக்கு இதயே சைடீசா வச்சுக்கலாம் போலியே. சின்ன வயசுல நம்ம கவுட்டக்காலன் கெணத்துல பறிச்சித் திண்ணது. அதுக்கப்பறம் இப்புந்தான் திங்கென்." -சப்புக்கொட்டினார் செல்லப்பா.

நாராயணன் சிரித்துவிட்டு பக்கத்துக் கட்டிலில் போதையிலொருவன் கக்கியழித்த வாந்தியை வாளியில் அள்ளிக்கொண்டிருந்த தர்மேந்தர் குமாரை அழைத்து சந்தீப்பை வரச்சொன்னான். அவன் 'டிகே பையா' என்று நாற்றம் தாங்காமல் மூக்கைப்பிடித்தவனைப் பார்த்து, "லவடைக்கா பால் ஜல்தி கிளீன் கரோ!" என்றான் மதுப்பானக்கடை மேலாளர்.

சந்தீப் வடமாநிலத்தைச் சேர்ந்த இளைஞன். நல்ல அனுபவசாலி. சாந்தமானவன்; சுறுசுறுப்பானவன். கூட்டம் நிரம்பி வழிந்தாலும் யார் யார் என்ன ஆர்டர் செய்தார்கள். எவ்வளவு மீதி கொடுக்க வேண்டும். அவர்கள் நமக்கு எவ்வளவு தர வேண்டுமென்று தன் கணிணி மூளையில் கனகச்சிதமாக பதிவுசெய்து வைத்திருப்பான். வாடிக்கையாளர்கள் தாபாவுக்குள் நுழைந்ததும் முதலில் தேடுவது சந்தீப்பை தான். அந்தளவுக்கு ஆள் படு பேமஸ். நாராயணனுக்கும் சந்தீப் நல்ல பழக்கம். சில நாட்கள் மது குடிக்காமல் சந்தீப்பைச் சந்தித்து பேசிவிட்டுச் செல்லுமளவுக்கு இருவருக்குள்ளும் அடர்ந்த நட்பு.

நேரம் எட்டுக்கு மேலாகிவிட்டது. சந்தீப் வரவேவில்லை. நாராயணனுக்கு சந்தீப்பை எட்டி எட்டிப் பார்த்து கழுத்தில் வலி வந்துவிட்டது. செல்லப்பாவிற்கு காத்திருந்து காத்திருந்து கோபத்தில் உடல் உலையாய்க் கொதித்து, பூசிய பான்ஸ் பவுடரெல்லாம் பனியாய் உருகத் தொடங்கியது. பொறுத்தது போதுமென்று பொங்கியெழுந்தார் செல்லப்பா.

மதுபானக்கடை நோக்கிச் சென்று விற்பனையாளரிடம், " பிபி இருக்கா" என்றார்.

விற்பனையாளர் வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்து, " பாஸ் எனக்கு சுகர் தானிருக்கு" என்று குலுங்கிய பீர் பாட்டில் திறக்கும்போது நுரை பொங்குவதுபோல சிரிப்புப் பொங்கி இருக்கையில் குலுங்கினார்.

"தலைவர நா 'பேக் பைப்பரு' இருக்கான்னு கேட்டேன். நீங்கவேற நேரங்காலந் தெரியாம விட்டு(நக்கல்) அடிச்சிக்கிட்டு வெறுப்பேத்தாதீங்க!" தலையைச் சொரிந்துகொண்டே அரைப்பாட்டில் பிபி வாங்கிக்கொண்டு நார்கட்டிலில், கிணற்றில் போட்ட கல்லைப்போல் கடுங்கோபத்தில் அமர்ந்ததில் நாராயணனின் ஒரு கால் கயிற்று ஓட்டையில் சிக்கிக்கொண்டது. கட்டிலின் ஒரு கால் உடைந்து கோணிவிட்டது.

"என்னாச்சிண்ணே! ஏன் இவ்வளவு கோவம்? "

மது வாங்கப்போனயிடத்தில் பல்பு வாங்கியதை அவனிடம் மடமடவென ஒப்புவித்து, பிபியை ஆறிப்போன காப்பியைப்போல கடகடவென குடித்து, "காலையில எந்திச்சதும் கரண்டு கம்பியிலருந்த ஒத்த மைனாவப் பாக்கும்போதே நெனச்சேன். இன்னைக்கிப் பூராம் இம்சதான்னு. நா நெனச்சமாரி அப்படியே கரைட்டா நடக்குது!" செல்லப்பா.

சின்னபாப்பா மாதிரி பேசியதை நினைத்து, தம்ளரில் வாய் வைக்க முடியாதளவிற்கு வந்த சிரிப்பினை அடக்கிக்கொண்டு கசகசா மரத்தின் மறைவில் போய் நின்று கக்கபுக்கவென சிரித்துவிட்டு வந்து நாராயணன் பார்க்கையில் தொட்டிலில் உருளும் குழந்தையைப்போல கட்டிலில் காலியான பிபி அரைப்பாட்டில் உருண்டுகொண்டிருந்தது. செல்லப்பா மதுவை முடித்து, புகையைப் பிடித்துக்கொண்டிருந்தார்.

"எண்ணோ! அதுக்குள்ள பாட்ல காலியா? "

"தம்பி இருல! இன்னொரு பிபி வாங்கிட்டு வாரேன். ஆளுக்கு பப்பாதி போடலா"மென்று கட்டிலிலிருந்து எழுந்தவருக்குக் கால்கள் தரையில் தள்ளாடின. கீழே விழப்போனவரை ஓடி வந்து தாங்கிப்பிடித்தான் சந்தீப். "அண்ணாச்சி பாத்து... நீங்க உக்காருங்க நான் வாங்கிட்டு வருகிறேன்" என்று செல்லப்பாவை கட்டிலில் அமர வைத்துவிட்டுத் திரும்பியபோது, "நாராயணா அண்ணாச்சி ரொம்ப நேரம் காக்க வச்சதுக்கு மன்னிச்சிக்கோங்க. நேத்து ஹோலிங்கிறதால பயலுவ பாதிபேரு இன்னைக்கி டூட்டிக்கி வரல. அதான் கொஞ்சம் பிஸியாயிட்டேன். சொல்லுங்க அண்ணாச்சி என்ன வேணும்?" என்றான் சந்தீப்.

"ஒண்ணும் வேண்டாம் டா. அடிச்சி முடிச்சாச்சி. "

"அண்ணாச்சி யாரு? சொந்தக்காரரா?"

"ஆமா, அண்ணந்தான். பம்பாயில இருக்காரு. எங்க கம்பெனிக்கி ஒரு வேலையா வந்தாரு. வேல முடிஞ்சி இப்பும் ஊருக்குப் போறாரு. பஸ் ஏத்திவுடனும். "

"கொஞ்சம் இருங்க " என்று உள்ளே ஓடிப்போய் இரண்டு லிட்டர் தண்ணீர் பாட்டிலை எடுத்து வந்து செல்லப்பாவிடம் கொடுத்து, "அண்ணாச்சி மூஞ்சக் கழுவிட்டு, நல்ல வாய் கொப்பளிச்சிட்டு வாங்க. தெளிஞ்சப் பொறவுப் போலாம்" என்று சொல்லிவிட்டு , " நாராயணா அண்ணாச்சி இத வாயிலப் போட்டுக்கோங்க." சந்தீப் கொடுத்த இரண்டு கொய்யா இலை இனுக்குகளை மென்று தின்றான் நாராயணன்.

சந்தீப் பேசியதைக் கேட்டு அதிர்ச்சியில் உறைந்துபோன செல்லப்பாவை உலுக்கி, "எண்ணோவ் என்ன இப்படி வேத்து விறு விறுத்துப்போயி உக்காந்துருக்க. வாந்தியதும் வருதா? "

"எல தம்பி, நீ சொன்ன சந்தீப் இவந்தானா! " என்றார் செல்லப்பா.

"ஆமாப்பா! என்ன இப்பும்?"

போடுறதத் தின்னுட்டு; கொடுக்குறத வாங்கிட்டு வேலச் செய்யுற இந்த இந்திக்கார பயலுவளாலத்தான் தமிழ் நாட்டுல தமிழனுக்கு வேலச்சோலி இல்லாமப் போச்சி. செரிக்கியுள்ள இவன் என்னன்னா பிசுறுத் தட்டாம அப்படியே நம்ம திருநெல்வேலி பாசைய பேசுறான். என்னாலயே இவன 'இந்திக்காரன்'னு நம்ப முடியலயே. நம்ம பொட்டப்புள்ளைய இவன் பேச்சக் கேட்டுச்சின்னு வை. பேச்சுல மயங்கி தமிழ்க்காரன்னு ஏமாந்துப்போயிரும். மொதல்ல இந்த இந்திக்காரத் தாயொலிகள தமிழ்நாட்டவுட்டே அடிச்சித் தொரத்தனும். அப்படி செய்யலன்னு வச்சிக்கோ! நாளைக்கு நம்மப் புள்ளயள கல்யாணம் முடிச்சிக்கிட்டு, இங்கயே செட்டிலாகி சிங்கம் எது? நாயி எது?ன்னு தெரியாம எல்லாம் ஒண்ணாக் கலந்துபோவும். நமக்கு வேல பறிபோனமாரி நம்ம மானமும் பறிபோயிரும். மானம் போனப்பொறவு ஒன்னு நாண்டுக்கிட்டுச் சாவணும். இல்ல இவனுவள மாரி நாட்டவிட்டு பஞ்சப் பரதேசியா எங்கய்யாவது போவணும். எங்கப் பாத்தாலும் இந்த வெங்கத் தேவடியாப் பயலுவத்தான இருக்காணுவ." சந்தீப் கொடுத்த தண்ணீர் பாட்டிலைத் தூக்கி கசகசா மரத்து மூட்டில் எறிந்துவிட்டு முழுக்கைச் சட்டையை 'தவக்கா'த் (புஜம்)தெரிய மேலே சுருட்டி மீசையை முறுக்கிக்கொண்டு நின்றார். அப்போது செல்லப்பாவின் கண்கள் போதையில் சிவந்ததைவிட கோபத்தில் அதிகம் சிவந்திருந்தது.

"எண்ணே! சொல்றேன்னு தப்பா நெனச்சிக்காத. பதினைஞ்சி வயசுல வேலைத்தேடி பம்பாயிக்கு நீ போகும்போது ஒன்ன 'தமிழ்க்காரன்'னு மஹாராஷ்ட்ராகாரனுவ அடிச்சித் தூரத்திருந்தா! இன்னைக்கி தாராவியில மூணு வீடு, பகத் சிங் நகர்ல ஒரு பெரிய பிளாட்டுன்னு வசதியான இந்த வாழ்க்கை கெடச்சிருக்குமா? டென்மார்க்குல லெச்சம் லெச்சமா சம்பளம் வாங்குற ஒன் பையன அந்த நாட்டுக்காரன் 'இந்தியாக்காரன்' வேண்டாமுன்னு சொல்லியிருந்தா! ஓங் குடும்பம் வருசம் வருசம் ஆடிமாசக் கொடக்கி ஆடி காருல வர முடியுமா?? சிங்கத்தோடு நாயிச் சேந்தா மானம் போயிருமுன்னு மீசைய முறுக்குற நீ, ஒன் பையனுக்கு ஒரு தமிழச்சிய கட்டி வைக்க வேண்டியதுதான.

என்ன ஈரவெங்காயத்துக்கு மராட்டிக்காரிய கட்டி வச்ச? எல்லாம் பணந்தான. இப்பும் சொல்லு! ஒன் பையன் சிங்கம்ன்னா.... ஒன் மருமவ யாரு?" ஐப்பசி மாத அடைமழையைப்போல நாராயணன் விடாது கேட்ட கேள்வியில் நடுநிசியைப்போல் அமைதியானார் செல்லப்பா.

"இவனுவ தமிழ்நாட்டுக்கு வந்தப்போறவு வேல மட்டுமில்ல. வாடகைக்கு வீடு கெடைக்க மாட்டேங்குது; கொல கொள்ள கூடிப்போச்சி; போன மாசம் சென்னையில ஒரு குடும்பத்தையே கைக்காலக் கட்டிப்போட்டு பீரோவுல இருந்த நகையைப் பூராம் எடுத்துட்டுப் போயிட்டானுவ. அதுவும் பட்டப்பகல்! திருப்பூர்ல அப்படித்தான் பனியன் கம்பெனியில வேலப்பாக்குற ஒரு பொட்டப்புள்ளைய ஒருத்தன் காதலிக்கிறேன்னு ஏமாத்தி ரூமுக்குக் கூட்டிட்டுப்போயி, நாலுபேரு சேந்து கற்பழிச்சி, நாயிமாரி கடிச்சிக் கொதறி குப்பக் கெடங்குலத் துள்ளத் துடிக்க போட்டுட்டு ஊரப்பாத்து ஓடிட்டானுவ. போலீசுக்கிட்ட இன்னும் ஆப்படல. நீயென்னன்னா இந்த வெளங்காதப் பயலுவளுக்கு ஏண்டு (ஆதரவாக) பேசுற. பேப்பரடுத்துப் பாரு! தெனக்கியும் இவனுவளப் பத்தி சேதி வராத நாளே கெடையாது." செல்லப்பா நரைத்த மீசையின் முடியொன்றை வாய்க்குள் நாவினால் சுழட்டியிழுத்து கடித்துத் துப்பி நாராயணனை முறைத்தார்.

"எண்ணோ! காடுன்னு இருந்தா முள்ளுச்செடியுமிருக்கும் பூச்செடியுமிருக்கும். மனுசன்னா நல்லவன் கெட்டவன் இருக்கத்தான் செய்வான். அதுக்காக குத்திக் கிழிச்ச முள்ள வெட்டுறன்னு கோவத்துல கொப்புலருக்குற பூவ வெட்டிடக்கூடாது! ஏன்னா பூவுக்குத்தான் காய்க்கணும்; கனியணும்; நம்மளும் ஒரு காடாவணுமிங்கிற கனவுருக்கும். அந்தக் கனவ அழிச்சிறக்கூடாது. அது பெரும் பாவம்! செல்லப்பாண்ணே, நீ சொல்றதெல்லாம் வாஸ்தவந்தான். நா இல்லன்னு சொல்லல. ஆனா, இவனுவள இப்படி பொழப்பில்லாம, படிப்பில்லாம, பகுத்தறிவில்லாம, கஞ்சிக்கி வழியில்லாம, காட்டு மிராண்டியா, குடும்பம் குட்டியளோடு ஊர் ஊரா நாடோடியா அலையவிட்ட அயோக்கியப் பயலுவளுக்கிட்ட ஒன் வீரத்தக்காட்டு. அதவுட்டுட்டு பொழைக்க வந்தவங்கிட்ட ஒன் வீரத்தக் காட்டாத சரியா! ஒன்னமாரி 'தமிழ், தமிழன்'ன்னு பேசுற பூராப் பயலும் பானிப்பூரி, பெட்சீட் விக்குற இந்திக்காரங்கிட்டத்தான் வீராப்பு மயிர காட்டுறீய. பெரிய பெரிய பண முதலைகள் வடக்கயிருந்துக்கிட்டே தெக்க நம்மூர்வரைக்கும் நமக்குத் தெரிஞ்சியும் தெரியாமலயும் நம்மக்கிட்டத் தொழில் பண்ணி கோடி கோடியா சம்பாதிக்கிறான். அவனுவக்கிட்ட இப்படி திமுராப் பேசி, தில்லா நெஞ்ச நிமுத்தி, ஒன் ஊருக்குப் போயி யாவாரம் பாருன்னு சொல்லு பாப்பும்.

ஒங்க சொட்டைய மொறிச்சிருவான் மொறிச்சி! அதிகாரத்துல இருக்குறவன் காலேஜு, கம்பெனி கட்டுன்னா படிச்சி முடிச்சி அவன் ஊர்லயே ஒரு வேலச்சொலியப் பாத்துட்டு அங்கயே கெடப்பான். கோடிக்கணக்குல செலவழிச்சி கோயிலும், செலையும் கட்டுன்னா வாசல் ஒக்காந்து பிச்சத்தான் எடுக்கணும்! வயிறு நெறஞ்சாதான மூளை சிந்திக்கும். காஞ்ச வயித்த வச்சுக்கிட்டு எப்படி அவனால அதிகாரத்துக்கு முன்னால நிமுந்து நிக்க முடியும்? அதான் பொட்டிசட்டியக் கட்டிக்கிட்டு புள்ளக்குட்டியோடு பள்ளத்த கண்ட தண்ணியப்போல வேலத்தேடி தெனமும் லெச்சம் பேரு வந்து ஏறங்கிக்கிட்டே இருக்காணுவ. இதுல நம்ம தமிழ்நாட்டு லெச்சணம் எப்படிருக்குன்னா! ஸ்கூலுக்குப் போறவன் 'கூல் லிப்' போடுறான். காலேஜிக்குப் போறவன் 'கஞ்சா' அடிக்கிறான். அப்பும் எளவட்டப் பயலுவலாம் நல்ல வேலச்செஞ்சி ஒவ்வொருத்தனும் சும்மா 'மிளா'மாரி இருப்பான். இப்புமுள்ள எளவட்டப் பயலுவளப் பாரு. காஞ்சிப்போன சோளத் தட்டமாரி காத்தா... இருக்கான். காரணமென்ன ஒரே குடி குடி குடிதான்!! காலையிலயே குடிக்க வேண்டியது; சீக்கு வந்த கோழியப்போல கொதங்கிப்போயி கெடக்க வேண்டியது. இப்படி தமிழ்நாடு இருந்தா... பின்ன தொழில் பண்றவன், கம்பெனி வச்சிருக்கிறவன் இந்திக்காரனத்தான் வேலக்கிச் சேப்பான். நம்மளயா வெத்தலப் பாக்கு வச்சி அழைப்பான்." நாராயணன் செல்லப்பாவின் பையைத் தூக்கிக்கொண்டு பைக் முன்னாடி வைத்து, "நாட்டு நடப்பு ஒரு எழவும் தெரியாம சிங்கம் நாயின்னுக்கிட்டு... வந்து வண்டியில ஏறுண்ணே" என்றான். பைக்கில் வலது காலைத் தூக்கிபோட செல்லப்பா எத்தனிக்கும் போது, தாபாவுக்கு முன் செல்லும் சர்வீஸ் ரோட்டின் வேகத்தடையை கவனிக்காமல் வேகமாய் வந்த சிறுவனொருவன் சறுக்கி விழுந்து சரீரம் முழுவதும் பயங்கர காயம். தலைக்கவசமணியாததால் தலையில் பலத்த அடி! தாபா மேலாளர் 108க்கு போன் அடித்தார். பத்து நிமிடத்தில் பறந்து வந்த ஆம்புலன்ஸில் குடித்துக் கொண்டிருந்தவர்கள், கூடி நின்று சாலையோரக் கடைகளில் பேசிக் கொண்டிருந்தவர்கள், நடந்து சென்றவர்கள் எல்லாம் ஓடி வந்து சிறுவனைத் தூக்கி, மருத்துவமனைக்கு ஏற்றியனுப்பினார்கள். செல்லப்பாவும் நாராயணனும் கூட உதவி செய்தார்கள்.

சின்னப் பயலுவளுக்கெல்லாம் வண்டி வாங்கிக் கொடுக்கலாமா? எருமமாரி இருக்குற வண்டிய எறும்புமாரி இருக்குற பையன் கன்ரோல் பண்ண முடியுமா! பொடதியில பலமா அடிச்சிருக்கும்போல காதுலயிருந்து ரெத்தம் வந்தமாரி இருந்துச்சி. பொழைக்கிறது கொஞ்சம் கஷ்டந்தான். ஹெல்மட் போட்டுருந்தா தப்பிச்சிருப்பான். எல்லாம் தாய் தகப்பங் கொடுக்குற செல்லம்; பணத்திமிரு."– செல்லப்பா கோபத்தில் பைக்கிலேறி அமர்ந்தார்.

"எண்ணே! ஹெல்மட்டுன்னு நீ சொன்னபொறவு தான் எனக்கு ஞாவமே வருது. எங் ஹெல்மட்ட தாபா கட்டுலுலயே வச்சிட்டு வந்துட்டேன். கொஞ்ச ஏறங்கு, எடுத்துட்டு வாரேன்" என்ற நாராயணனை " நீ இரு. நா போயிட்டு எடுத்துட்டு வாரேன்" - செல்லப்பா இறங்கித் திரும்பவும் தலைக்கவசத்தோடு எதிரில் நின்றான் சந்தீப்.


"சுக்ரியா" என்று சந்தீப் முதுகில் தட்டிக்கொடுத்து அவன் கைகளில் நூறு ரூபாய் நோட்டைத் திணித்தார் செல்லப்பா. "ஒதவிக்கெல்லாம் காசு வாங்கக்கூடாது அண்ணாச்சி" என்று திருநெல்வேலித் தமிழில் கூறி அவர் கொடுத்த ரூபாயை அவரிடமே கொடுத்துவிட்டு, நாராயணனையும் செல்லப்பாவையும் புன்னகையோடு கையசைத்து வழியனுப்பி வைத்தான் சந்தீப்.

சாலை முழுவதும் புகை மண்டலமாய் படிந்திருந்த பனி மூட்டத்திற்குள் மறையும் வரை சந்தீப்பைப் பார்த்து கையசைத்துக் கொண்டேயிருந்தார் செல்லப்பா.



# 'கற்றதை விட இழந்தவைகள் அதிகம்' – முல்லை அமுதன்

-பரிவை சே. குமார்



இரா. மகேந்திரன் என்னும் பெயரைவிட முல்லை அமுதன் என்னும் பெயரே உலகளவில் இவரை நமக்கு அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறது. தேர்ந்த படைப்பாளி, கவிஞர், காற்றுவெளி ஆசிரியர், அனைத்துலக உயிரோடைத்தமிழ் மக்கள் வானொலியில் ஒரு அங்கத்தினர் என பன்முகங்கள் கொண்டவர் அண்ணன் மகேந்திரன் ரத்தினசபாபதி.

இலங்கையில் இருந்து லண்டனுக்குப் புலம் பெயர் வாழும் ஒரு அற்புதமான மனிதர். இவரின் பேட்டியில் புலம் பெய்ர்ந்தவர்களுக்கான வலியையும் வாழ்க்கையும் பற்றிப் பேசியிருக்கிறார். குறிப்பாக அவர் தற்போது வாழும் இடத்தில் பெற்றவற்றையும், பிறந்த மண்ணில் இழந்தவற்றைப் பற்றியும் கூறியிருக்கிறார்.

நித்திய கல்யாணி', 'யுத்தகாண்டம்', 'விமோசனம் நாளை', 'ஆத்மா', 'யாகம்', 'ஸ்நேகம்', 'பட்டங்கள் சுமக்கின்றான்' உள்பட பல நூல்களை எழுதியிருக்கிறார்.

அதேபோல் இவர் எழுதி, வெளிவராமல் தொலைத்த எழுத்துக்களும் ஏராளம். ஈழத்து நூல் கண்காட்சியைத் தொடர்ந்து நடத்துகிறார். அந்தப் புத்தகங்களை எல்லாம் ஒரு இடத்தில் நூலகமாக மாற்றி வைக்க வேண்டும் என்ற கனவும் இவரிடம் இருக்கிறது.

தனது பணிகளுக்கு இடையே நாங்கள் கேட்டதும் மறுக்காமல் பதில் தந்த எழுத்தாளர், காற்றுவெளி ஆசிரியர் அண்ணன் முல்லை அமுதன் அவர்களுக்கு நன்றி.

அவரின் வலிகளையும் வாழ்க்கையையும் வாசிக்க, கேள்விகளோடு பயணமாகுங்கள்.

**தங்களின் இளமைப் பருவம் பற்றி?**

என் இளமைக்காலம் யாழ்ப்பாணம், திருகோணமலை என் தந்தையின் தொழில்துறை சார்ந்து வாழவும்,அங்கு கல்வி பயிலும் சூழலும் இருந்தது. நிரந்தரமாக யாழ்ப்பாணம் (கல்வியங்காடு) வந்து வாழ்ந்தோம். அங்கிருந்துதான் கல்வியும், கலை இலக்கிய வாழ்வும் என்னுடன் பயணித்தது எனலாம். நண்பர்களுடன் உதைபந்தாட்டத்தில் ஆர்வம் இருந்தாலும், நண்பர்களின் கலை இலக்கியச் செயல்பாடுகள் என்னையும் ஆகர்சிக்கவும், நண்பர்களுடனும், இதழாசிரியர்களுடனும் இணைந்து பயணிக்கவும் முடிந்தது. குறிப்பாக சிரித்திரன் ஆசிரியர் அமரர் .சிவஞானசுந்தரம், மேகம் இதழாசிரியர் கணபதி கணேசன் இருவரும் குறிப்பிடத்தக்கவர்களாயினர்.

**இரா. மகேந்திரன் முல்லை அமுதன் ஆனது எப்போது? எதனால்?**

இளமைக்காலம் என்பது சுவாரஸ்யம் நிறைந்ததாக இல்லை. எழுத்தாளனாக, கலைஞனாக வளர பெற்றோர்களுடன் உறவுகளும் அனுமதிக்கவில்லை. ஆதலால் புனைபெயரின் அவசியம் உணரப்பட்டது. இ.மகேந்திரன், இரா.மகேந்திரன் சோபா என ஆகி முல்லை அமுதனாகி இன்று உங்கள் முன் நிற்கிறேன். அதற்குள் வலிகள், ஏமாற்றம் என நிறையவே அடங்கியுள்ளது. இப்போது இயற்பெயரை விட புனைபெயரே நிரந்தரமாகிவிட்டது.

**நித்திய கல்யாணி என்னும் கவிதை நூலே தங்களின் முதல் படைப்பு என்று நினைக்கிறோம், அது குறித்துப் பகிர்ந்து கொள்ளுங்களேன்.**

நாடகம், கவியரங்கம் என என் இலக்கிய முயற்சிகளின் தொடர்ச்சியாக நண்பரும் எழுத்தாளருமான ராதேயனின் நெறிப்படுத்தலில் கவிதைகள் தொகுக்கப்பட்டு சிரித்திரன் காரியாலயத்தின் அச்சகத்தில் (கவின் அச்சகம்- 1981) அச்சிடப்பட்டும் வெளியிடப்பட்டது. நித்யகல்யாணி கவிதை நூல் பலரின் கைகளுக்கும் சென்றடந்ததும், பல நூலாசிரியர்கள் / இதழாசிரியகளுடனான நட்பும் விரிவாக்கம் பெற்றது. அக்காலம் பொற்காலமே.




**கவிதைகள் மட்டும்தான் அதிகம் எழுதுவது போல் தெரிகிறது..? எதனால்? ஏன்?**

நாடகங்களிலிருந்து கவிதைக்கு நகர்ந்து நூலுருவாக்கத்தின் பின்னரும், தொடர்ந்து வந்த இளமைக் காதல், ஈழத்தின் அரசியல் மாற்றங்கள், இனமுரண்பாடு, யுத்தம், இடப்பெயர்வு, துன்பம், நண்பர்களின் பிரிவுகள் இன்னோரன்ன பிறவும் கவிதைகள் மீதான ஆர்வம் அல்லது விருப்பம் / கரிசனை இலகுவாக்கித் தர கவிதைகளும் இலகுவாயிற்று. கூடவே, கவிஞர்களே நண்பர்களாயும் அமைந்தனர்.

**சிறுகதைகள் எழுதியிருக்கிறீர்கள். நாவல்கள் எழுதியதுண்டா..?**

ஆத்மா, யாகம், விமோசனம் நாளை, ஸ்நேகம், பட்டங்கள் சுமக்கின்றான் என்பன நாவல்களாகும். இவ்வருடம் நாவல்கள் வெளியிடப்படவுள்ளன.

**தங்களின் 'யுத்தகாண்டம்', 'விமோசனம் நாளை' போன்ற படைப்புகள் ஈழத்துப் பிரச்சினையைப் பேசிய படைப்புக்களா? அது குறித்துச் சொல்லுங்களேன்.**

ஈழத்தில் வாழ்ந்தவனின், ஈழக் கனவுகளுடன் வாழ்பவனின், சிறைப்பிடிக்கப்பட்டும், காணாமலாக்கப்பட்டும், இன்னும்... இன்னும் அவலங்களையே கண்டும், கேட்டும் நோயாளியாகிப்போன படைப்பாளனின் படைப்புகள் தவிர்க்கமுடியாதபடி அவை பற்றி ஆங்காங்கே பேசியே செல்லும் என்பதே உண்மை.

**தாங்கள் ஈழத்து நூல் கண்காட்சிகளைத் தொடர்ந்து நடத்துகிறீர்கள்... அவற்றை ஆவணமாக்குறீர்கள். இந்த எண்ணம் எப்படி வந்தது?**

அது ஒரு கனவு. எழுத்தளனாக, சக படைப்பாளியை நேசிக்கின்றவனாக, யுத்தம் தின்ற பூமியிலிருந்து வந்தவனின் தீராக் கனவும், அடுத்த தலைமுறைக்கும் நமது படைப்புக்களை எடுத்துச் செல்லும் முயற்சியே அது (ஈழத்து நூல்களின் கண்காட்சி). பலரும் பாராட்டிய செயல்பாடு அது.
இப்போது போல இணைய வசதிகளின் மூலம் அதிகம் பேசப்படவில்லை என்பது வருத்தமே. அப்போது அது பற்றி பேசவும், தாங்களே எல்லாம் என நினைப்பவர்களின் முன்னே எனது செயல்பாடு / கனவு தகர்க்கப்பட்டதுடன் சுதாகரித்துக்கொண்டு மௌனமாகிவிட தீர்மானித்து நிறுத்திக்கொண்டேன். ஈழத்ததமிழர்களுக்கான நூலகமாகியிருக்கும் சூழலின் கனவும் தகர்ந்துபோயிற்று.

**சொந்த மண்ணில் இருந்து புலம்பெயரும் வலியை எப்படி எதிர்கொண்டீர்கள்?**

ஈழத்தமிழர்களின் துன்பம், துயரம், வாழ்விற்காக ஓடும் சூழல், வலிகள் நிறைந்தவர்களுடன் நானும் நகர்ந்தும், ஒடியும், ஒளிந்தும், காட்டிக் கொடுப்பவர்களிடமிருந்தும், சப்பாத்துக்காரர்களிடமிருந்தும் தப்பித்து இன்னொரு முகமறியா தேசத்தில் என்னை நிறுவிக்கொண்டாலும் இன்னும் அகதி எனும் உள்ளுணர்வு. இது என் நாடு இல்லை எனும் உணர்வு / பயமும் கூட...வலிகள் தான்.

**லண்டனின் வசிக்கும் தாங்கள் கற்றதும் பெற்றதும் என்ன?**

கைகளில் எல்லாம் கிடைக்கிறது... சுதந்திரமாக நடமாடவும், நம்பிக்கையுடனும் வாழமுடிகிறது. பிள்ளைகள் சுதந்திரமாக கற்கிறார்கள். உறவுகளின் அன்பையும் எதிர்கொள்ளும் கம்பீரம் இருக்கிறது. ஆனாலும் உள்ளூற அகதி என ஆழ் மனத்தில் இருக்கும் உணர்வும், எப்போதாவது களச்சூழல் மாற்றம் பெறுமாயின் நாம் துரத்தப்படலாம் என நினைக்கையில் நமது நிலம்...? பலவற்றை

கற்றிருக்கிறோம்... மண்ணிலிருந்து எழுதும் எழுத்துக்கும், புலம் பெயர்ந்த பின் மண்ணின் சுகந்தம் மறந்து எழுதுகையில் யாவும் தூரமாய் போன உணர்வே மிஞ்சுகிறது. கற்றதை விட இழந்தவைகள் இங்கு அதிகம் தான். வாழும் மண்ணுடன் ஒத்துப்போகாமலும், ஊரே அந்நியமாகிவிட்ட காலத்தில் புலம்பெயர்ந்து வாழவேண்டியிருக்கிறது.

இலங்கையின் தமிழ் எழுத்தாளர்களின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் என எதைச் சொல்வீர்கள்?
இன்றைய காலத்தில் பலர் எழுத்தாளர்களாகியிருக்கிறார்கள் என்பது மகிழ்வாய் இருக்கிறது. அதிகமாக நூல்களும், இதழ்களும் / பத்திரிகைகளும் அவற்றுக்கு ஈடாக எழுத்தாளர்களும் எழுதிக்கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. அவர்கள் அனுபவித்த துன்பம், கல்வி, காணும் உண்மைகள் / போலிகளின் காட்சிகள் எல்லாம் அவர்களின் எழுத்தில் காண்கிறோம்.

வாசகர்களும் அதிகமாகிய சூழலும் உள்ளதே. எனினும் அப்போதைப் போலவே இப்போதும் கையைச் சுட்டுக்கொள்வதும், பதிப்பாளர்களால் ஏமாற்றப்படும் நிலைமையும் இல்லாமல் இல்லை. இலங்கை, புலம்பெயர் நிலத்தில் வாழும் படைப்பாளர்களின் அனுபவம் ஒன்றே என்பது என பார்வையாகிறது.

**காற்றுவெளி இணைய இதழ் தொடங்கும் எண்ணம் எப்படி வந்தது..? அதன் மூலம் கற்றதும் பெற்றதும் என்ன?**

ஈழத்து நூல் கண்காட்சியினை ஆரம்பித்த போது ஏற்பட்ட அனுபவம் ஒரு இதழின் தேவை என்னுள் விதையிட்டது. நினைத்த போது வெளிவரும் இதழாக வெளிவந்து, பின்னர் இணைய இதழாக மாதாமாதம் வெளிவந்து கொண்டிருப்பதும், நிறைய வாசகர்களைச் சென்றடைந்திருக்கிறது என்பதும் மறுக்கமுடியாதது. படைப்பாளர்களை ,படைப்புக்களை வாசிக்கும் போதும் ஏற்படும் உணர்வு கூட காற்றுவெளியால் பெருமையடைவதைத் தவிர வேறென்ன சொல்லிவிடமுடியும்.

**இன்றைக்கு வெளிவரும் இணைய இதழ்களில் காற்றுவெளிக்கு ஒரு முக்கிய இடமுண்டு. அதைத் தக்க வைத்துக் கொள்ள தாங்கள் எடுக்கும் முயற்சிகள் குறித்துச் சொல்லுங்கள்?**

இன்றைய இதழியலாளர்களின் கனவுகளில் ஒன்று சிற்றிதழ் ஒன்றை தரமாக, பலரிடம் சென்று சேரவேண்டும் என்கிற நினைப்புடன் வெளிக்கொணரும் ஒவ்வொரு இதழையும் நடத்துவது இயலாமல் போய்விடுகிறது. அந்த நினைப்பே இணைய இதழுக்கு மாறிவிட உந்தப்படுகிறான். சிற்றிதழ் நண்பர்களுக்கிடையே பரவலாகும். பலரிடம் சென்றடையும் வாய்ப்பும் அதிகமில்லாது போகலாம். சந்தா, விளம்பரம், அன்பளிப்பு சில சமயம் சங்கடங்களை எதிர்கொள்ள நேரிடலாம். சில சமயம் சுய கௌரவத்தை (பணம் கேட்கையில்) இழக்காத சூழல் இணைய இதழுக்கு இல்லாமலும் போகலாம். காற்றுவெளிக்கும் அனுபவம் உண்டு.. இதழில் படைப்புக்கள் தரமாக வரவேண்டும் என்பதே உள்ளுணர்வாக இருக்கும். இணைய இதழும் விதிவிலக்கல்ல. ஆனாலும் மூலை முடுக்கெல்லம் இதழ் சென்று சேர்வதும் இதழாளனுக்கு கிடைத்த வெற்றி என்பேன். மாறாக ஒவ்வொரு இதழுக்குமாக மேலதிகமாக உடல் உழைப்பை கொடுக்கவேண்டும். காற்றுவெளிக்கு ஒருவரைத்தவிர சந்தா என்பதை இல்லை என்பதும், புலம் பெயர் சூழலில் இலவசங்கள் அதிகமாக இருப்பதால் காற்றுவெளியை அச்சிதழாக்கிவிட முயன்றும் முடியாமல் போக இணையவெளி கைகொடுக்கிறது. யாவும் சவால் தானே.



**தாங்கள் பல கதைகளை வாசிப்பவர் என்பதால் இன்றைய எழுத்து எப்படியிருக்கிறது?**

பலரின் படைப்புக்களை வாசிக்கக் கிடைப்பதில்லை. புலம்பெயர் வாழ்வில் ஓய்வு அதிகமில்லை என்பதும் உண்மையே. ஆனாலும் கிடைக்கும் நூல்கள் அல்லது வாசிப்பிற்கு கிடைக்கும் கதைகள் புதிய அனுபவங்களைச் சொல்லிச் செல்வதை உணர்கிறேன். இப்போது சிறுகதைகளைப் பிரசுரிக்கும் களங்கள் பெருகிவிட்டன. பெரும்

பத்திரிகைகள்கூட அவ்வப்போது தேர்ந்தெடுத்து கதைகளைப் பிரசுரம் செய்வதால் எம்மைப் போன்ற வாசகர்களுக்கும் அவ்வெழுத்துக்களை வாசிக்கும் பாக்கியம் பெற்றவர்களாகி விடுகிறோம். நாம் எழுதத் தொடங்கியபோது வசதிகள் அதிகமில்லை. கையெழுத்துப் பிரதியை அப்படியே அனுப்பிவிடும் காலமே நமக்கு வாய்த்திருந்தது. இப்போது உலகமும் விசாலித்து இருக்கிறது. தரமான பிறமொழிக் கதைகளும் நம்மை வந்தடைகின்றன. விரல்நுனியில் உலகம் என்பது போல வாசிப்புத் தேடலுக்கான தீனியும் கதைகளாக கிடைக்கின்றன. வாசிப்பும் ஒரு பயிற்சிதானே. பல வருடங்களுக்கு முன்னர் கதைகள் பற்றிய எனது கருத்துக்களை கட்டுரையாக்க முயன்றேன். கசப்பான அனுபவங்களைப் பெற்றமையால் அக்கட்டுரை முழுமையாகாமல் மௌனமாக்கப்பட்டுவிட்டது.

**தற்போது எழுதுபவர்களுக்கு தாங்கள் சொல்ல நினைக்கும் அறிவுரை என்னவாக இருக்கும்?**

விரல் நுனியில் உலகம் என்கிறோம். அறிவுரை சொல்ல, கருத்துக்கள் சொல்ல ஒரு அச்சம். பலரின் அடாவடித்தனங்களால் காயப்பட்டவன். மௌனமாக,ஒரு சிறு புன்னைகயுடன் கடந்து செல்லவே பிரியப்படுகிறேன். துணிச்சல் இல்லை என்பது அர்த்தமல்ல.
மேலும், நன்றாக எழுதுகிறார்கள். அவர்களுக்குள் ஒரு தேடல் எப்போதும் இருக்கும். கண்முன்னே நிறைய கற்றுக்கொள்ள வாய்ப்புகள் உள்ளன. அவையே அவர்களை வழி நடத்தும் என்பது இப்போதைய எனது நம்பிக்கை.

**அனைத்துலக உயிரோடைத்தமிழ் மக்கள் வானொலியில் தாங்கள் நடத்தும் இலக்கியப்பூக்கள் குறித்துச் சொல்லுங்களேன்.**

2009இல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் நண்பர்களால் உருவாக்கப்பட்ட அனைத்துலக உயிரோடைத்தமிழ் மக்கள் வானொலியில் கலை இலக்கிய இதழாக இலக்கியப்பூக்கள் நிகழ்வை கொண்டுவந்து தொடர்ச்சியாக நேயர்களுக்காக ஒலிபரப்பி வருகிறோம்.

வாராவாரம் கவிதை, சிறுகதை, உருவக்கதை, குட்டிக்கதை, நூல் அறிமுகம் இலக்கிய ஆய்வு, பாடல் என நிகழ்ச்சி அமைகிறது. படைப்பாளர்களின் குரலிலான படைப்புக்களும் இணைக்கப்படுகின்றன. சிறப்பாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், திலீபனின் நினைவுகளுடன் நமது தேசியத்தலைவரின் அகவை வாழ்த்து சிறப்பு நிகழ்வு, மாவீரர்களின் நினைவு சுமந்த நிகழ்வு என சிறப்பு நிகழ்ச்சிகளும் இலக்கியப்பூக்களில் இணைக்கப்படுகின்றன. இது நமது தேசியக் கடமையாக நினைக்கிறேன்.





**தாங்கள் எழுத நினைத்து எழுதாமல் இருக்கும் படைப்பு எதுவும் இருக்கிறதா? அதை மீண்டும் எழுதும் எண்ணம் உள்ளதா..? அப்படியெனில் அதை எப்போது எதிர்பார்க்கலாம்..?**

கற்பனை, அனுபவங்களைக் கடந்தே வாழ்ப்பழகிக் கொண்டோம். இவற்றுள் காற்றோடு போனவை அதிகம். ஈழப்பிரசினையை மையமாகக் கொண்டு 'இருட்டு மனிதர்கள்' நாவல் அச்சிடப்பட்டு இராணுவ சுற்றிவளைப்பு காரணமாக மூலப்பிரதியுடன் எரிக்கப்பட்டுவிட்டிருந்தது. மல்லிகை ஆசிரியரிடமும், இன்னொரு அச்சகத்திலும் கவிதை நூலுகான, சிறுகதைக் நூலுக்கான கையெழுத்துப் பிரதிகள் கொடுத்தும் வெளிவரவுமில்லை. தொலைத்தும் விட்டிருந்தார்கள். யுத்த கால இடப்பெயர்வில், தட்டச்சு செய்ய கொடுத்த இடத்தில், இப்படியாக பிரதிகள் தொலைந்து போக கரையானும் தன் பங்கை விட்டுவைக்கவில்லை. படைப்பாளனின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாத உறவுகளின் அசண்டையீனமும் முதன்மைக்காரணம். யாவற்றையும் மீளப்பெறவே முடியவில்லை. சிறுகதைகளை தேடிக்கொண்டிருக்கிறேன். என் காலத்தில் வெளிவந்துவிடவேண்டும். இன்னும் ஒரு நாவல் ஒன்றையும் வெளியிட ஆவலாக இருக்கிறேன். காலமும் தேகமும் ஒத்துழைக்குமானால்..?
விண்மீன் இதழுக்கான என் நன்றியுடன்,
முல்லை அமுதன்.

# பால்யகால சகி

செ . இராசாராம்
முகவை




பால்யகால சகி குறுநாவலை வாசித்தபின் ஒரு அருமையான நாவலை வாசித்த திருப்தி கிடைத்தது! அதைவிட முக்கியமான இந்நாவலை வாசிக்கும் அனைவருக்குள்ளும் கடந்தகால நினைவுகள் சிலவற்றைக் கிளறி விடும், கடந்து வந்த வாழ்வின் வசந்தத்தையும் வலியையும் மீட்டெடுக்க உதவும். 1944-ல் முகமது பஷீர் அவர்களால் மலையாளத்தில் எழுதப்பட்ட இந்நாவலை தமிழில் குளச்சல் யூசுப் அவர்கள் மொழி பெயர்த்திருக்கிறார். இத்தனை வருடங்கள் கடந்தபோதும் இன்றும் அதே பால்யத்தையும், சோகத்தையும் தன்னடக்கி பொருத்திப் போகிறது.

நாவலில் மஜீத், ஜொஹரா இருவரும் அண்டை வீடு, ஒரே பள்ளியில் படிக்கும் பால்யகால நண்பர்கள் என்றாலும் வீட்டின் அருகே உள்ள மாமரத்தில் இருந்து விழும் மாம்பழத்தை எடுக்கும் போட்டி அவர்களுக்குள் அடிக்கடி நடக்கும், இதில் பெரும்பாலும் மஜீத்தே ஜெயிப்பதால் அந்த வயதுக்கே உரிய போட்டியால் இருவரும் எலியும், பூனையுமாக கீறிக்கொள்கிறார்கள்.

இவர்கள் இருவரைத் தவிர வேறு நட்புக்கள் இல்லாததால் காலப்போக்கில் இருவரும் சிநேகிதர்களாகிப் போகின்றனர். மஜீத் வசதியான வீட்டுப் பையன், ஜொஹராவோ எளிய குடும்பப் பின்னணியில் வளர்ந்து வருபவள். படிப்பில் மஜீத்தை விட ஜொஹரா படு கெட்டிக்காரி.

ஒருமுறை பள்ளியில் மஜீத்திடம் 'ஒன்னும் ஒன்னும் எத்தனை?' என்ற கேள்வியை எழுப்புகிறார் கணித ஆசிரியர், மஜீத்தோ 'பெரிய ஒன்னு...!' எனப் பதிலளிக்க, வகுப்பே சிரிக்கிறது, அதுவே அவனுக்கு பட்டப் பெயராகவும் ஆகிப் போகிறது.

கனக்குப் பாடம் புரியாமல், அடிக்கடி வகுப்பில் ஆசிரியரிடம் அடி வாங்குகிறான். இப்படியாக நாட்கள் நகர்கையில் ஜொஹரா, மஜீத்திற்கு கணக்குப் பாடங்களை சொல்லிக் கொடுக்க ஆரம்பிக்கிறாள். அவனும் வகுப்பில் ஆசிரியரிடம் பாராட்டுப் பெற ஆரம்பிக்கிறான். இந்த சூழலில் ஜொஹராவின் தந்தை எதிர்பாராத விதமாக மரணிக்கிறார். இதனால் அவளது குடும்ப சூழலே மாறிப்போகிறது. வாழ்க்கையை நகர்த்த மிகவும் சிரமப்படுகின்றனர்.

இந்நிலையில் பள்ளிப் படிப்பு முடிந்து உயர் கல்விக்காக வெளியூர் செல்லும் நிலை வரும்போது, மஜீதின் தந்தை அவனை வெளியூரில் சேர்த்து விடுகிறார். ஆனால், ஜொஹராவின் வறுமையின் காரணமாக மேல் படிப்பு படிக்கும் வாய்ப்பு அவளுக்குக் கிடைக்காமல் போகிறது. மஜீத் தன் தந்தையிடம் ஜொஹராவிற்கும் நாம் உதவி செய்து மேற்படிப்பு படிக்க வைக்கலாமே என்று தன் தாயின் மூலம் கேட்க வைக்கிறான். கோபக்காரரான மஜீதின் தந்தை, சம்மதிக்காமல் அவனையும், தாயையும் திட்டுகிறார். உதவிட ஏதேதோ காரணங்கள் சொல்லி மறுத்து விடுகிறார்.

நாட்கள் நகர்கிறது, மஜீத்தும், ஜொஹராவும் வளர்ந்து பருவ வயதை அடைகின்றனர். மஜீத்திற்கு காலில் சிறிய கட்டி போல வந்து வலியால் துடித்து நடக்க முடியாமல் வீட்டில் இருக்கிறான். அவ்வப்போது ஜொஹராவும் வந்து பார்த்து செல்கிறாள். கட்டி தானாக உடைந்தால் மட்டுமே வலி குறையும், என்று வைத்தியர் சொல்கிறார். வீட்டில் கட்டிலில் படுத்துக் கொண்டு சன்னல் வழி ஜொஹராவின் வீட்டையும், அந்த மாமரத்தையும் பார்த்தபடியே வலியுடன் நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கிறான் மஜீத்.

மஜீதின் அப்பா, அம்மா வீட்டில் இல்லாத நேரத்தில் ஏதேச்சையாய் அவனைப் பார்க்க வரும் ஜொஹரா, அவன் வலியால் துடிப்பதைப் பார்த்து, அன்போடு அணைத்து அவனின் கால்களில் முத்தமிடுகிறாள். முதல் முறையாக ஒரு பெண்ணின் ஸ்பரிசம் அவனுக்குள் புதிய உணர்வைத் தருகிறது. அடுத்த நாள் அந்த கட்டி உடைந்து வலியும் வேதனையும் குறைகிறது. அந்த நாள் அவர்களின் நட்பை மெல்லக் காதலின் பக்கம் நகர்த்துகிறது. அதன் பின் மஜீத்தும், ஜொஹராவும் ஒருவரை ஒருவர் நேசிக்க ஆரம்பிக்கின்றனர்,

ஒரு சமயம் நோன்பு நேரம், பெரும்பாலும் மஜீத் நோன்பு இருப்பதில்லை. இதை வீட்டிலும் பெரிதாய் எடுத்துக் கொள்வதில்லை. ஊரில் அறுவடை காலம் என்பதால் வயல் வேலைகளில் நேரத்தைச் செலவிடும் அவனின் தந்தை, 'நீ வந்ததிற்கு பிறகு நான் நோன்பு திறக்க போக வேண்டும்' என அவனைச் சாயங்காலம் வயலுக்கு வர சொல்லியிருப்பார். ஆனால்! அவனோ அதை மறந்து நண்பர்களுடன் விளையாடி விட்டு வீடு திரும்ப, மாலை நோன்பு திறக்க வரமுடியாத தந்தை அவனைக் கோபத்தில் திட்டியும் அடித்தும் விடுகிறார். அந்தக் கோபத்தினால் அவன் வீட்டை விட்டே வெளியேறி கால் போன போக்கில் வெகுதூரம் செல்கிறான். போவதற்கு முன்பாக ஜொஹராவிடம் சொல்லிவிட்டு போகலாம் என்று நினைத்தவன், பிறகு மனதை மாற்றிக் கொண்டு சொல்லாமலே சென்று விடுகிறான்.

சென்றவன் வீட்டிற்கு கடிதம் மூலமாகவோ அல்லது வேறு எதன் மூலமாகவோ தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை. ஒரு இடத்தில் நிலையாக இல்லாமல் ஊரெல்லாம் சுற்றி, பல்வேறு மக்களையும், மதத்தினரையும் சந்திக்கிறான். மனிதர்களில் உடையும், மொழியும் மட்டும்தான் வித்தியாசம். மற்றபடி ஜனனம், இனப் பெருக்கம், மரணம் என எங்கும் ஒரே மாதிரியான வாழ்க்கைதான் என்பதை அவன் கண்டுணரும்போது, பத்து வருடங்கள் கடந்து விடுகின்றன.

அதன்பின் ஊருக்குத் திரும்பும் எண்ணம் தோன்றுகிறது. குறிப்பாக ஜொஹராவைத் திருமணம் முடிக்க வேண்டும் என்ற சிந்தையோடுதான் அவன் வருகிறான். ஆனால் ஊரிலோ இவன் எதிர்பாராததெல்லாம் நடந்து இருக்கிறது. வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டத்தில் அவனது குடும்பமே வறுமையில் வாடுவதையும், தங்கைகள் இருவரும் வயது கடந்தும் திருமணம் ஆகாமலும் இருப்பதையும் கண்டு மனம் நொந்து போகிறான்; அதே நேரம் ஜொஹராவிற்கு திருமணம் முடிந்து அவள் கணவன் வீட்டிற்குச் சென்று விட்டதை அறிந்து வருந்துகிறான்.

இத்தனை ஆண்டுகள் கழித்து வந்திருக்கும் மஜீதால் அந்தக் குடும்பம் வறுமையில் இருந்து மீண்டெழும் என்று ஊரில் உள்ளோர் நினைக்கிறார்கள். ஆனால் அவனோ எல்லாமும் இழந்து சில புத்தகங்களும், பத்து ரூபாயும் மட்டும் சொத்தாகக் கொண்டு வந்திருக்கிறான் என்பது தெரிய வர, அவன் காதுபடவே இவனெல்லாம் எதற்கு இங்கே வந்தான் என்று பேச ஆரம்பிக்கிறார்கள். வீட்டிலும் சாப்பாட்டிற்கே கஷ்டமான சூழல், இந்த நிலையில் தங்கைகளின் கல்யாணத்தை எப்படி நடத்த முடியும் என யோசிக்கிறான். அவனின் தாய் மட்டுமே அவன் நிலை கண்டு வருந்துகிறாள்.

மஜீது வந்த தகவல் ஜொஹராவிற்கு தெரிந்து அவனைக் காண வருகிறாள். இந்த சூழலை வாசிக்கும்போதே கண்கள் கலங்கித்தான் போகிறது. இப்படியொரு காட்சியைத் திரையில் காணும் ஆவலையும் இந்நாவல் தந்து விடுகிறது. ஜொஹராவை பார்க்காமல் திரும்பிப் பேசிக் கொண்டிருப்பவன் அவளைப் பார்த்த பின்... அவளின் கோலம் கண்டு உடைந்து போகிறான். ஆம்...

உடலெல்லாம் மெலிந்து, கழுத்து எலும்புகள் தெரிய பார்க்கவே பரிதாபமாக இருக்கிறாள்.

ஜொஹரா, தன் கணவர், அவரின் கோபம், அவரிடம் வாங்கும் அடிகள், அதனால் உடம்பில் ஏற்பட்ட ரணங்கள், உடைந்த பல் என அவளது வாழ்க்கையைப் பற்றி சொல்லச் சொல்ல... இந்த வாழ்க்கைதான் எவ்வளவு கொடுமையானது என்று மஜீத்தைப் போல வாசிக்கும் நமக்கும் நெஞ்சம் கனத்துத்தான் போகிறது.

வரதட்சனை கொடுமையால், ஜொஹரா தன் பிறந்த வீட்டில் நிரந்தரமாகத் தங்கி விடுகிறாள். ஆதனால் அவளுக்கு மஜீதை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. இதை அக்கம்பக்கத்தினர் வேறு விதமாக பேசுகின்றனர். இருந்தாலும், ஜொஹரா அதற்காக கவலைபடுவதாக இல்லை. போகிற போக்கில் இந்த சமூகம் வைத்திருக்கும் சம்பிரதாயங்களை எழுத்தாளர் ஒரு விளாசு விளாசுகிறார்.

மஜீத், வறுமையிலும் தனக்கு இருக்கும் கடமைகளை எப்படியாவது நிறைவேற்ற எண்ணுகிறான். தன் சகோதரிகளுக்கு கல்யாணம், வீட்டின் மீதான கடன், அதனைத் தொடந்து ஜொஹராவை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றல்லாம் நினைக்கிறான். இதற்கு பணம் அவசியம் என்பதால் மீண்டும் வெளியூருக்குச் செல்கிறான்.

இந்த முறை புறப்படும் முன் ஜொஹராவிடம் தன் வீட்டு பொறுப்புகளை ஒப்படைத்து விட்டுச் செல்கிறான். அவன் கிளம்பும்போது ஜொஹரா ஏதோ சொல்ல வருவாள், ஆனால் அதற்குள் வண்டி வந்து விட்டதென அவனின் அம்மா குரல் கொடுக்க, அவள் சொல்ல வந்ததைக் கேட்காமலேயே போய் விடுகிறான்.

தன் இருப்பிடத்திலிருந்து வெகுதூரம் செல்கிறான். அலைந்து திரிந்து நல்ல வருமானம் உள்ள ஒரு வேலையில் சேர்கிறான். கஷ்டப்படுபவர்களில் ஒருசிலரைத் தவிர எல்லோரையும் விதி அரியாசனத்தில் ஏற்றி அழகு பார்ப்பதில்லை. இந்நாவலிலும் மஜீத்துக்கு எதிர்பாராத விபத்து ஏற்பட்டு அதில் ஒரு காலை இழக்கிறான், மயக்கம் தெளிந்து அவன் பார்க்கும்போது எந்த காலில் ஜொஹரா முத்தமிட்டாளோ அந்தக் கால் இனி இல்லை என்ற இடத்தில் நம் மனதிற்கு 'யோவ் நீ எழுத்தாளன் எனும் படைப்பாளிதானே மஜீதை இவ்வளவு கஷ்டப்படுத்துவதில் உன் எழுத்துக்கு அப்படி என்ன ஆனந்தம்..?' என்ற கோபம்தான் மேலோங்கி நின்றது.

அறுபது நாட்கள் மருத்துவமனை வாசம் முடிந்து ஊன்றுகோலுடன் வேலைக்குச் சென்றால் வேலையும் பறி போகிறது. இதனைத் தொடர்ந்து அலைந்து திரிந்ததில் ஓட்டலில் அமர்ந்து பாத்திரங்கள் கழுவும் வேலை கிடைக்கிறது. இதற்கிடையில் வீட்டிலிருந்து வந்த கடிதங்கள் மூலம் சில விவரங்களை தெரிந்து கொள்கிறான்.

அவனுக்கு ஜொஹராவை பார்க்க வேண்டும் என்ற ஆவல் எழுகிறது. இந்த ஒற்றைக் காலுடன் ஊருக்குப் போனால் என்னாகும் என்பதும், ஊர் என்ன சொல்லும் என்ற சிந்தனையும் அவனை வாட்டுகிறது. ஒரு மனிதனை இப்படியெல்லாம் சோதிக்கக் கூடாது என்று வாசகனை யோசிக்க வைக்கும் தருணங்களை ஆங்காங்கே எழுத்தாளர் தந்து கலங்க வைக்கிறார்.

அவன் ஊருக்குப் போனானா..?

தங்கைகளுக்குத் திருமணம் செய்தானா..?

ஜொஹராவைத் திருமணம் செய்து கொண்டானா..?

அவனின் வாழ்வு என்ன ஆனது..?

அவனின் சொல்ல நினைத்ததை அவள் சொன்னாளா..?

என்பதையெல்லாம் இந்த நாவலை வாசிக்கும் போது நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

இந்த குறுநாவலை வாசிக்க வாசிக்க கண்கள் குளமாகின. ஒரு எழுத்து அதன் தாக்கத்தை வாசகனுக்கு கடத்த வேண்டும். அதை இந்நாவலின் ஆசிரியர் மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார்.

அருமையான நாவல்... அதைவிட அனைவரும் வாசிக்க வேண்டிய மிக முக்கியமான நாவலும்கூட....!


குறிப்பாக அக்கால கட்டத்தில் கேரளாவில் எந்த இடத்திலும் மாமரம் இல்லை. நாவலில் மாமரத்தை வைத்துக் கற்பனையாக எழுதியிருக்கிறாரா என்றால் அதுவும் இல்லை. எழுத்தாளரின் வீட்டில் மட்டும் அத்திபூத்தாற்போல் ஒரு மாமரம் இருந்துள்ளது. அந்த மரத்தின் கீழே இருந்துதான் இந்நாவலை எழுதியுள்ளார். அந்த மாமரம் நாவலிலும் வந்துள்ளது.

இவ்வளவு காலம் ஏன் இந்நாவலை வாசிக்காமல் இருந்தேன்..? என்ற எண்ணத்தை எனக்குள் விதைத்த நாவல் இது. இந்நாவலை கனத்த இதயத்துடன் நிறைந்த கண்ணீருடன் வாசித்து முடித்தேன்.

பால்யகால சகியை வாசியுங்கள். வாழ்வின் வசந்தத்தையும் வலியையும் ஒரு சேர உணர்வீர்கள்.

# கொட்டு சத்தம்

சுந்தர் சுப்ரமணியன்



சித்திரை மாச வெயில் உச்சந்தலைக்கு ஏறுமுன்னே, மகள் மாடத்தியும் பேரன் பிரபுவும் தூரத்தில் வருவதைப் பார்த்து பழுப்பேறிய வேட்டியை தொடை தெரியா மடிச்சிக் கட்டிக்கிட்டே ஆறடி மொழுக்கன் ஓட்டமும், நடையுமாக வீட்டு முத்தத்து அகத்தி மார் கம்பு கதவ தூக்கித் தள்ளிய படி, “ஏவ தாய், வந்துட்டாவ” என்று, கத்தியவாறு கூனை'யில் அடச்சி வச்சிருந்த கோழி கொக்கரிக்க கழுத்தை திருவினான் மாடத்தியின் அப்பன் கறுப்பசாமி.

வீட்டு தார்சா திண்ணையில சுண்ணாம்பு தடவிய வெற்றிலைகளை வெள்ளாடு அசை போடுவது போல மென்று கொண்டிருந்தாள் நரை ஏறிய கிழவி, கறுப்பன் பொண்டாட்டி சக்கரம்மாள்.

கறுப்பனோட கதறல் கேட்டு பதறிப்போய் எழுந்தாள் சக்கர. முந்திச் சேலையை உதறி இடுப்புல சொருகி திணித்தாள். சுண்ணாம்பு கரையேறிய விரலால், வெத்தல எச்சிய புளிச்சென்று துப்பி வாயை துடைத்து கொண்டே முத்தத்தை கடந்து தெருவில், “ஏ ஆத்தே, உச்சி வெயில்லலா புள்ளைக வருது” என்று அமயம் போட்ட படி முயலைக் கண்ட வேட்டை நாய் போல ஓடினாள்.

கறுப்பன் கையில் கழுத்து உடைந்த கோழி கண்கள் சொருக இறக்கைகள் பட பட்த்து அடங்கியது. முடிகளைப் பிடுங்கி போட்டு பனை ஓலை தீயில் வாட்டி எடுத்து, மஞ்சள் தடவி கருவ கட்டையில் வைத்து சின்ன சின்ன துண்டா தறிச்சான்.

வாயில எச்சில் ஒழுக கால நீட்டியபடி கோழி குடலுக்காக கெடையாக் கெடந்தது கறுப்பன் வீட்டு வேட்டை நாய் செவலை.

ஊர் எல்லை வெட்டயில், ஒத்த பனை தூரில் பேச்சியம்மன் பூடம் வடக்கே பார்த்தபடி காவல் தெய்வமாக இருக்க மூச்சிவாங்கிய படி வந்து, பேச்சியம்மனை கும்பிட்டு நின்றாள் சக்கர.

சித்திரை மாதம் பேக்கோயில் கொடை கொட்டு சத்தம் ஊர் மேற்கிலிருந்து கிழக்கே வரைக்கும் காற்று வாக்கில் வந்து வந்து உசிப்பிக் கொண்டிருந்தது சக்கரய.

பனை மரத்து காஞ்ச ஓலைகளின் உரசல் சத்தம் சர சர வென மெல்ல கேட்க, தூரத்தில் மாடத்தி, பிரபு இருவரும் கானல் நீரில் மிதந்து நகர்ந்து வர, ஒத்தையடி பாதையில மணல் தெறிக்க நாலுகால் பாய்ச்சலில் ஓடிய தெண்டலை துரத்தி பேன்டு, சட்டை, ஷூகள் அணிந்து, வெண்கல நிறத்து சந்தன கிண்ணம் போல சிறுவன் பிரபு நெஞ்சிக் குழி பெருக வேர்த்து ஓடினான்.

கொரண்டி செடிகள் வெள்ளை நிறத்து பூக்கள் மனம் மளுங்கி கூன் விழுந்து வாட தொடங்கியது. பொட்ட காடு முழுவதும் ஆங்காங்கே இலந்தை மூடுகள் காய்களும், கனிகளையும் உதிர்த்தியிருந்தது.

நீர்கருவை மரங்களும் அடர்ந்து பூத்திருந்தன. கள்ளி செடியில் பழுத்த பழங்களை பறிக்க ஆளின்றி காத்து நிற்க சின்னஞ் சிறிய கல் வெட்டாங் குழிகள் நீரின்றி வானம் பார்த்து ஏங்கிக் கிடந்தன.

அலங்கரித்த சங்கரங்கோயில் சப்பரம் வருவது போல மாடத்தி, முத்துக்கள் நிறைந்த கொலுசுகளின் ஒலியும் சேர்ந்து, கால் செருப்புகள் சர சரப்பு சத்ததுடன் மூச்சிறைக்க நடந்து வந்தாள்.



“வேகமா  ஓடாத பிரபு, கீழ கிழ விழுந்தர போற. அந்த, ஓந்தாண எதுக்குடா? துரத்துர நில்லுடா ”என்றாள் மாடத்தி.

பிரபு ஓடி நிற்கிறான்.

அம்மாவை திரும்பி பார்த்து “பாட்டி வீடு எப்ப? மம்மி வரும் தண்ணி தாகமா  இருக்கு மம்மி” என்றான், மூச்சு வாங்கிய படி.

“இன்னும், கொஞ்ச தூரம் தான்டா அந்தா ஒத்தப்பனை கிட்ட  வீடுகளா தெரியிதா அது கிட்ட தான் சக்கர பாட்டி வீடு” என்று, கையை நீட்டிக் காட்டினாள் மாடத்தி முகம் மலர்ந்து.

பிடுங்கிய கோழி முடிகள் பறக்க, எருக்குழியில் வீசிவிட்டு பூவரச மர மூட்டுல கோழி குடலை செவலைக்கு திங்க வைச்சிட்டு, “செவல வா தின்னு ” என்றான் கறுப்பன்.

கோழி குடலை லாவகமாக் கவ்வி ஒதுங்கி, ருசிக்க தொடங்கியது செவல.

ஒத்தப்பனை பேச்சி கோயில் வெட்டைக்கு தலையில் தலப்பா கட்டிய படி  நாலே எட்டுல வந்து நின்ற கறுப்பனை.

“ஏ... அய்யா  சாமி, நல்லாருப்ப  பிள்ளைக தவிச்சு வருதுக கொஞ்சம் கூட்டியாந்துருய்யா” என்று கறுப்பனை பார்த்து கெஞ்சி கேட்டாள் சக்கர.

“நீ எதுக்கு ? கன்னில பட்ட முசலு கனக்க கெடந்து துடிக்க ” என்று சக்கரயை அமட்டிய கறுப்பன்.

“தாயும் பேரனும் தான் வராக போல மருமகேன் லெக்குயில்லயே ”நெற்றி மேல் கைமறைத்து கண்கள் சுருக்கி பார்த்து கொண்டே கறுப்பன்.

“சரி நா கூட்டியாரன் நீ போயி? மொதல்ல கோழிய கொழம்பு வைக்க பாரு புள்ளைக ஈசலா பசியோட வரும்” சக்கரையிடம் பதில் அளித்த படியே, ஒத்தையடி பாதையில் நொட்டாங்கையில பீடி பற்ற வைத்து புகைத்துக் கொண்டே வெக்கைக்கி இளகிய எள்ளு புண்ணாக்கு போல மினுமினுத்து நடந்தான் கறுப்பன்.

சக்கர பேச்சம்மா ஆடும் சாமி கொண்டாடி பேச் கோயில் கொட முடியிற வரைக்கும் ஊர் எல்லைய தாண்ட மாட்டா



மசாலா கூட்டி குழம்பு வைக்கத் தயாரானாள். கொட்டு சத்தம் கேட்டு குழம்பு சட்டியில கோழிக்கறி குதியாட்டம் போட்டது  குழம்பு வாசனைக்கு வீட்டு முத்ததில் வாலாட்டி சிணுங்கிக் கொண்டிருந்தான் செவல.

“கறுப்பதாத்தா” என்று ஓடி வந்து, கறுப்பனின் கால்களை கட்டி அணைத்துக் கொண்டான் பிரபு.

மீசை, தாடி மயிர்கள் குத்த பேரன் சினுங்க“ ஏலே, பேரான்டி  எப்டிலேயிருக்க?” கொஞ்சி தீர்த்தான் கறுப்பன்.

“சேய், ஒரே  பீடி நாத்தம்?”என்று  விலகிப் போனான் பிரபு.

“சொங்கிப் பயல, சோறு திங்கியாயில்லயா” பேரனின் குஞ்சானை கையால் தடவி முத்தமிட்டான் கறுப்பன்.

பிரபு வெட்கப்பட்டு  சிரிக்க, மாடத்தியும்  கண்கள் சுருங்கச் சிரித்தாள்.

“தாயோ நீ எப்டிலயிருக்க? ஏங் இப்படி, வத்தலா.. பேயிட்ட” மகள் மாடத்தியை பார்த்து, கண்கள் கலங்கி போனான் கறுப்பன்.

“ஓம் மருமவேன், ஒழுங்கா சோறு கீறு போட்டாதான?” சேலை முந்தி பொத்தி புன்னகைத்தாள் மாடத்தி கறுப்பனை பார்த்து.

“எட்டூர், தேட்னாலும் எம் மருமகேன் மாதிரி ஆளு கிடைக்குமா? தாயி” என்று மருமகன் பெருமை பேசிய படியே பேரன் பிரபு கைகள் இரண்டையும் பிடித்து சுற்ற, அந்தரத்தில் காற்றில் மிதந்த பிரபு'வை தூக்கி தோளில் அமர வைத்து சிரித்தான் கறுப்பன்.

“ஹா...ஹா” பொட்ட காடே அதிர்ந்தது.

“பயமாருக்கு தாத்தா, இறக்கி விடுங்க” பிரபு பயந்து அலறினான்.

“ஏப்போ, பாத்துப்போ ” என்று, பதறினாள் மாடத்தி.



“பயந்தோனி பயல... தாத்தாவ சிக்குன, புடிச்சுக்கால. தாயோ மருமகேன் நல்லயிருக்கரா? வருவாகளா... இல்ல லீவு கீவு கிடைக்கலையா என, சித்தாறு பெரிய மடை திறந்தது போல பேசி நடந்தான் கறுப்பன்.

“இல்லப்போ நாளைக்கி மத்தியான பஸ்க்கு வந்துருவாருன்னு நெனக்கேன்” என்று, யோசித்தப்படி மாடத்தி சொன்னாள்.

“சரி சரி வரட்டும் பைய வரட்டும். எலே? பிரபு கோழி கறி திம்பியா" கறுப்பன் கேள்விக்கு “ம்கும்... ” என்று தலையை அசைத்தான் பிரபு.

“நீ ஏம்போ ? இப்படி கட்டையா திரியிர, இன்னும் குடிய விடல என்ன?" கறுப்பன் முதுகில் பூ நார் அளவில் வடிந்த வேர்வையை துடைத்த படியே “சாராய வீச்சதான் செரசுல ஏறுதே” கோபம் ஏற கேட்ட மாடத்தியின் குரலுக்கு. பொந்துல பதிங்கிய வெள்ளெலி போல மூச்சேயில்லை கறுப்பனிடம்.

“அம்ம நல்லாயிருக்காளா?” என்ற, மாடத்தியின் குரலுக்கு தலை நிமிராமல் பதில் அளித்து நடந்த, கறுப்பனின் தோள் மீது பிரபு அம்பாரமாய் உட்கார்ந்து. ஒத்தப்பனை பேச்சி கோயிலை வந்தடைந்தார்கள்.

குறைத்துக் கொண்டே சீறி வந்தது செவல.

“ச்சேய்யி, என்ன?” சர்க்கர, அதட்டலுக்கு சினுங்கியது செவல. மாடத்தி, பிரபு இருவரையும் முகர்ந்து பார்த்து சுற்றி வந்து வாலாட்டினான்.

ஒத்த பனை மீது சர சர என ஏறி நின்ற ஓந்தாண் தலையை ஆட்டி பனையின் பின்புறம் ஒளிந்து கொண்டது.

யானை மீதிருந்து, பாகன் இறங்குவது போல கறுப்பன் தோள்மீதிருந்து, பிரபு இறங்கி நின்றான்.

பேச்சி கோயில் முன்பு விழுந்து கும்பிட்டார்கள், மாடத்தியை பார்த்த ஆனந்தத்தில் கை பிடித்து கண்கள் கலங்கி, “வா தாயி, நல்லயிருக்கியாம மருமகென், நல்லாயிருக்காரா?” என்று மாடத்தியின் கன்னம் தடவி முத்தமிட்டாள் சக்கர.

“எம்ம ” என்று மாடத்தியும் குரல் தழு தழுக்க, “எனக்கென்னம... நீ எப்டியிமேருக்க?” என்றாள்.

பேரன் பிரபுவை வாரியணைத்த சக்கர, “ஏய்யா சாமி, ஏந் தங்கம் ” வெத்தளையில் சிவந்த எச்சி பதிய முத்தமிட்டு கொஞ்சிபடியே நால்வரும் வீடு சென்றார்கள், வால் ஆட்டிக் கொண்டே பின் தொடர்ந்தது செவல.

மாராப்பு சேல நனைய, மடக் மடக்னு தண்ணி குடிச்சி சேலை முந்தியில வாய் துடைத்துக் கொண்டே, “இன்னும் குடிக்கதுக்கு, ஊர் கிணத்து சப்ப தண்ணி தானா ” என்றாள் சலிப்புடன் மாடத்தி.

“தண்ணி நல்லவே இல்ல பாட்டி” என்று குடித்த தண்ணிரை ஓங்கரித்து துப்பினான் பிரபு.

“இன்னிக்கி ஒரு பொழுது மட்டும் குடிய்யா தொண்ட வரன்றபோது... தாத்தாவ கண்ணாடிகுளம் ஊர்லயிருந்து ஆத்து தண்ணிய புடிச்சிசார சொல்லுதேன் சரியா?” என்று கெஞ்சி, பேரன் பிரபுவை தண்ணி குடிக்க வைச்சா சக்கர.

“தாயி, சாப்டும காலேயில ஊர் சோறுக்கு போனே இட்லி, தோச போட்டாக. அஞ்சாறு கொண்டு வாரேன், ரெண்டு பேரும் சாப்டுங்க, பிரபு ஒரு வா சாப்டுப்போ ” என்று அடுப்படி நுழைந்தாள் சர்க்கர.

கோழி குழம்பு மணம் பத்து வீட்டுக்கு வீசியது.

சொளவு முழுவதும் இட்லிகளும், தோசைகளும் குவிந்து கிடந்தன. பிரபுவுக்கு குழம்பில்லாமல் ஊர் இட்லியில் ஒரு வாய் ஊட்டி, மாடத்தியும் நாலு வாய் அள்ளித் தின்றாள்.



நாட்டுக் கோழி கொழம்பை ருசித்த படி, “கொழம்பு, நீ வச்சியோம”

“ஆமா தாயோ” என்று கறுப்பன் முத்தத்து அகத்தி கம்பு வேலிக்கு அந்தப்புரமிருந்து. மாடத்திக்கு பதிலளித்தான்.

“எப்போ எப்போய் ஈரல எடுத்தாப்போ எம்புட்டு நேரம்?” கருவமர நிழல்ல, செத்த மாட்ட உரிச்சிட்டிருந்த மூக்காண்டி'யிடம் ஈரல் கேட்டு நச்சரித்தான் மகன் முனியசாமி, மாடு தூக்கும் கம்புகள் மீதமர்ந்து கால் ஆட்டியபடி.

“தாயோலி, உனக்கு குண்டி கொழுப்பு கூடிப்போச்சி? உன்னையெல்லாம் கொட்டுவாரு பிய்ய பிய்ய உரிக்கனுல எந்திரிச்சி போயிரு; முட்டெலும்ப தூக்கிட்டு எரிஞ்சிருவேன்”என பாய்ந்தான் கருமர கவட்டைக் கிளையில் காய்ந்து தொங்கிய முட்டெலும்புகளை நோக்கி கோபத்திலிருந்த மூக்காண்டி.

சவ்வுக்காக தவம் கிடந்த தெரு நாய்களும், முனியப்பனும் தெறித்து ஓடினார்கள்.

“எதுக்கு? புடுக்கு அறுத்த பன்னிகணக்க கத்துர ”எக்காளமாய் சிரித்துக் கொண்டிருந்தாள் மனைவி மயிலம்மா.

“பல்லு, மயித்த காட்டாம கால வெரப்பா இழுத்துப் புடி, முண்ட” மாடு உரிக்க ஒத்தாசைக்கு இருந்த மனைவி மயிலம்மாவிடம் எரிந்து விழுந்தான், கடவாயில் பீடியைக்கடித்துப் புகைத்துக் கொண்டே மாட்டுத் தோலில் கொம்பு பிடி போட்ட சூரி கத்தியை நுழைத்து உரித்தான் மூக்காண்டி.

பாட்டி வீட்டு, முத்ததில் பிரபு கூனையில ஏறி சறுக்கி விளையாடிக் கொண்டிருக்க.

“ஆரம்பிச்சிட்டியா உஞ் சேட்டைய கீழ விழுந்திராதல” மாடத்தி திண்ணையில் அமர்ந்தவாறு சத்தமிட்டாள்.

“பெரியம்மா ”என்று சக்கரய கூப்பிட்டுக் கொண்டே, வேகமா வந்தான் முனியசாமி. சுருண்டு உறங்கிக் கொண்டிருந்த செவல ஏறிட்டுப் பார்த்து, ஒரு முறை குறைத்து உறங்கியது.

“எக்கோ நீ எப்ப வந்த?” காக்கி டவுசர் கிழிசல் வழியே குண்டி தெரிய, மாடத்தி அருகில் வந்து நின்று கேட்டான் முனி.

ரெம்ப நாளக்கி அப்றம் சித்தப்பா மகனை பார்த்த சந்தோசத்தில், “ஏலே முனி நல்லரிக்கியால? அப்பா, அம்ம எப்டியிருக்காக சட்ட எங்கல?”

முதுகை தடவி நலம் விசாரித்தபடியே திண்ணையில் வைத்திருந்த பேக்கிலிருந்து, பிஸ்கட் பாக்கட் ஒன்றை எடுத்துக் நீட்டினாள் மாடத்தி.



“என்னல? முனி காலயிலே, ஓங்கப்பன் கெழக்க போயிட்டு வந்துட்டாம்போல கோட்டி கனக்க கத்திட்டே கெடக்கான்” சக்கர அடுப்படியில் சோறு வடித்துக் கொண்டே கேட்டாள்.

“அது சும்மா, அப்பா எதாது கத்தும் பெரியம்மா ” பிஸ்கட் பாக்கட்டை திருப்பி பார்த்த படி பதில் கூறி நின்றான் முனி.

கருவ மரத்தடியில் தலப்பா கட்டி மாடு உரித்துக் கொண்டிருந்த தம்பி மூக்காண்டியிடம் “யாரு மாடுல?” என்று கேட்டான் கறுப்பன், தன் வீட்டு வேலிகுள்ளயிருந்த படி.

அண்ணனின் குரல் வந்த திசையை ஏறிட்டுப் பார்த்த மூக்காண்டி, “அண்ணே நம்ம நடு தெருவு இல்லத்து பாய் மாடுண்ணே; ஈன முடியால ராத்திரி பூராம் மல்லுக்கட்டி செத்துப் போச்சி காலைல தான் சேதி தெரிஞ்சி தூக்கிட்டு வந்தோம்ண்ணே” என்றான்.

“செனமாடால ”என்று கேட்டான் கறுப்பன்.

“செனதாணே, வைத்துலேயே குட்டி செத்துட்டு, தாய் வந்திருக்காகளோ சத்தம் கேட்டிச்சி இந்த வாரேன் அந்தா வாரேனுட்டே ரெண்டு வருசமா வராம தாக்காட்டிட்டா,இப்ப தான் நம்ம ஊருக்கு பாத தெரிஞ்சதாமா?”

பீடி கறை ஏறிய பற்கள் தெரிய, இளித்தான் மூக்காண்டி.

“புளுக்கு, புளுக்குன்னு வந்து போக. சுப்பியாரத்லயா இருக்கா என்ன? நீங்க ரெண்டு பேரும் மட்டும் கெடந்து உறிச்சிட்டுயிருக்கியா தூங்கனும், ஜெமினியும் எங்கல?” கறுப்பன் முகம் சுருங்கி கேட்க.

“காலையிலிருந்து, சீவம் போக கத்திட்டேன் ஒரு சுன்னியாண்டியும் வரமாட்டிக்காண்ணே? மட்ட மல்லாக்க வீட்ல கெடப்பானுவ. நானும் இவளும் தான் பொழுது விடிஞ்சதிலிருந்து செத்துட்டுயிருக்கோம் ”என ஆவலாதி,கூறிக் கொண்டே கால் தொடை செப்ப அறுத்து தூக்கி நீட்டினான் மூக்காண்டி.

பரப்பி இருந்த பச்சை பனை ஓலையில் சந்து சந்தா கிடந்த கறி கூவியல் மீது தொப்பென்று போட்டாள் மயிலம்மாள். சத்தம் கேட்டு கருவ மர கிளையில் அமர்ந்திருந்த காக்கைகள், திடுக்கிட்டு பறந்து வேறு கிளை மாறி அமர்ந்து கரைந்தன.

சக்கர வீட்ல முனி “எக்கா? பிரபு தான இம்புட்டு போலயிருந்தான், நல்ல வளந்துட்டாம்லா”

பிரபு அருகில் சென்று, “ஏல, என்ன ? ஆள் தெர்லையோ” என்று, விலா எலும்புகள் துறுத்தி தெரியும் படி நின்றான் முனி. முனியை அடையாளம் தெரியாமல் முளித்தான் பிரபு.


“புள்ளயா, அதட்டாதல பயந்துர போறான்” என்று, சுருக்கு பையிலிருந்த சில்லறைகளை எடுத்து, முனி கையில் தினித்த சக்கர பிரபுவை பார்த்து, “முனி, மாமேன்ல போன தடவை வந்திருக்கும் போது, கழுத்த கட்டிக்கிட்டு கெடந்து உருண்ட” என்று, பிரபுக்கு முனியை நியாபகபடுத்தி சிரிச்சா சக்கரயைப் பாத்து ஓட்டைப்பல் தெரிய இளித்தான் பிரபு.

முனி, மாடத்தியை பார்த்து, “ரெண்டு வருச கொடக்கி வரலலாக்கா? நிய்யி?” என்று ஏக்கத்தோடு முனி கேட்டான்.

“மாமாக்கு வேலை மாத்தலாயிட்டு, அதனால வர முடியல. ஆமா பள்ளியூடம் போரியா, இல்லயா?” என, மாடத்தி முனியிடம் கேட்க, “ஆறப்புக்கு, உப்பரங்கோட்டக்கி போனேன்; எம்புட்டு துரம் போனும்க்கா ஆளுயில்லனா? என்னயா, என்னயா ஊர்வேலக்கி கூட்டு போயிர்து அப்ப” என்று, எரியும் சூந்து குச்சி போல சட சடத்தான் முனி.

முனியை அனணத்த படி, “சித்தப்பா யாம்ம? இப்டியிருக்கு; பள்ளிவூடம் போர பயல போட்டு கெடுக்கு" என்று வெசனப்பட்டாள் மாடத்தி.

அடுப்படியிலிருந்து வேகமாக வந்த சக்கர, “அத கேட்ட உங்கப்பன பாத்து ஒஞ் சோலிய பாருன்டான் ஓன் சித்தப்பன், மூஞ்சில அடிச்ச மாரி” மூக்கு சிந்தி, சேலைல துடைத்த படியே, “சரி போங்க போயி மிட்டாய், கிட்டாய் வாங்கி தின்னுட்டு கோயில்ல ராட்னம் போட்டிருக்காக சுத்துங்க ”



இரத்தக்கரை படிந்த கைகளுடன், மற்றொரு பீடியை பற்ற வைத்து புகைத்துக் கொண்டே, “கொஞ்ச நேரத்துல ஏனத்த தூக்கிட்டு பங்கு கறிக்கு வந்து நிப்பானுவ” என்று கறுப்பனிடம் மூக்காண்டி முனங்க, “பெரக்கி தின்ன பயலுவ, கட்டுக்கு சேர மாட்டான்வ? இருக்கதே நம்ம நாலு வீடு?” என்று பெரு மூச்சு விட்டான் கறுப்பன்.

“இந்த ஈன பொழப்ப விட்டுட்டு குடும்பத்தோட எங்கனயாச்சும், போயிரலான்னு பொச மூட்டிட்டு வருது” கோபம் தனியாமல் மூக்காண்டி மாடு உறிக்க, “வேற எங்க போயி கூட்டி குமிக்க போர? சரின்னு விட்டுட்டு சோலி மயித்த பாப்பியா” தம்பியை அதட்டினான் கறுப்பன்.

சக்கர வீட்டு முத்தத்தில் நின்ற படி பிரபு, அம்மா மாடத்திக்கு கை அசைத்து டாட்டா காட்டினான், “பாய்” முனி சிரித்தான்.

முனியுடன் பிரபு, கைகள் கோர்த்து பேசிய படி, வீட்டிலிருந்து கிளம்பி சென்றார்கள்.


“முனி, பிரபுவ கவனமா பாத்துகய்யா? முள்ளு எதும் குத்திராம” என்று, சஞ்சலம்பட்டு நின்ற மாடத்தியை பார்த்து முனி, “நா பாத்துக்கிடுதேன், நீ போக்கா?”என்று மாடத்திக்கு பதில் அளித்த படி முனி, பிரபுவும் முச்சந்தி திரும்பி மறைந்தார்கள்.

மூக்காண்டி மாட்டை முழுவதும் உரித்து முடிக்கும் நிலையில், “தொலிய ஒடனே உப்ப தடவி வச்சிரு; அழுக விட்ராதல. ரெட்டியாபட்டிச் சந்தையில, பாய் முதலாளி கிட்ட போட்டா செலவுக்கு ஆவும்.. பாத்துக்கோ” என்றான் கறுப்பன்.

“ஆமா உப்பு வாங்ன ரூவாய்க்கி கூட காணாது ” என்று கொக்கர உட்கார்ந்த படி, கறி சந்துகளை கூறு பிரித்த மயிலம்மாள், “மச்சான் மாடத்திக்கி கறி காய போட்டு முறுகல் தந்தா ஊருக்கு போவும் போது கொண்டு போவாளா? இல்ல பேங்கு மாப்ள பொண்டாட்டின்னு கௌரவம் பாப்பாளா? அக்காவுக்கு இந்த தடவ சேல கட்டுவாளோ? உங்க மவ” எனக் கேட்டு வெனையமாக சிரிச்சா.

கறுப்பன் வாய் மூடி நின்றான்.

சக்கரைக்கி வாங்கிட்டு வந்த சேலையை காட்டிட்டிருந்தா மாடத்தி, “நல்லாயிருக்காமா? பிரபு அப்பா தான் எடுத்தாரு” என்றாள் பெருமையாக மாடத்தி.
சக்கர சேலய கைகளால் தடவி பார்த்து, வெத்தல சாயமேறியப் பற்கள் தெரிய, “நல்லாருக்கு தாயி” என, சிரித்து கொண்டிருந்தாள்.



சிறிது நேரத்தில் “ஏய்? ம்ம்.. ” சக்கரயின் அலறல் சத்தம் கேட்டு, அவயத்திலிருந்த கோழி கொக்கரித்து ஓடி பறந்தது. வீறிட்டு எழுந்து, இரு காதுகள் உடுக்கை போல், பட படத்து தலை அசைத்து, உடல் உதறி நின்றது செவலை. பேக் கோயில் கொட்டு சத்தம் ஊரே அதிரும் படி கேட்க, சக்கர மேல பேச்சி இறங்கி ஆடினாள். மாடத்தி பதறி தடுமாறி, எழுந்து கும்பிட்டு நின்றாள்.

கறுப்பன் வீட்டு முத்தத்திற்க்கு ஓடி வந்து “என்ன? பேச்சி வந்துட்டாளா..?” என்றான்.

மூக்காண்டியும், மயிலம்மாளும் வேலிக்கு அந்தபுறமிருந்து, எட்டிப் பார்த்து “தாயே… பேச்சி ” என்று, “இந்தா சொணங்காம வேகமா உரிச்சி முடி, கோயிலுக்கு போவோம்” மூக்காண்டியை முடுக்கினால் மயிலம்மா.

கைகளை மேல் நோக்கி தூக்கி விரல்கள் கோர்த்து உயர்த்தி, வீட்டு முத்தத்தில் அங்கும் இங்கும் வட்டமடித்து உடலை முறுக்கியபடி, குலவை சத்தம் எழுப்பி கொட்டு சத்தத்தின் ஆராவாரத்துடன், ஊர் பேக் கேயில் நோக்கி வெடிப்பேறிய புத்து கால்கள் குதித்து ஆடியபடி ஓடினாள் பேச்சி.



“ஏப்போ? நான் முன்னால போரேன், நீ சீக்கிரம் வாப்போ ” சேலையை எடுத்துக் கொண்டு, சக்கர பின்னால் ஓடினாள் மாடத்தி.

“பாத்து போனும் தாயோ , நா, பொரத்தால வந்துருவேன்” என்று முத்தத்து அகத்தி மார்க் கம்பு கதவ சாத்திவிட்டு விறு விறு என்று நடந்தான் கறுப்பன். செவல பின் தொடர்ந்தான்.

“செருப்பு போட மாட்டிங்களா அண்ணா கால்ல முள்ளு குத்தாதா?” என்று பிரபு முனியிடம் கேட்க, “எனக்லாம் முள்ளே குத்தாதுல நா உனக்கு அண்ணே கிடயாது மாமா ”என்று மாடத்தி கொடுத்த பிஸ்கட் பாக்கட்டிலிருந்து பிஸ்கட்டுகளை, பிரவுக்கு கொடுத்து, தானும் தின்று கொண்டே பேசிய படி நடந்தார்கள்.

“நீ எத்னாப்புல, படிக்க? பிரபு”

“போர்த்துஸ் ஸ்டாண்டர்ட் போகபோரேன் ம்ம்.. மாமா" என்று, சிரித்தான் பிரபு.
“மாமா உங்களுக்கு ப்ரெண்ட்சே.. இல்லைய?” முனியிடம் ஷீ லேசை கட்டிக்கொண்டே.. கேட்டான்? பிரபு.

“ரெண்டு, மூனுபேரு இருக்கானுவல , ஊர்மாடு மேய்க பேயிருக்கானுவ”பேசிக்கொண்டே, நீரின்றி வறண்டு கொண்டைகள் முறிந்த தென்னந் தோப்பைக் கடந்து, ஊர் சுடு காட்டு மண் ரோட்டில் சென்று கொண்டிருந்தார்கள். ஆள் அரவம் கண்டு ஆள்காட்டி குருவி கூச்சலிட்டு ஓடியது. இலந்தைச் செடிகள் நிறைந்த வறண்டு கிடந்த ஊர் குளத்திற்கு வந்து சேர்ந்தார்கள் பிரபுவும், முனியும்.

ஊருக்கு வெளியே, வடக்க பாத்து குலவை சத்தமிட்டபடி ஆடிக்கொண்டே வந்த பேச்சியின் குறுக்கே வந்த புல்லட் சற்றேன்று பிரேக் போட்டு தட்டு தடு மாறி சீறி இரைந்து நின்ற, வண்டியின் சக்கரத்தை உரசியபடி சுடுகாட்டு மண் ரோடு நாலு முக்கு கடந்து கருவ மரங்கள் அடர்ந்த பீக்காட்டு பாதையில ஓடினாள்.

“குறுட்டு, தேவிடியா ” என்று வையித குரல். சிவப்பு நிற புல்லட்டை சைடு ஸ்டாண்டிட்டு இறங்கியது. சரடு குத்த அகப்படாத கள்ளப் பட்ட மாடு போல, சட்டை கை மடிப்பை புஜம் தெரிய நகர்த்தி நின்றிருந்தான் மடத்தான்.

தன் தாயை, வைய்த சத்தம் காதில் வாங்கி தூரத்தில் கையில் சேலையுடன் வேர்த்து இறுகிய முகத்துடன், மடத்தான் அருகில் வந்து முந்தானையை சரி செய்தவாறு, "கும்புடுரேன், பாண்டியன்” என்று, கைகூப்பி கும்பிட்டு நின்றாள் மாடத்தி.

ஊர் குளத்தில், இலந்தை செடியில் கொக்கி போன்ற முள், பிரபுவின் புறங்கையை கொறுத்து பிடித்துக் கொள்ள, “ஆ..அம்மா ”என, கதறி அழுதான் பிரபு, பதறி வந்த முனி, “கூறு இருக்காலா?, உன்னைய எவன் பறிக்க சொன்னான் எலந்த பழத்த இப்டியால பறிப்பா? முள்ளு பூறாம் கைய கிழிச்சிரும்”

பிரபு கையை முள்ளிலிருந்து வலிக்காமல் விடுவித்தான் முனி. குன்னி முத்து அளவில் பொறங் கையில் பெறுகிய இரத்தம் பார்த்து, பிரபு கண்ணீர் வடித்தான், எச்சில் தொட்டு தடவினான் முனி.

“வலிக்குதோ அழாத” என்று பிரபுவின் கண்ணீரை துடைத்து விட்டு, கவட்டை கம்பால் இலந்தை செடிகளை உலுப்பினான் முனி. ஒதக் காய்களும், பழங்களும் உதிர்ந்து சிதறி ஓடியதை பிறக்கி, ருசித்துக் கொண்டே இருவரும் பேக் கோயில் நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள், பிரபுவின் முன் குறுக்கே விறுட்டென்று பாதையில் நெளிந்து கடந்து போன நல்ல பாம்பை கண்டு, மொட்டப்பனை மேலிருந்த நீல நிறக் காடை இறக்கை அசைத்து அலறியது.

பிரபு கையை பிடித்து வேகமாக இழுத்து நிறுத்தி, “ஏல... பாம்பு” என்றான் முனி. பிரபு கையிலிருந்து இலந்தை பழங்கள் சிதறி ஓடியது.

சுடு காட்டு நாலு முக்கு சந்திப்பில் “என்ன? மெட்ராசுக் காரி உங்கத்தாளுக்கு கோட்டி கீட்டி பிடிச்சிட்டா எவன பாக்க இப்டி ஓடுதா” என்று சக்கரையை வையித படியே,மாடத்தியை மேலும், கீழுமாக கடு கடுன்னு பார்த்து கேட்டான் மடத்தான்.

“அம்மா, அருள் வந்து ஓடுதா பாண்டியன்” என்று கூறி, பீ யை மித்தது போல நின்றிருந்தாள் மாடத்தி.

“அதுக்கு? எதுக்க, வர்ற ஆளுக தெரியாதோ” இறுமாப்புடன், சிகரட் பற்ற வைத்து புகைத்து கொண்டே… நீயும் எங்க கோயில் கொடைக்கி வருசம் தவறாம வந்துருத ம்ம்.. ஆமா ஒம் புருசென் வந்திருக்கானோ?” என்று எக்காளமாக சிரித்தான் மடத்தான்.

“நாளைக்கு வந்துருவாரு, நா கௌம்பதேன் பாண்டியன், அம்மா கோயிலுக்கு போயிருப்பா” என்று, பதில் அளித்தவாறு மாடத்தி , கையிலிருந்த சேலையுடன் வேகமாக நடந்தாள் செருப்பு கால்களுடன்.

“எந்த ஊர்ல வாக்கப்பட்ருந்தாலும் இந்த ஊரு கட்டுப்பாடு அப்பிடியே தான் இருக்கும் பாத்துக்கா” என்று, எட்டி சென்ற மாடத்தி காதில் விழும் படி கத்திக் கொண்டே புல்லட்டை உதைத்தான், தட தட சத்ததுடன் சுடுகாட்டு மண் ரோட்டில் புழுதி கிளப்பி கிழக்க பாத்து ஓட்டி சென்றான், சிகரெட் புகை ஊதிய படி மடத்தான்.

மயிலம்மாளும், மூக்காண்டியும் மூச்சு வாங்க,சுடுகாட்டு மண் ரோடு நாலு முக்கு சந்திப்பை நெருங்கி வர, “வேகமா வாரும், பூச முடிஞ்சிர போதுய்யா பீடிய பீடியா குடிச்சா இப்பிடி தான் எளைக்கும்” என்று மயிலம்மாள் மூக்காண்டியை வையித படி சீனி சரலை கற்கள் நிறைந்த பாதையில் வெறும் கால்களுடன் ஓட்டமும், நடையுமாக கோயிலை நோக்கி ஓட, மடத்தான் புல்லட் சத்தம் அடங்கியது.



கோயில் எல்லை, மத்தியான பூச கொட்டு சத்ததுடன் மணிகள் சேர்ந்து அதிர்ந்தன. வழி நெடுக, பெரிய பெரிய பந்தல் ஆர்சுகளும் வண்ண, வண்ண சீரியல் செட் தோரணங்களும் தொங்க, வீதி இரு புறங்களும் வரிசையாக கம்புகளில் ட்யூப் லைட்களை கட்டி சோதனை செய்து கொண்டிருந்தார்கள், மைக் செட்டுக்காரர்கள்.

இராட்டினகாரர்கள் குழந்தைகளை வைத்து, மூச்சு வாங்க சுற்றிக் கொண்டிருந்தனர் மகிழ்ச்சியாக அடுத்து சுற்றுக்கு சிறுவர், சிறுமியர் முண்டியடித்துக் காத்திருந்தனர். கிணத்தடியில் ஏற்றம் இறைத்து குடங்களில் நீர் நிரப்பி கொண்டிருந்தார்கள் பெண்கள் கூட்டம் கூட்டமாக.

காற்று ஒலிப்பான்களை அளுத்தி, ஐஸ் பெட்டி மூடியை திறந்து அடைத்து
சத்தமெழுப்பியபடி, “வா வா ஓடியா… ஐஸ் ஐஸ் கப்பைஸ் பாலைஸ், கோனைஸ் சேமியா , ஐசே… ” சிறுவர் சிறுமியர் கூட்டங்களை வசியம் செய்து கொண்டிருந்தார்கள். கார்கள், வாங்க வந்தவர்களிடம் கார்களை பற்றிய விவரம் செல்லிக் கொண்டிருந்தான் பொம்ம சாமான் விற்கும் வியாபாரி.

மயில் கழுத்துகளுடன் மயில் எண்ணெய் தைலம் விற்பனை செய்யும் மிராட்டியன் கூட்டம் “கை , காலு சுளுக்கு , நரம்பு பிடிக்கே நல்லது சாமி ” என்று கூவ, வேடிக்கை பார்த்து சென்றது ஊர் பெருசுகள்.

கலர் கலர் பலூன்கள் காற்றில் மெல்ல அசைந்தாடியது. சில குழந்தைகள் பலூன் வாங்கி மகிழ்ந்து சென்றதை , காசுயில்லாத சிறுவர்,சிறுமியர் ஏங்கி வேடிக்கை பார்த்தார்கள், வெயிலின் சூடு பொறுக்காமல் பலூன் வெடித்த சத்தம் கண்டு மிரண்டு வாய்மூடி சிரித்தார்கள். முடி காணிக்கை நேர்த்தி கடன் நிறைவேற்றினார்கள்.

தலையை அறுத்து வீசிய சேவல் உடல் அங்குமிங்கும் துள்ள, துடிக்க இறக்கைகள் உதறி அடங்கியது.

வேட்டை நாய்கள் சில கழுத்தில் பாச்ச கயிறுடன், இரத்த வாடைக்கி மோப்பம் பிடித்து திரிந்தன, எல்லை அதிகாரம் செய்த நாயிகளிடம் வால் மடக்கி கோரைப் பல் காட்டி பயந்து உறுமியது பசியோடு திரியும் நாய் கண்கள் எரிய, ஆங்காங்கே புகை மண்ட, பொங்க பானையில் பொங்கலிட்டு கொண்டிருந்தார்கள், பெண்கள். இடம் பிடித்த கொட்டகை, கூடாரங்களில் தொட்டில் குழந்தைகளை உறக்காட்டிக் கொண்டிருந்தார்கள் தாய்மார்கள்.

மர நிழலில் நிறுத்தம் செய்த மாட்டு வண்டிகளில் நோக்காலில் கட்டப்பட்டருந்தன மாடுகள், கண்கள் மூடி அசை போட்டுக் கொண்டிருந்த மாடு, திமில் சிலிர்த்தும் பறக்க மறுத்தது, திமில் மேலமர்ந்திருந்து காக்கை. தாவணி கன்னிகள் பின்னால் ஊர் இளவட்ட மைனர்கள் , உயர பறக்கும் கள்ளப் பருந்தைப் போல் வட்டம் போட்டனர். ஐஸ் சர்பத் இங்கு கிடைக்கும் விளம்பர அட்டை தொங்க, சிலர் வண்ண வண்ண சர்பத்துக்களை ரசித்து குடித்தனர். கொட விருந்தாளிகள் வடிப்பு சாராயம் தேடி, கருவ காட்டுக்குள்ள கதவாளி போல் பம்மி, நுழைந்தார்கள். திடீர் பூக்கடைகள் ஒன்றில் பூ மாலைகள் பின்னிக் கொண்டிருந்தவனிடம், பழக்கம் விட்டுக் கொண்டிருந்தார் ஏட்டய்யா.

அதிகாலையில் பலியிட்ட செம்மறி கிடாக்களின் தலை வேறு, உடல் வேறாக இரத்த சகதியிலிருந்து துக்கி வீசி எறிய மொத்தமாக ஓரிடத்தில் ஒன்று சேரக் குவிந்தன. கிடாயின், உரிமைதாரர் தேடி அடையாளம் கண்டு எடுத்துச் சென்றார்கள். சாம கொடைக்கி கிடா பலியிட, பரன்கள் தயார் செய்து கொண்டிருந்தனர் கோயில் முக்கியஸ்தர்கள். பாத்தியப்பட்ட குடும்ப ஆட்கள் விரதமிருந்து, கிடாக்களை வெட்டியவர்கள், அரிவாளைத் தீட்டி கூர் சரி செய்தனர் சாம கொடைக்காக.

“தொங்கு கிடா மட்டும் விழுந்திராமல?சாமிய நெனச்சிட்டு வெட்டு” என்றார் வயதான ஒருவர்.

கொட்டுகள் அதிர சுடலைமாடன் செம்மண் பூடத்தில் வெள்ளி கண் இலைகள் பொருத்தி கிழக்கே பார்த்து சிரிக்க, ஆள் உயர வீச்சருவா ஊன்றி சந்தனப்பால் தேய்த்து செவ்வரளி, ரோசா மாலைகள் மணம் மணக்கும் இராச அலங்காரத்துடன், சூடம் ஏத்தி ஆராதனை செய்து ஊர் பக்தர்கள் சூல மத்தியான பூசை நடந்து கொண்டிருக்க, பச்ச வாழை மட்டையில் மண்ணும், சந்தனமும் மணக்க அலங்கரிச்சி வடக்க பாத்து சாந்தமா, ஜொலிச்சா பேச்சியம்மா.

கையில் பிள்ளச் சேலையை மாரோடு அனைத்து குறுக்கும் நெடுக்குமாக நடைபோட்டு, மூக்கு விடைக்க முனு முனுத்த படி குழந்தையை தாலாட்டுவது போல அசைந்தாடினாள் பேச்சி. பெரியாச்சி, உக்கிர தேவதைகளிடம், அருள் வாக்கு கேட்டு நின்றிருந்தனர் ஊர்க்காரர்கள்.

கோயில் பந்தலுக்குள் கொண்டு வந்த சேலையை, ஆடிக்கொண்டிருந்த பேச்சிக்கி கட்டி விட்டு காலில் விழுந்து கும்பிட்டாள் மாடத்தி. கண்களில் கண்ணீர் பெருக தலையில் கை வைத்து ஆட்டி நிறுத்தி, கட்டை விரலால் விபூதி இட்டு பின்நோக்கி தள்ளினாள் பேச்சி, பிள்ளச்சேல ஏந்திய படி மாடத்தியின் முகம் பார்த்து.

அங்கே மேக்க பாத்து சுடு காட்டு மண் ரோட்டில் நடந்த படி“ சும்மா, அத பிதிக்கிட்டே கெடக்காதல?” புறங்கை காயத்தை தடவி பார்த்துக் கொண்டே வந்த பிரபுவை வையிதான் முனி. “இரத்தம் வருது மாமா” பாவம்போல் கையை நீட்டி காமித்தான் பிரபு.

“எச்சி தொட்டு வையி ஆறிரும்” என்று, முனி பிரபுவை அமைதிப்படுத்தினான். எதிரே புல்லட்டில் வந்த மடத்தான் தீடீர் என டயர் தேய்த்து நிறுத்தினான். சட்டுனு விலகி நின்றார்கள். முனியும்,பிரபுவும்

“ஏலு எந்தூர்ல? இங்ன என்னல, பன்னுதிய" தட தடத்த புல்லட்டில் அமர்ந்தவாறே கேட்டவன், “தேங்கா, களவாங்க வந்தியலோல?” என பிரபு, முனி இருவரையும் நாக்கை துருத்தி, மிரட்டினான் மடத்தான்.

“இல்ல நாங்க எலந்த பழம் பறிக்க தான் வந்தோம் பாண்டியன்” என கூறி , வேட்டை நாயை கண்ட வெறுவை போல பயந்து, நடுங்கி நின்றான், முனி.

“நீ மூக்காண்டி மவந்தான்ல? இவேன் எவம்ல? சட்ட பேன்டு பூடுசுலாம் போட்டு புதுசா இருக்கான்” என்றான் மடத்தான் பிரபு மிரண்டு முளித்தான்.

“எங்க, அக்காமவன் ” என்று முனி செல்லி முடிக்கும் முன்னே, “ஏலு உனக்கேதுல அக்கா? ஒப்பன ஓளி ” மடத்தான் கையை ஓங்க, நாலு எட்டு பின்னால் நகர்ந்தார்கள் பிரபுவும் முனியும்..

“மெட்ராசுலயிருந்து வந்திருக்கான் பாண்டியன்” புல்லட் தடதட சத்தத்திற்கு இடையே சத்தமாக கூறினான் முனி.



“ஓ கறுப்பேன் பேரனால நீ பேரு ஏன்னல?” பிரபுவை மிரட்டினான் மடத்தான்.

“பிரபு” என கூறி மெல்ல புன்னகைத்தான் பிரபு.

“ஒடுங்கள, திரும்பி வரும் போது இங்கன நின்னிய தென்னமரத்துல கட்டிவச்சி உரிச்சிருவேன்” என்று தட தட சத்ததுடன் சரலை கற்கள் சரசரக்க புல்லட்டில் சென்ற மடத்தானை, முனியும் பிரபுவும் முகம் வேர்த்தபடி வெறித்து பார்த்து பெருமூச்சு விட்டார்கள்.

புல்லட்டில் பறந்து கொண்டிருந்தான் மடத்தான்.
“சரி வால? இங்கன நிக்க கூடாது ஒடியாந்துரு” என்று முனி பிரபுவை அழைத்து கொண்டு வேகமாக ஓடினான்.

“எதுக்கு மாமா,அந்த அங்கிள் நம்மள திட்டினாங்க?”என்று மூச்சி வாங்க ஒடியபடியே பிரபு கேட்க, “அது அவுங்களாம் அப்டிதான்”.

இருவரும் ஓட்டம் குறைந்து நடந்தனர்.

“ஏய் போய்யா வந்துட்டான்” என்ற மடத்தானிடம் ஒரு கிளாசு சாராயத்திற்கு பேரம் பேசி தள்ளு முள்ளு நடந்தினார்கள், கொடக்கி வந்த விருந்தாளிகள்.

“கொட நேரத்துல வந்துந்திருந்துகிட்டு, ஒர்ரூபாய்க்கி குடு , ரெண்டு ரூவாய்க்கி குடுன்னு எச்சிக்கல தனமா , கேக்காத மாமா? ஒறவு முறலாம் இங்க செல்லாது கிளாசு அஞ்சு ரூவா, வேணுன்னா குடி இல்லாட்டி கெளம்பு."

“ஏல், இசக்கி?” என்று அழைத்த படி கோபமாக வந்த மடத்தான்.

சாராயம் வாடிக்கும் இடத்தில், அண்ணே பதம் பாக்கியாண்ணே?”

சாராயம் நிரம்பியிருந்த கேன்களை கைநீட்டி காட்டினான் இசக்கி.

அதெல்லாம் ஒரு மயிரும் வேண்டாம் நீ பதம் பாத்தா காணாதா நா சொல்லுதத நல்லா கேட்டுக்க?”

மடத்தானும், இசக்கியும் குசு, குசுத்த படி, “இன்னேலிருந்து ஒரு வாரத்துக்கு, நம்ம ஊரே... கறி குழம்பு வாசத்துல மிதக்கும். பேட்டரிய சுள்ளுனு போடு. அப்பதான், போத ஏற ஏற இங்கனயே குடிச்சி கெடப்பானுவ, நானும் நாலு காச பாக்க முடியும், புரியுதா?”

தெற்கோரம் பனவடலி தூர் ஓரத்துல குத்தவைச்சி சாராயம் குடிச்சிட்ருந்தான் கறுப்பன். எதயோ மோப்பம் பிடித்த படி தேடி திரிந்தான் செவல.

“நீ குடிச்சிட்டு மலர்ந்துராத உனக்கு ஒத்தாசைக்கு கறுப்பன வச்சிக்கா ” பனவடலிக்கு தெக்கோரம் நின்றிருந்த கறுப்பன் மடத்தான் கை அசைவிற்க்கு ஓடிவந்து “பாண்டியன்” என்றான் “கறுப்பா? இசக்கி கூட நில்லு ” என்றான் மடத்தான். தலையாட்டி “சரி பாண்டியன்” என்று தோளிலிருந்த துண்டை எடுத்த படி நின்றான் கறுப்பன்.

“ரூவா பத்ரம்ல மேக்க போயிட்டு வருவேன்” என்று புல்லட்டை ஸ்டார்ட் செய்து இரை தேடி அலையும் பாம்பு போல விரைந்தான் மடத்தான்.

அங்கே சுடுகாட்டு மண் ரோட்டில் “ஏல , பிரபே மெட்ராசுல ரயிலு இருக்க” இருவரின் நிழல்கள் பின்னால் விழ நடந்து கொண்டே, “ரயிலா” என பிரபு முளித்தான்.

“தண்டவாளத்ல நீளமா ஓடும்லா” முனி செய்கை காட்டி விளக்கினான்.

பிரபு, “ஓ.. ட்ரெயினா மாமா? எங்க கோட்ரஸ் பின்னால தான் போகும் பாத்திருக்கனே. டேடி கூட சன்டே சன்டே பீச்சுக்கு ட்ரெயின்லதான போவேன் ஜாலியா இருக்கும்” என்று சந்தோசமாக கூறிய பிரபுவை வாய் பிளந்து பார்த்தான் முனி, இருவரும் பேசிய படி நடந்தார்கள்.

“நா, ரயில பாத்ததே இல்ல, அது என்னல? பீச்சி” என்று கேட்டான் முனி.

“பீச்ன்னா பீச் தான்” தலை ஆட்டி கூறினான் பிரபு.

“அதான் அது, என்னதுல? ஓந்தாங் கணக்க மண்டைய மண்டைய ஆட்டாத” கோவமாக கேட்டான் முனி.

“ம்ம்... அது பெருசா ப்ளூ கலர்ல பெரிய பெரிய அலைலாம் வரும், ஐஸ்கிரீம் ,சுண்டல் வாங்களாம் , குதிரையொல்லாம் இருக்கும்."

“கடல் தான் பீச்சா” என்று சிரித்தபடி, “இந்தூர்ல பீச்சி, கீச்சிலாம் கிடையாதுல கொளம், கெணறு தான் இருக்க” என முனி சலித்துக் கொண்டான்.

"கொளம், கெணறா அது எப்டியிருக்கும்?" என்று பிரபு அதிசயமாக கேட்டான், முனி செவிடன் போல் நடந்தான்.

“மாமா குளமும் எப்படி இருக்கும், காட்டுங்க. பீச் மாதிரி பெருசாயிருக்குமோ அலை வருமா?” என முனியை பாடாய்ப் படுத்தினான் பிரபு.

“நாம எலந்த பழம் பறிச்சம்லா அந்தயிடந்தான் கொளம்” என்றான் முனி.
“தண்ணியேயில்ல கொளம்ன்னு சொல்றீங்க” என முனியை விடவேயில்லை பிரபு.

“மழ வந்தா தான் தண்ணியவே பாக்க முடியும், இல்லனா குண்டி கழுவ கூட தண்ணி கெடக்காதுல”

“ச்சீ.. ” என பிரபு சிரித்து விட்டு, “அப்டினா கிணத்துலயும் தண்ணி இருக்காதா..?" முனியை புண்ணாக்கினான் பிரபு.

“எல்லா கெணறும், அப்படியிருக்காதுல முட்டாபயல" என்றான் முனி.

“மொதல்ல தண்ணியிருக்கும் கிணற காட்டுங்க மாமா? எனக்கு தாகமாயிருக்கு” என்றான் பிரபு.

“அதுக்கு ஊருக்கு மேக்கலா பேகனும், இந்த தோப்புல தண்ணியில்லாத கெணறுதானயிருக்கு. இந்த கெணத்த பாத்துட்டு, மேக்க உள்ள கெணத்துக்கு போயி தண்ணி குடிப்போம்" என்று முனி, பிரபு இருவரும் முகமெல்லாம் வேர்த்து, நடந்தபடி ரோட்டுக்கு தெற்கே சதுர வடிவ மொட்டை கிணற்றில் கமலை இறைத்து பாசனம் செய்த அடையாளத்தின் எச்சம்மாக இருந்த கல் மேல் வந்து நின்றார்கள். காட்டு தீயிற்கு இரையானது போல காய்ந்து கருகி கிடந்தது தென்னந்தோப்பு.

“இதாம்ல கெணறு, வா? பாத்துக்கா என்று தண்ணியில்லாத கிணற்றை பிரபுவுக்கு காட்டினான் முனி.

அங்கே கோயில் சன்னிதானத்தில், மடியேந்தி குழப்பத்திலிருந்த மாடத்தி முன் பேச்சி ஒரு நொடி வந்து மாடத்தின் பிடதி பற்றி அணைத்து நெற்றி மீது நெற்றி பதித்து, “ஓம் புதயல தொலச்சிட்டியே ” என, சூறாவளி கடந்து போன இடம் போல புழுதி பறக்க ஆடி அமைதியானாள் பேச்சி.

“யம்மாடி?”

எவ்வளவு ஆழம் ” என்ற பிரபுவின் குரல் கிணற்று கருங்கல் பாறைகளில் மோதிய எதிரொலித்தில் பட பட சத்ததுடன் இறக்கைகள் அடித்து மாடப்புறாக்கள் சில கலைந்து பறந்ததை கண்டு திடுக்கிட்டு பயந்து தடுமாறிய பிரபு கை பிடித்து நிறுத்திய மாமன் முனி, “ஏல? பாத்து ” என உரக்க கத்தினான், சமாளித்து சிரித்தான் பிரபு.



மத்தியான வெளிச்சத்தில் கிணற்று தூரில், இறந்த விலங்குகளின் அழுகிய பிணத்தின் எலும்புகள் சிதறி கிடந்தன, குப்பை கூளங்கள் , சுருங்கிய தேங்காய் நெத்துகள், கந்தல் துணிகள், மண்சரிவில் விழுந்த பெறிய, பெறிய கற்களும் , நீர் கருவை மரங்கள் வளர்ந்து புதர்கள் மண்டி வீச்சமெடுத்து போன பாழுங்கிணற்றை எட்டி பார்த்த பிரபு, “பயங்கர நாத்தம் ” என்று மூக்கை பொத்தியபடி, “தண்ணியே இல்ல மாமா ”என, முனு முனுத்தான்.

“நம்ம மோண்டா தாம்லஇந்த கெணத்துக்கு தண்ணியே ”என முனி டவுசர்
பட்டனை வேக வேகமாக அவிழ்க்க, பிரபு இடப்புறமிருந்து குனிந்து முனியை பார்த்து சிரித்தான் . குஞ்சான் தெரிய வில்லு போன்று வளைந்து நின்று தலை அசைத்து சிரித்துக்கொண்டே “நீயும் மோண்டு விடுல பிரபு ” என்றான் மாமன் முனி. பிரபுவும் அவசர அவசரமாக ஜிப்பை திறந்து மாமனை போலவே நின்று சிரித்தான்.

“சக்கிலிய தேவிடியாமவனே” என வடக்கே இருந்து வந்த கரகரப்பான குரல் தடித்த தோல் செருப்பு அணிந்த கால் ஒன்று பிரபுவின் முதுகில் ஓங்கி மிதித்து தள்ளியது.

மொடுக் என்ற சத்தத்துடன் மூச்சு அடைத்து, முதுகு முறிந்து, கிணற்றினுள் சரிந்தான் பிரபு.

தடுமாறி கிணற்றின் வெளியே தாவி விழுந்தான் முனி, டவுசர் கிழிந்து, கெண்டை கால்கள் வரை அவிழ்ந்தது. தட்டு தடு மாறி அம்மணமாக ஓடினான்.

“யம்மா... பிரபு...?” என்று கதறி அழுதவனாய்.



“எங்க வந்து யாரு கெணத்துல யாரு மோளுதியல?” என்று இரை விழுங்கிய பாம்பு போல மெல்ல நகர்ந்தான் மடத்தான்.

கொட்டு சத்தம் அடங்கி, ஊர் அமைதி காத்தது.

நீர்கருவை முட்கள் அடர்ந்த கிளைகளிள் உரசி , உடல் கிழிந்து. கிணற்று அடிவாரத்துக் கருங்கல் பாறையில் தலை மோதிய படி அசைவற்று கிடந்தது பிரபு உடல்.

கிணறதிர்ந்து மேலிருந்து சரளை மண்கள் பூக்களை போல உதிர்ந்தன.

நெடுங்காலமாய் நீரின்றி வறண்ட பாழும் கிணற்றில் கருங்கல் பாறை இடுக்கிலிருந்து, செந்நீர் சுரந்து பெருகியது.

# இரவின் குரல்

இருளின் சேயாய்
சத்தமின்றி வலம்வர
விளைந்த எனை
செய்ததற்கும் செய்யாததற்கும்
இதயத்தைச் சுரண்டி நீதி கேட்க
நீள் பாதையிட்ட பாதகனென்போர்
எவரும் அறிவரோ..?
ஈரைந்து அகவையும் எட்டா ஒருவன்
என் இதயத்தில் ஏறி அழுத்தும் வலியினை
காதல் போர்வையில் காமச் சுளையில்
உருவாகி மகவானவனவன்
உயிர்த்துளியும் உதிரக்கமலமும்
சேர்ந்து சிலையானவனவன்
பேரம்பேசப்பட்டான் உனக்கு பாதி
எனக்குப் பாதியென
அண்டமும் அணுவும் திசை மாறியதில்
இழுபட்டுக் கிழிந்தது அவன் இதயமாகிப்போனது
ஆறுநாளுக்கு சுமந்தவளோடாம்
மிஞ்சியபொழுது சுமத்தியவனோடாம்
மிட்டாயோடு அலைபேசியும்
கூடித்தான் போனது லஞ்சமாய்
வரிந்து கட்டிய வாய்கள் அவன்
துயிலை ரட்சிக்க மறந்தது ஏனோ!
விழிமூட விட்டம் கண்டபோதெல்லாம்
ஒற்றைத் தோளைத் தொடும் அணைப்பில்
வெம்புகிறதே அப்பிஞ்சுமனம்
இடுக்கிப் படுத்து திரும்புகையிலிருந்த சுகத்தைத்
தேடித் தவிக்கிறதே தளிருள்ளம்
கிளைவிடாக் கன்று
கடனாளியாய் இன்று கண்விழிக்கின்றதே
யாரேனும் வரம் தராரோ
இடக்கால் போட அவளும்
வலக்கால் போட அவனும்
ஒரே ஓர் உறக்கத்திற்கேனும்
விழித்துகிலகற்றி விடியலுக்கு
காத்திருக்கும் அக்குட்டிக்
கண்களின் கருமைக்கு
காரணமாய் நீளாதிருக்க
பிறந்ததும் இறந்து பிணமாகி
மறுமுனை எய்த ஏதேனும்
வழியுண்டோ எனக்கு ?

**புனிதா பார்த்திபன்**

# தலையாட்டிபொம்மை

- பாலமுருகன்.லோ

மேகங்கள் இருண்டு, இடி முழக்கத்துடன் சடாலென்று மழை வானத்தைப் பொத்துக்கொண்டு விழுவது போல, கண்ணீர் ரமேஷின் கண்களிலிருந்து கொட்டியது. அந்தத் தனி அறையில் அவன் மட்டும் உட்கார்ந்திருந்தான். அவனது கைகளில் தூக்க மாத்திரையை வைத்துக்கொண்டு அதையே முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

தூக்க மாத்திரையை விழுங்கிவிடலாமா இல்லை குப்பைத் தொட்டியில் போடலாமா? என்ற மனப் போராட்டத்திற்கு இடையே மாட்டிக்கொண்டு குழப்பத்திலிருந்தான்.

“அப்பா… அப்பா…” என்று அவனது மகள் கூப்பிட்டுக்கொண்டே அறைக்குள் வந்தாள். வந்தவள், “அப்பா… நீ என்ன பண்ற இங்க தனியா உட்கார்ந்துகிட்டு?” என்றாள்.

தன் மகள் கீர்த்தனாவைப் பார்த்தவுடனே அவன் கையிலிருந்த தூக்க மாத்திரையைத் தலையணைக்குக் கீழே மறைத்தான்.

“என்னடா பட்டு, அம்மா ஹாலில்தானே இருக்காங்க, அங்கே போய் விளையாட வேண்டியதுதானே! சரி, சொல்லு செல்லம், என்ன வேணும் உனக்கு?”

“அப்பா, இங்க நீ தனியாதானே உட்கார்ந்திருக்க, ஏன் என்னோட விளையாட வரல? நீயும் என்கூட விளையாட வா!” என்றாள்.



“

ரமேஷ் மறுப்பு தெரிவிக்காமல், “வாடா கண்ணு, போகலாம்” என்று அவளைத் தூக்கிக்கொண்டு ஹாலுக்கு வந்தான்.
“ஏங்க, ஏன் என்னவோ மாதிரி இருக்கீங்க?” என்றாள் சுலோச்சனா.

“ஒண்ணுமில்ல சுலோ! ஏன் என்னைப் பார்த்தா அப்படித் தெரியுதா?” என்றான் ரமேஷ்.

“ஏங்க, பாப்பாவோட விளையாடத்தானே போறீங்க, அவளை அப்படியே கொஞ்சம் தூக்கிட்டுப் போய்க் கடையில வீட்டுக்கு வேண்டிய சாமானெல்லாம் வாங்கணும். உங்களுக்கு முடியுமா? இல்ல நானும் கூட வரணுமா?”

“அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்மா, என்ன சாமான் வாங்கணும்னு சொல்லு. நானும் பாப்பாவும் போய் வாங்கிட்டு வர்றோம்” என்றான் ரமேஷ்.

புரோவிஷனல் ஸ்டோர்ஸ் வந்தவன், சுலோ சொன்ன பொருட்களையெல்லாம் கொண்டுவந்த பையில் போட்டுக்கொண்டு வீடு திரும்பினான்.

சாமான்களையெல்லாம் சுலோவிடம் கொடுத்தபின், சோபாவில் அமர்ந்து விட்டத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான்.

அவனது பார்வை விட்டத்தில் மாட்டியிருந்த மின்விசிறியை நோக்கியிருந்தது. மின்விசிறி சுழன்றதால் அவன் சிறிது நேரத்தில் கண்களை மூடினான். அவனது நினைவு பின்னோக்கிச் சென்றது.

“ஹலோ ரமேஷ், குட் மார்னிங்.”

“குட் மார்னிங் சார்” என்றான் ரமேஷ் அவனது மேலாளரிடத்தில்.

“ரமேஷ், கொஞ்சம் இன்றைய புரொடக்ஷன் பிளானைக் கொண்டு வாயேன்! அதைக் கொஞ்சம் பார்க்கணும். இன்னும் ஒரு மணி நேரத்தில் சேர்மனுடன் மீட்டிங் இருக்கு.”

“சார், ஒரு பத்து நிமிஷம் கொடுங்க, எல்லாத்தையும் பிரிண்ட் எடுத்துத் தரேன்.”

“சரி, உடனே எடுப்பா! ஏதாவது திருத்தம் இருந்தால் செய்யணும் இல்ல.”

“இதோ உடனே எடுக்கிறேன் சார்.”

ரமேஷ் கார் உதிரி பாகம் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் துணை மேலாளராகப் பணிபுரிகிறான். அந்த உதிரி பாக உற்பத்தி நிறுவனத்தில் சுமார் 300லிருந்து 350 நபர்கள் சுழற்சி முறையில் காலை, மதியம் மற்றும் இரவு என்று ஷிஃப்ட் பேசிஸில் வருவதுண்டு. சுமார் நூறிலிருந்து நூற்றுப் பதினைந்து நபர்கள் ஒரு ஷிஃப்ட்டுக்கு வருவதுண்டு. ரமேஷ் முழு புரொடக்ஷன் மேற்பார்வையைப் பார்த்துவந்தான்.

சரியான ஆட்களைத் தேர்ந்தெடுத்து அந்தந்த மெஷினிங் ஏரியாவில் கொடுப்பது, புதிய நபர்கள் என்றால், அவர்களுக்கு சூப்பர்வைசர் மூலம் தகுந்த டிரெய்னிங் கொடுப்பது.

தினம் புரொடக்ஷன் அவுட்புட்டை சரிபார்ப்பது, எங்காவது அவுட்புட் குறைவாக இருந்தாலோ இல்ல அதிக நபர்கள் தேவையாக இருந்தாலோ அதையும் ரமேஷ்தான் பார்க்க வேண்டும். இதுமட்டுமில்ல, கஸ்டமர் கிட்ட இருந்து ஏதாவது கம்ப்ளெய்ன்ட் வந்தா, அது திரும்பவும் நடக்காம இருக்க, கஸ்டமருக்கு எழுத்துப்பூர்வமா சொல்றதுன்னு, அவனுக்குப் பல பொறுப்புகளை அந்த நிறுவனம் கொடுத்திருந்துச்சு.

ஆக மொத்தத்தில், புரொடக்ஷன் நல்ல விதமாக வந்துவிட்டால், அவன் கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சு விடுவான். அப்படி அவன் எண்ணிய மாதிரி புரொடக்ஷன் அவுட்புட் வரவில்லை என்றால், அவனே நேராக அந்தப் பகுதிக்குச் சென்று குறை ஏதேனும் உள்ளதா என்று பார்ப்பது தொடங்கி, அவனே ஒரு ஆபரேட்டராக மாறிவிடுவான். ஏனென்றால், வேலைப் பளுவை அவர்களுக்குச் சற்றுக் குறைக்க அவன் உதவியும் செய்வான். இவன் அந்த ஆபரேட்டரிடம் கேட்டால், "ஆமாம் சார், ரெண்டு மூணு மெஷின் ஓட்ட வேண்டியதிருக்கு. இந்த மெஷின் ஆபரேட்டர் இன்று வரவில்லை, புதிய நபர்தான் இருக்கிறான், அவனிடத்தில் இந்த வேலையை ஒப்படைக்க முடியாது. அவனால் இப்போதைக்கு என்ன முடியுமோ, அதை கொடுத்திருக்கிறேன்," என்பான். இதனாலேயே ரமேஷ் அந்த மாதிரி தருணங்களில் ஒரு வேலையாளாக மாறிவிடுவான்.

பெயர்தான் பன்னாட்டு நிறுவனம். ஆனால், நன்றாக வேலை செய்பவர்களைச் சக்கையாகப் பிழிந்து வேலை வாங்கத் தெரிந்த மேலதிகாரிகள், அவர்களுடைய நாட்டிலிருந்து இங்கு வந்து நம்மை ஒரு கைப்பாவையாகவே மாற்றிவிடுகின்றனர்.




அவர்கள் சொன்னால் சரி என்று சொல்ல வேண்டும். வெள்ளைக் காக்கை பறக்கிறது என்றால், நாம் 'ஆம்' என்றுதான் பதில் கூற வேண்டும். வேலை ஒப்பந்தப் படிவத்தில் எட்டு மணி நேரம் என்றுதான் எழுதியிருக்கும். ஆனால், அங்கு எழுதப்படாத சட்டம் என்னவென்றால், பன்னிரண்டு மணி நேரக் கட்டாய வேலை. அவரவர் வேலையைத் தக்கவைத்துக்கொள்ள, கண்டிப்பாகப் பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்தே ஆகவேண்டும்.

இந்த பன்னிரண்டு மணி நேர வேலையால் ரமேஷால் குடும்பத்துடன் நேரம் ஒதுக்க முடியவில்லை. வாரத்திற்குச் சில சமயம் ஏழு நாட்களும் வேலை செய்ய வேண்டிய நிர்பந்தமும் நிலவும். இல்லையென்றால் வேலையில் சாதகமான நிலை ஏற்படாது. அவனது குழந்தை அவனைப் பார்ப்பது வாரத்திற்கு ஒரு நாள்தான். அதிலும் பாதி நேரம் அவன் தூங்கிக்கொண்டுதான் இருப்பான். தினம் ரமேஷ் காலையில் கம்பெனி வண்டியைப் பிடிக்க வேண்டுமென்றால், சுமார் ஐந்தேகால் மணிக்கெல்லாம் வீட்டைவிட்டு வெளியேற வேண்டும். அப்போதுதான் நிறுவனத்தின் வண்டியைப் பிடிக்க முடியும். ரமேஷ் கிளம்பும் சமயம் அவனது குழந்தை தூங்கிக்கொண்டிருக்கும். பின் அவன் வேலை முடித்து வீட்டிற்குத் திரும்பி வரும் போதும் குழந்தை தூங்கிக்கொண்டுதான் இருக்கும். அவன் சுமார் ஒன்பதிலிருந்து பத்து மணியளவில்தான் வீட்டிற்கே வருவான்.

வந்தவுடன் கை, கால், முகம் எல்லாம் அலம்பியவுடன், சுலோ உணவைப் பரிமாறுவாள். பத்திலிருந்து பதினைந்து நிமிஷம் வேகவேகமாக உணவைச் சாப்பிடுவான்.



அதைப் பார்த்த சுலோ அவனிடம், “ஏங்க இவ்வளவு அவசரம்! கொஞ்சம் பொறுமையாகச் சாப்பிட்டா என்ன?” என்பாள்.

“இல்ல டீ.. கம்பெனியில இப்படி வேகவேகமாச் சாப்பிடப் பழகியாச்சு, அதை மாத்த முடியல.”

“பார்த்துச் சாப்பிடுங்க, எங்காவது தொண்டைக்குழியில் மாட்டிக்கப் போகுது.”

“அதெல்லாம் ஒண்ணும் ஆகாது, நீ கவலைப்படாதே!”

“நம்ம பாப்பா தூங்கிட்டாளா?”

“ஆமா, மணி எவ்வளவு ஆகுது, இப்ப வந்து கேட்குறீங்க?”

“சரிம்மா, இந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை வீட்டில்தான் இருக்கப் போறேன். அவளுடன் ஞாயிறு முழுவதும் நேரம் போக்கலாம்.”

“ஆமா, இப்படித்தான் சொல்லுவீங்க. ஆனா சனிக்கிழமை வந்தா போதும், ‘அம்மா, நாளைக்கு வேலை இருக்கு, கொஞ்சம் மன்னிச்சுக்கோ’ என்பீங்க.”

“சுலோ, அப்படியெல்லாம் இந்த வாரம் நடக்காது. கட்டாயம் நாம எங்காவது வெளியே போகலாம்,” என்றான் ரமேஷ்.

இவை அனைத்தும் அவனது நினைவில் கடல் அலையைப் போல கரையைத் தொட்டு மீண்டும் கடலுக்கே போவது போல் அவனது பழைய நினைவுகள் எல்லாம் மீண்டும் மீண்டும் வந்து போயின. விழிப்பு தட்டவே கண்களைத் திறந்து பார்த்தான். கீர்த்தனா அவளது பொம்மையை வைத்து விளையாடிக்கொண்டிருந்தாள்.



கீர்த்தனாவின் கையில் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை இருந்தது, அதை வைத்துக்கொண்டுதான் அவள் விளையாடிக்கொண்டிருந்தாள். ரமேஷ் அந்த பொம்மையையே பார்த்தபடி தனது மனதில் எண்ணத் தொடங்கினான். மெத்தப் படித்த இளைஞர்களும், இளைஞிகளும் கூட தங்கள் குடும்ப சூழலுக்காக கம்பெனியுடைய கைப்பாவையாக ஒரு தலையாட்டி பொம்மையாகவே மாறிவிடுகின்றனர்.

நம் நாடு முன்னேறி வருகின்ற இந்த சமயத்தில் பொருளாதாரமும் சற்று உயர வேண்டும். ஆனால் அது அப்படி நடப்பதில்லையே. வெளிநாட்டிலிருந்து இங்கு வந்து கம்பெனி தொடங்கி அவர்கள் நல்லவிதமாக பிராஃபிட் பார்க்கிறார்கள். கம்பெனி இருக்கும் ஸ்டேட்டுடைய சப்சிடியைப் பெறுகிறார்கள். ஆனால் வேலைக்கு சேரும் நபர்களுக்கு தகுந்த சம்பளமும் மரியாதையும் கிடைக்கிறதா என்றால் இல்லை எனக் கூறலாம்.

“ஏங்க சமையல் தயார், வாங்க சாப்பிடலாம்” என்றாள் சுலோ.

ரமேஷ் சுய நினைவிற்கு மீண்டும் வந்தான். “இதோ வந்துடுறேன்மா.. ஒரு நிமிஷம் கை அலம்பிட்டு வந்துடுறேன்” என்றான் ரமேஷ்.

சாப்பாட்டுத் தட்டை எடுத்து வைத்தாள். பொரியல், கூட்டு எல்லாத்தையும் தனியா ஒரு சின்ன தட்டில் வைத்து பெரிய தட்டில் சாதத்தையும் சாம்பாரையும் ஊற்றினாள். ரமேஷ் சாம்பாரை சாதத்துடன் பிசைய ஆரம்பித்தவன் பிசைந்துகொண்டே இருந்தான்.

இதை பார்த்த சுலோச்சனா, “ஏங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க?”

எவ்வளவு நேரமா சாதத்தை பிசைஞ்சுகிட்டே இருப்பீங்க, எடுத்து வாயில் போட வேண்டியதுதானே! என்ன ஆச்சு உங்களுக்கு? அப்பவே பாப்பாவை கடைக்கு கூட்டிக்கிட்டு போகும் போது கவனிச்சேன், கேட்கவும் முற்பட்டேன். ஒண்ணும் இல்லேனு சொல்லிட்டீங்க. இப்ப என்னவாம்? ஏன் எதையோ பறிகொடுத்தாற்போல இருக்கீங்க. சொன்னால்தானே தெரியும். இப்ப சொல்லப்போறீங்களா இல்ல நான் எழுந்து போகவா!"

"ஏய்! சுலோ அதெல்லாம் ஒண்ணுமில்ல."

"இல்ல ஏதோ இருக்கு, அதை என்னிடம் மறைக்கிறீங்க. சொல்லணும்னா சொல்லுங்க இல்ல அப்படியே இருங்க."

"அதுவா சுலோச்சனா, கடந்த ஒரு வாரமா கம்பெனியில ஒரே பிரச்சனை."

"என்னவாம்?"

"நானும் இந்தக் கம்பெனியில பத்து வருஷமா வேலை செஞ்சுகிட்டு இருக்கேன். உனக்கே தெரியுமில்ல நான் யாரிடமும் வீண் வம்புக்கோ அல்லது வாக்குவாதமோ செய்யமாட்டேன் என்று."

"ஆமாம், அதற்கென்ன இப்போ?"

"பத்து வருஷமா என்னைப் பார்த்துக்கிட்டு இருந்த மேலாளர்... இப்ப எனக்கும் அவருக்கும் சின்ன மனஸ்தாபம். அதனால் மேலாளர் எப்ப பார்த்தாலும் ஏதாவது சொல்லிட்டே இருக்காரு. நல்லா சரியா வேலை செய்தாலும் தேவையில்லாம தப்புன்னு சொல்லித் திட்டிக்கிட்டே இருக்காரு. எனக்கு என்ன செய்வது எனத் தெரியல."

அவள் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"நான் ஒண்ணு சொன்னா கத்தமாட்டீயே!"

"இல்ல சொல்லுங்க."

"பாப்பாவைக் கடைக்கு கூட்டிக்கிட்டு போகும் முன்னர், படுக்கை அறையில்தான் இருந்தேன்."

"அதான் எனக்குத் தெரியுமே, மேல சொல்லுங்க."

"அது வந்து.. வந்து.."
"என்ன நீட்டி முழக்குறீங்க, சொல்ல வந்ததைச் சொல்ல வேண்டியதுதானே."

"பதற்றப்படாத, நான்.. பாப்பா வரலேனா என் கதை முடிந்திருக்கும்."



"என்ன சொல்றீங்க புரியலையே."

"அதான் போய் சேர்ந்திருப்பேன் உங்களை விட்டுட்டு."

"இது என்ன பைத்தியக்காரத்தனம், குத்துக்கல்லு மாதிரி நான் இருக்கேன். நம்ம சந்தோஷத்திற்கு பாப்பா இருக்கா. எப்படி உங்களுக்கு மனசு வந்தது அந்த பைத்தியக்காரச் செயலைச் செய்வதற்கு? கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்தீங்களா? நீங்க இல்லேனா நாங்க எப்படி வாழப்போறோம்?"

இப்போது அவன் பேசாதிருந்தான்.

"ஏங்க இந்தப் பிரச்சனைக்கு சாவுதான் ஒரே முடிவுன்னா! இந்த உலகத்துல பாதிப் பேர் சாக வேண்டியதுதான். எந்தக் கம்பெனியில நடக்காதது உங்க கம்பெனியில நடந்திருச்சு. ஏன் எல்லாத்தையும் மனசுக்குக் கொண்டு போறீங்க. அதான் மெத்தப் படித்தவர்கள் எல்லாம் அவரவர் மேலாளரிடம் ஒரு தலையாட்டி பொம்மை மாதிரிதான் இருக்கீங்க, பிறகு என்னவாம்? இன்னைக்கு திட்டுறவன் நாளைக்குப் பாராட்டுவான் அப்ப என்ன பண்ணுவீங்க. நீங்க உயிருடன் இருந்தால்தானே அந்தப் பாராட்டைப் பெற முடியும். கொஞ்சம்கூட யோசிக்காம அப்ப இந்த முடிவெடுத்த மாதிரி இனி எடுக்காதீங்க."

அமைதியாய் இருந்தான்.

"நாங்க ரெண்டு பேரும் இருக்கோம் உங்களுக்கு. இந்த வேலை போனாப் போகுது, வேறு வேலை பார்த்துக்கலாம். அதற்காக மனம் உடைஞ்சு இப்படித் தப்பான முடிவெல்லாம் எடுக்கக் கூடாது."

“

அவன் தலையாட்டினான்.

“எனக்கு சத்தியம் பண்ணிக்கொடுங்க இனி இது போன்று தப்பான முடிவெல்லாம் எடுக்க மாட்டேன்னு. கடைசியா ஒண்ணே ஒண்ணு சொல்லிக்கிறேன் இந்த இடத்தில்.”


“என்ன சொல்லு சுலோச்சனா?”

“தலையாட்டி பொம்மையா இருக்கிறது பிடிக்கவில்லை என்றால் விட்டுடுங்க, வேறு வேலை பார்த்துக்கலாம். அதை விட்டுட்டு இப்படித் தப்புத் தப்பா யோசிச்சு முடிவெடுத்து எங்களையும் தனியா விட்டுட்டுப் போயிடாதீங்க.”

“சத்தியம் பண்ணுங்க இப்பவே.”

“சத்தியமா சொல்றேன் சுலோச்சனா, இனி இது போல தப்பான முடிவெடுக்க மாட்டேன். இந்த வேலை இல்லேன்னா வேற வேலை. எவ்வளவு காலம்தான் நாம் தலையாட்டி பொம்மை போல அவனுக்குக் கீழ வேலை செஞ்சுகிட்டு இருக்கிறது. கஞ்சியோ கூழோ இனி நம் சொந்தமா சம்பாதிக்க வேண்டியதுதான்.”

“அப்படிச் சொல்லுங்க. நம் நம்பிக்கையை எப்போதும் தளரவிடக் கூடாதுங்க. முயற்சி செய்தால் வெற்றி நமக்கே.”



# அகத்தின் வண்ணம்

- அப்புசிவா

**கா**லை ஐந்து மணிக்கு படுக்கையில் இருக்கும்போது செல்வம் ஃபோன் செய்து விஜயராஜ் இறந்துவிட்டதாக சொன்னான். ஒரு நிமிடம் எனக்கு ஒன்றும் புரியவில்லை. கண்டிப்பாக கனவாக இருக்கும் என்றே நினைத்தேன். முழுதாக விசாரிப்பதற்குள் அவன் வைத்துவிட்டான். இருண்ட காட்டுக்குள் தனியாக அமர்ந்திருப்பதாக ஒரு பிரமை ஏற்பட்டது. வாழ்வின் கெடும் நிலைகள் எவ்வளவு கொடூரமானது என்பதாக மனம் பித்துபிடித்தாற்போல அரற்ற ஆரம்பித்தது. திரும்பிப்பார்த்தேன். அருகில் அமைதியான குழந்தை போல சரசு தூங்கிக்கொண்டிருந்தாள். அவளை எழுப்பி விஷயத்தை சொல்லலாமா என்ற எண்ணத்தை உடனே அழித்துவிட்டேன். இதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதாக அவளுக்கு தெரியவேண்டாம் என்று திடீரென்று தோன்றியது.

மெதுவாக எழுந்து என் சட்டையின் உள் பாக்கட்டை துழாவி சரசுக்கு தெரியாமல் மறைத்து வைத்திருந்த இரண்டு சிகரெட்டுகளையும் தீப்பெட்டியையும், செல்ஃபோனையும் எடுத்துக்கொண்டு சத்தமில்லாமல் மொட்டைமாடிக்கு நகர்ந்தேன். மாடியின் கதவை மெதுவாக சாத்தி தாளிட்டேன். இரவு நீண்டதான பொழுது. இன்னமும் வெளிச்சம் பரவவில்லை. அங்கங்கே பால்காரர்களின் சைக்கிள் மணி சத்தமும், தூரமாய் யாரோ வாசல் தெளிக்கும் சத்தமும் கேட்டது. வாசல் தெளித்து கோலமிடும் அந்த பெண்ணின் மனதில் இப்போது என்னவிதமான எண்ணம் ஓடிக்கொண்டிருக்கும் என்று சம்மந்தமில்லாமல் நினைக்க ஆரம்பித்தேன். சம்மந்தமில்லாததுபோலத் தோன்றினாலும் இதேபோன்ற அதிகாலையில் இதேபோல வாசல் தெளிக்கும் சத்தம் கேட்க சைக்கிளில் அலைந்தது ஞாபகம் வந்தது. நைட்டி போடும் வழக்கம் பரவ ஆரம்பித்திருந்தாலும் பானுமதி தாவணியை விடுவதாயில்லை.

சிகரெட்டை பற்றவைத்து ஆழ்ந்து இழுத்தேன். அதிகாலையில் முதல் சிகரெட்டின் முதல் புகையின் முழுமையான உணர்வு ஏதும் தோன்றாமல் மறுபடி வேகமாக இழுத்தேன். பாதி சிகரெட்வரை நெருப்பு விழுங்கும் வகையில் வெறிகொண்டு இழுத்தேன்.

வெளியேறும் புகையின் நடுவில் கோலம் போட்டவாறு பானுமதி சிரித்தாள். என்னை கவனிக்காதவள் போல காட்டிக்கொண்டாலும் அவளின் ஓரப்புன்னகையும், கோலம் போடும்போது புறங்கையால் கன்னத்தில் விழும் முடிக்கற்றையை கோதிக்கொள்ளும் பாங்கில்



நான் இருக்கிறேனாவென்று ஒரு நொடி கவனித்து சட்டென்று கோலத்தில் ஆழ்ந்துவிடுவதாக காட்டிக்கொள்ளும் அழகையும் ரசித்தபடி நின்று கொண்டிருந்தேன். வீட்டுக்குள் இருந்து அழைப்பு சத்தம் கேட்க, அவசர அவசரமாக கோலத்தை முடித்துவிட்டு எழுந்து அதை ரசிப்பதுபோல மறுபடி ஒருகணம் என்புறம் பார்வை. மீண்டும் சத்தம் வர, வேகமாக வீட்டுக்குள் நுழையும் முன், என்னை பார்க்காமல் மின்னலின் ஒரு கணத்தில் என்னிடம் விடைபெறுவதாக கைகாட்டினாள். புகை கலைய ஆரம்பித்தது.

மிகவும் விலைமதிக்கமுடியாத, அல்லது மீண்டும் பெறமுடியாத புதையல் என்பது இது போன்ற கணநேர சந்தோஷங்கள்தான். இதை வார்த்தையில் சொல்லி விளங்கவைக்க முடியாது. அந்த கைகாட்டுதலின் பரவசம் அதிகாலை இருளை விலக்கி மிகப்பிரளயமான வெளிச்சத்தை பாய்ச்சியபடி என் கண்களின் வழியே ஊடுருவி உடல் முழுதும் ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தியது. அதை, அந்த கண நேர அனுபவத்தை உணர்ந்தவர்களுக்கு தெரியும். அதன்பின் என் சைக்கிளில் ஏறி அமர அது என்னை எங்கெங்கேயோ சுற்ற வைக்கும். வாய்விட்டு பாட்டு பாடச்சொல்லும். ஆளில்லாத மயான வெளியில் "ஆஆ..." வென சத்தமாய் கத்தச்சொல்லும். கையில் சிகரெட்டின் கடைசிநுனி சுட, அதை தவறவிட்டேன். பொறிகளை சிந்தியவாறு உருண்டோடியது அது.

மெதுவாக இருள் விலக ஆரம்பித்திருந்தது. மாடியின் சுவரில் வந்தமர்ந்த குருவிகள் தத்தித்தத்தி அருகே வர முயற்சித்தன. நான் அவற்றையே உறுத்துப்பார்க்க அவை என்னை பார்த்துச் சிரிப்பதாகத் தோன்றியது. தலையைச் சுற்றிச்சுற்றி அவை என்னை ஆழம் பார்த்தன. நான் மீண்டும் சிகரெட்டைப் பற்றவைக்கும் சத்தத்தால் பதறி படபடவென்று சிறகடித்தபடி ஓட ஆரம்பித்தன.

பானு இதே போல்தான் பதறுவாள்.

"இதோட மூணாவதுடா…." என்று என் தோளில் சாய்ந்தபடி என்னை பார்த்து சொல்லுவாள். அவள் கண்களில் கோபமும் ஆதங்கமும் இருக்கும்.

"இதான் கடைசி…"

"இப்படிதான் போன சிகரெட்டுக்கும் சொன்ன…."

"சந்தோசமா இருக்குடீ, நீ என் தோளில் சாய்ந்து பேசிக்கிட்டு இருக்க… எனக்கு அதை கொண்டாட எதாவது பண்ணனும். அதான் பத்த வச்சுக்கிட்டே இருக்கேன்."



"அட திமிர் பிடிச்சவனே…. நீ தம்மடிக்க இப்படிலாமா சாக்கு சொல்லுவ? நானும் பத்த வச்சுக்கிட்டா?" "வேணுமா?"

"பிஞ்சுடும்… நாத்தம் தாங்கலை… முதல்ல அதை தூர எறி" என்று கத்த ஆரம்பிப்பாள். சிரித்தபடி ஆழமாய் இழுத்துவிட்டு தூரப்போடுவேன்.

"இதெல்லாம் கெடுதல்டா… உனக்கும் எதாவது ஒண்ணுன்னா என்னை நினைச்சுபாரு? விட்டுடுடா… நல்ல பையன்தான் நீ… இதெல்லாம் எப்படி கத்துகிட்ட…?"

குறைத்துவிட்டேன். சரசுக்கு தெரியாமல் காப்பாற்றுவதே பெரிது. ஆனாலும் நான்கைந்து ஆகிவிடுகிறது. ஒருவேளை அப்போதே விட்டிருந்தால் என் கதை மாறியிருக்குமா என்றெல்லாம் குழப்பியது. பானுமதியின் அப்பா புகைபிடிப்பவர் இல்லை. அவள் ஒரே பெண். அவளின் அப்பா ஓய்வு காலத்திற்குப்பின் வீட்டின் முன்புறம் சின்னதாக க்ளினிக் வைத்து நடத்தி வந்தார். அரசு மருத்துவராக இருந்தபோதே ஓரளவு நல்ல பெயர் உடையவர். அவர்கள் குடியிருக்கும் வீட்டுடன் ஒட்டிய மூன்று வீடுகளின் வாடகை கணிசமான வருமானம். அத்தனை சொத்துக்களும் பானுமதிக்கே சேரும்.

"என்னை ஏத்துக்குவாங்களா பானு?" என்பேன்.

"நான் சொன்னா கண்டிப்பா ஏத்துக்குவாங்க… ஏன் திடீர்னு இப்படி ஒரு கேள்வி?"

"பயமா இருக்குடீ…."

"கொஞ்சம் பொறுமையா இரு… எல்லாம் நல்லதாவே நடக்கும்" என்று என் மடியில் படுத்தபடி என் சட்டைக் காலரை இழுத்தபடி பேசுவாள். அவள் கண்களில் வழியும் அந்த அன்பின் வீச்சை தாங்கமுடியாமல் என் கண்கள் கலங்கிவிடும். அன்பானவள் அவள். ஒரு சிறு உயிருக்கும் தீங்கு நினைக்காத முழுமையான அன்பின் உருவம் அவள். உலகில் தப்பிப்பிறந்த தெய்வப்பிறவி. என்னை மீறி என் கண்கள் கலங்க ஆரம்பித்தது. கதவை தட்டும் சத்தம் கேட்க சட்டென்று சிகரெட்டை அணைத்து துண்டுகளை பொறுக்கி மொட்டைமாடிச் சுவற்றை தாண்டி வெளியே எறிந்தேன். கதவை திறந்தேன். சரசு கைகளில் டீ டம்ளருடன் நின்றுகொண்டிருந்தாள்.

"என்னங்க…காலையில் இங்க….?" என்றபடி டீயை தர அதை தள்ளி நின்று வாங்கிக்கொண்டு சுவரோரமாய் நகர்ந்தேன்.

"வந்து, ஃபோன் வந்தது சரசு… நீ தூங்கிக்கிட்டு இருந்தியா… அதான் டிஸ்டர்ப் பண்ணாம இங்க வந்தேன்."

"ஓ… யார் அது… காலையிலயே…?" என்று கேட்டபடி அவளும் என் அருகில் வந்தவள் "தம்மடிச்சீங்களா?" என்று முறைத்தவாறு கேட்டாள்.

"அது… அந்த செல்வம் பேசினான்பா. விஜயராஜ் இறந்துட்டதா…"

அவள் கவனம் மாற, "யாரது விஜயராஜ்?" என்றாள்.

“என் ஃப்ரெண்டு பானு இல்ல…? போனமாசம்கூட கோயில்ல பாத்தியே… ஹாஸ்பிடல்ல ஒரு டாக்டரை கன்சல்ட் பண்ணச்சொன்னாங்களே”

“ஆமா… உங்க நெருங்கிய ஃப்ரெண்டு… பாத்து நாலஞ்சு வருஷமாச்சுன்னு சொன்னிங்களே…”

“அதான்பா… அவங்க வீட்டுக்காரர்…”

“அடக்கடவுளே… அன்னிக்கு கோயில்ல கூட பார்த்தோமேங்க…நல்லா சிவப்பா… அவர்கூட கலெக்டரேட்ல வொர்க் பண்றார்னு நினைக்கிறேன்”

“அவரேதான்பா… ”

“சின்ன வயசுப்பா… அட்டாக்கா…?”

“இல்ல சரசு…ஆக்சிடெண்ட்…”



சரசுவின் முகம் வெகுவாக மாறிப்போனது. என்னோடு பேசும்போது எதுவும் தெரியாதது போல ‘அவங்களா’ என்பதாக பேசுவாள். ஆனால் சில சமயம் பானுவைப்பற்றி பேசும்போது என் முகம் பிரகாசமாவதையும், சில பரிசு பொருட்களை நான் என் அட்டத்து பெட்டியில் பத்திரமாக வைத்திருப்பதையும் கவனித்திருக்கிறாள். ஒரு சில சமயம்… ‘உங்க பானுவா’ என்பாள். சற்றே யோசிக்கும்போது நான் நாள்முழுவதும் பானுவைப் பற்றியே நினைத்திருக்கிறேன் என்பது எனக்கே இப்போதுதான் புலனாயிற்று. வாரத்தில் இரண்டு மூன்று தடவையாவது அவளைப்பற்றி சரசுவிடம் பேசியிருக்கிறேன். அவளும் அதை கவனிக்காதது போலவும் அதே சமயம் அதை பேசுவதால் நான் சற்று ஆசுவாசமாய் இருப்பதை கவனித்திருக்கிறாள் என்பதையும் அவள் கண்களில் இப்போது படித்தேன்.

ஒரு மின்னல்போல எல்லாம் நடந்து முடிந்துபோனது. இரண்டு ஆண்டுகாலம் பானுவுடன் இருந்திருப்பேன். அவளையோ என்னையோ தனித்தனியாக பிரித்து பார்ப்பதே இயலாத நாட்கள். பெயரளவில் அவள் பெண்ணாகவும், நான் ஆணாகவும்… இரு வேறு உடல்களில் ஒரே உயிர் போலதான் இருந்தோம். என் முகத்தை பார்த்தே என் மனதில் இருப்பதை சொல்வாள். மிக சந்தோஷமாக இருப்பதாக அவள் ஃபோன் செய்யும்போது இயல்பாகவே என் மனம் சந்தோஷத்தில் இருந்திருக்கும். சட்டென்று ஒரு சோர்வு வரும்போது அவளுக்கு ஃபோன் செய்து ‘ஏன்பா டல்லா இருக்க?’ என்று கேட்கலாம். ‘அட கூடவே இருந்து பார்த்தது போலவே கேட்கற பாரு’ என்பாள்.

இத்தனைக்கும் நாங்கள் பழக ஆரம்பித்ததே ஒரு விபத்து போலதான். என் நண்பனின் திருமணத்தில் அவளை சந்தித்தேன். பெண்ணின் தோழியாக அவளும் மாப்பிள்ளையுடன் நானும் இருக்க, அவர்களுக்கு மேக்கப், இன்னபிற விஷங்களில் நாங்கள் கலந்து பேச, ஒரு இனம் புரியாத ஈர்ப்பு எங்களுக்குள் ஏற்பட்டது. ஒரே ரசனை, ஒரே குணம், அதில்லாமல் எனக்கானவள் அவள் என்பதான ஒரு ஜென்மபந்தம் அது.

சிலதடவை எங்கள் வீட்டுக்கும் வந்து போயிருக்கிறாள். எங்களுடையது ஒரு சிறு ஓட்டு வீடு அப்போது. அவர்களுடன் ஒப்பிடும்போது மிகவும் சிறியது அது. அளவில், வசதியில் எல்லாமே. ஆனால் சிறு தயக்கமும் இல்லாமல் தன்னுடைய வருங்கால வீடு என்பதான ஆர்வத்தில் சுற்றிச்சுற்றி வருவாள். அவள் வரும்போது முடிந்தவரை ஆளில்லாமல் பார்த்துக்கொள்வேன். டீ போடுவோம், சிறு சமையல் செய்வோம். அது சமயம் எங்களின் கைகள் மோதிக்கொள்ளும். அதுகூட அழகானதாகவே இருக்கும். என் மடியில் படுத்தபடி எதாவது பேசிக்கொண்டே இருப்பாள். அவள் போனதும், என்ன பேசினோம் என்பதே ஞாபகத்தில் இருக்காது, முழுவதும் அவள் உதட்டசைவை, கண்களை, அந்த விரல்கள் என் விரல்களுடன் விளையாடுவதை மட்டுமே ரசித்துக்கொண்டு இருந்திருப்பேன். எல்லாம் கூடிவரும்போலதான் தெரிந்தது. உலகிலேயே மிகவும் அதிர்ஷ்டம் செய்த ஒரு ஜீவனாக என்னை நினைத்துக்கொண்டிருந்தேன்.

“எப்படி பானு என்னை உனக்கு பிடிச்சது?” என்பேன்.

“நீதான் ஆள் மயக்கியாச்சே… அதான் என்னை மயக்கிட்ட” என்று கொஞ்சுவாள்.

“உன் அழகுக்கு நான் கொஞ்சம் டல்லுதானில்ல….”

“நீதான் என் அழகன்… என் கோணபல்லன்…” என்பாள்.

“எப்படி உன் அப்பாகிட்ட பேசுவேன் நான் ” என்று தயங்குவேன்.

“நான் ஒரு நாள் சொல்றேன்... ரெடி பண்ணி வைக்கிறேன். வா... வந்து, இதோ பாருங்க மிஸ்டர் கண்ணபிரான்... நான் உங்க பொண்ணை விரும்பறேன். கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன். உங்க பணம் ஒரு பைசா வேணாம். நீங்களா ஒத்துகிட்டா உங்களுக்கு மரியாதை... அப்படின்னு கெத்தா அடிச்சுவிடு... நானும் ஆமான்னு உன் பக்கம் நிக்கறேன். அவ்ளோதான்.” என்று சிரித்தபடி சொல்லுவாள்.

அப்படி ஒருதடவை அவர்கள் வீட்டுக்கும் போய்விட்டேன். என்ன செய்வது என்று தெரியாமல் அந்த கண்ணபிரானிடம் இல்லாத காய்ச்சலுக்கு ஒரு ஊசியை போட்டுக்கொண்டு திருதிருவென்று விழித்தபடி இருக்க, அவளோ ஓரக்கண்ணால் என்னை பார்த்து சிரித்தபடி “அப்பா... இது என் ஸ்கூல்மேட்... பாத்து கம்மியா ஃபீஸ் வாங்குங்க” என்று சொல்லிவிட்டு சிரிப்பை அடக்கியபடி உள்ளே ஓடிவிட்டாள். அவர் என்னிடம் ஃபீஸே வாங்கவில்லை. அதன்பின் அடிக்கடி அவரை வழியில் பார்த்து என் முகத்தை அவர் மனதில் பதிய வைக்க முயன்றுகொண்டிருந்தேன்.

சட்டென்று ஒரு நாளில் பானுவின் பேச்சு என்னிடம் தடைபட்டது. எதுவும் சண்டையோ மனஸ்தாபமோ எதுவுமே இல்லை. என்னை பார்ப்பதையே தவிர்த்தாள். நான் தொடர்ந்து அவளுக்கு மெசேஜ் போட முயல... சில நாளில் என்னை ப்ளாக் செய்தும் வைத்தாள். என்ன காரணம் என்றே தெரியாமல் அந்த நரக மாதங்களில் பைத்தியமாகவே அலைந்தேன். அப்படி ஒரு நாளில்தான் கண்ணபிரான் என்னை வழியில் சந்தித்தார்.

“தம்பி... பானுவோட ஃப்ரெண்டுதானே நீங்க...?”

“வந்து... ஆமாங்க...அது...”

“ஓகே... சாயந்திரம் வீட்டுக்கு வரீங்களா... பேசணும்”

பயமும் பதட்டமுமாக, இருப்பதில் நல்ல சட்டையாக மாட்டிக்கொண்டு, நன்றாக சேவ் செய்த முகத்துடன் நெற்றியில் நீறு எல்லாம் வைத்துக்கொண்டு அவர்கள் வீட்டுக்கு போனேன். பானு வந்து டீ கொடுத்தாள்.

“தம்பி...பானுவோட கல்யாணத்துக்கு நண்பர்கள் நீங்க எல்லாம் முதல் நாளே வந்து உதவி பண்ணனும்... நெருங்கிய நண்பர்களை ஒவ்வொருத்தரா கேட்டு கேட்டு உதவி வாங்கறேன். அதிக சொந்தமில்லை பாருப்பா... அம்மா இல்லாத ஒரே பொண்ணு... நீங்களாம் வந்துதான்......”



பானு வெளியே வரவேயில்லை. அவள் அப்பா தந்த பத்திரிக்கையை பார்த்தேன். மிக வசதியான மாப்பிள்ளைதான் போல. விஜயராஜ். அரசு வேலை. சொந்த வீடுகள், சொத்து. பானுவுக்கு தகுந்த வரனாகத்தான் தெரிந்தது. வீட்டோடு வந்துவிடுவதாக மாப்பிள்ளை சொல்லியிருந்தாராம். மிகவும் மகிழ்வாக என்னை காட்டிக்கொண்டு கல்யாணத்துக்கு முதல் நாளிலேயே போய்விட்டேன். என் வீட்டு விஷேசம் போல அனைத்து வேலைகளையும் எடுத்துபோட்டுக்கொண்டு செய்தேன். பெண்ணழைப்பின் போது ஒரு தேவதை போல பானுவை அலங்கரித்து கூட்டிவந்தார்கள். வைத்தகண் வாங்காமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன். இந்த தேவதையை என்னுடன் இணைத்து வாழும் வாழ்வை நினைத்து நானே சிரித்துக்கொண்டேன். அவள் என்னுடன் பழகிய நாட்கள் எனக்கு அவள் நட்பின்பால் அளித்த மாபெரும் பரிசாகவே தோன்றியது. என் ஒவ்வொரு சுக துக்கங்களிலும் அவளது நினைவுகளே துணையாக இருப்பதை அனுபவப்பூர்வமாக உணர்ந்தேன். எனினும் அவள் கழுத்தில் தாலியேறும்போது நான் வெளியேறிவிட்டேன்.

அதன்பின் நான் வெளியூருக்கு சென்று வேலை தேடிக்கொண்டேன். இரண்டு ஆண்டுகள் அவளை முழுதாக பார்க்கவேயில்லை. என் மனதில் இருப்பதையெல்லாம் நண்பன் செல்வம் இடம் அவ்வப்போது உளறிக்கொண்டிருப்பேன். மிகவும் நம்பிக்கையானவன் ஆதலால் அவனுடன் பகிர்ந்துகொள்வது எனக்கு ஆபத்தில்லாததாகவும், மனதுக்கு சற்று இதம் தருவதாகவும் இருந்தது. அப்படி ஊருக்கு வந்த ஒரு சமயம் அழகான குழந்தையுடன் அவளை சந்தித்தேன். கூட இருந்த விஜயராஜிடம் என்னை அறிமுகப்படுத்தினாள் அவள்.

“ஓ... இவரை நம்ம கல்யாண ஃபோட்டோவில் பார்த்திருக்கேன்....” என்றார் விஜயராஜ்.

“என் ஸ்கூல்மேட்... நல்ல ஃப்ரெண்ட்... ஏண்டா...நீ இன்னும் கல்யாணம் பண்ணாம இருக்க... உன்னை அந்த கோலத்தில் நாங்க பார்க்கணுமே...”

அதே மாதத்தில் வீட்டில் சொல்லி சரசுவை நான் திருமணம் செய்துகொண்டேன். என் திருமணத்திற்கு பானு மட்டும் குழந்தையுடன் வந்துபோனாள். பலதடவை என் நண்பர்களை பற்றி சரசுவிடம் பேசியிருக்கிறேன். பானுவை கொஞ்சம் அதிகமாக. சென்ற மாதம் அவளை சந்தித்த போது மிகவும் மகிழ்வாக உணர்ந்தேன். அவள் சரசுவுடன் நீண்ட நாள் பழகிய தோரணையில் ஒருமணி நேரம் பேசிக்கொண்டிருந்தாள். குழந்தை பிறக்காமல் இருப்பதையும், அதற்கான ட்ரீட்மெண்ட் எடுத்துக்கொண்டிருப்பதையும் சரசு சொல்ல, பானுவே ஒரு டாக்டரை ரெகமண்ட் செய்தாள். அப்போது வந்த விஜயராஜை சரசுவுக்கும் அறிமுகப்படுத்தினாள். அவள் சந்தோஷமாக இருப்பதை பார்க்கும்போது என்னுடன் இருந்திருந்தாள் அவளுக்கு இதே சந்தோஷம் கிடைத்திருக்காது என்றே தோன்றியது. சரசு என்னுடன் இணைவதற்காகவே பானு என்னை விட்டுக்கொடுத்திருக்கிறாள் என்றுகூட எனக்குத் தோன்றும்.

“நீங்க போக வேணாம்ங்க” என்றாள் சரசு.

“அதெப்படிபா...கேட்டு போகாம இருக்க முடியும்? நல்ல ஃப்ரெண்டுபா”

“புரியுது. ஆனா உங்களுக்கு மனசு தாங்காது. சொன்னா கேளுங்க... யாரோ எவரோ... சொந்தம்னாகூட தெரிஞ்சுக்காது... ஆனா நல்ல ஃப்ரெண்டுக்கு இது ஒரு பெரிய இழப்பு. கண்டிப்பா உங்க மனசுக்கு கஷ்டமா இருக்கும்.... குழந்தைக்கு மூணு வயசுதான் போல... பாவமே... கடவுளுக்கு கண்ணே இல்லைன்னு இதான் சொல்லுவாங்க போல”

“சும்மா போய் எட்டி பார்த்துட்டு வந்திடறேன் சரசு... நீயும் வா... போனதும் வந்திடலாம்”

“நானா.... தெய்வமே... நானெல்லாம் அழுது புலம்பிடுவேன். காரியத்துக்கு போயிட்டு வாப்பா... இப்ப வெளியூர்னு சொல்லு” என்று சரசு சொல்லிகொண்டிருக்கும்போதே செல்வம் கால் செய்தான். வீட்டுக்கு வந்துகொண்டிருப்பதாக சொன்னான். செல்வம் எனக்கு நெருங்கிய நண்பன், அதே போல பானுவுக்கு ஏதோ வகையில் சொந்தம். சிறிது நேரத்தில் செல்வம் வர, நானும் அவனுடன் கிளம்பினேன். வழியில் நான்கைந்து சிகரெட்டுகளை முடித்தோம்.



அவனுடன் அதிகம் பேச முடியவில்லை. ஆனால் என்ன கண்கள் கலங்கியபடி இருப்பதை கண்டுகொண்ட அவன் ஆறுதல் சொல்லுவதாக பேசிக்கொண்டே வந்தான். நேற்று இரவே நடந்திருக்கிறது என்றான். பைக்கில் போனவர் மேல் லாரி மோதியிருக்கிறது. முகம் முழுவதும் சிதைந்து.... போஸ்ட்மார்ட்டம் முடிந்து பாடி வந்துவிட்டதாக அவனுக்கு தகவல் வந்தது. பெரிய மாலையாக வாங்கிக்கொண்டு பானுவின் வீட்டுக்குப் போனோம்.

எனக்கு கால்கள் மிகவும் நடுக்கம் பிடித்தது. மயக்கம் வருவது போலவும் இருந்தது. நேற்று இரவு பானு எவ்வளவு நிம்மதியாக இருந்திருப்பாள். குழந்தையை கொஞ்சிக்கொண்டு.... வரப்போகும் கணவனை வரவேற்க... அவனுக்கு டிஃபன் செய்துகொண்டு... இந்த வாரம் எங்கெல்லாம் போக திட்டமிட்டிருப்பார்கள். ஃபோன் வந்திருக்கும்.... இதுபோல உன் கணவன் ஆக்ஸிடெண்ட்... அய்யோ கடவுளே ... என்ன பாடுபட்டிருக்கும் அவள் மனம். இன்னமும் இளம் வயதின் நடுப்பகுதியையகூட அவள் தாண்டவில்லையே.... நான் இன்னும் கல்யாணம் பண்ணாமல் இருந்திருந்தால் பானுவை ஏற்றுக்கொண்டிருப்பேனே... என்றெல்லாம் மனம் பலவாறாக புலம்பிக்கொண்டே வந்தது. இன்னும் சில மாதங்களில் அவள் மனம் ஆறுதலடையும். அது சமயம் அவள் அப்பாவிடம் பேசி அவளுக்கு இன்னொரு கல்யாணம் செய்து வைத்துவிட வேண்டும் என்றும் மனதுக்குள் ஒரு எண்ணம் தோன்றியது.

வாசலில் நல்ல கும்பல். வீட்டிற்குள் ஐஸ்பெட்டி நுழையாததால், வாசலிலேயே கிடத்தியிருந்தார்கள். விஜயராஜ் நல்ல அழகு. என்னை விட ஒரடி உயரம். நல்ல ஜிம் பாடி.

ஆனால் எல்லாம் மூட்டை கட்டி முகம்கூட தெரியாமல் இருந்தது அந்த உருவம். பகீரென்றது, மனித வாழ்வின் விசித்திரங்களை, அதன் விளையாட்டை, ரசித்து கடந்து செல்லும் ஞானியின் மனநிலையை எல்லோரும் பெறமுடிந்தால் எவ்வளவு அழகாக இருக்கும் என்று மனம் புலம்பியது. என் கண்கள் பானுவைத் தேடின. அவள் அங்கே இல்லை. செல்வம் தன் கண்களால் பானு உள்ளே இருப்பதாக சைகை காட்டினான். நான் ஓரமாக உட்கார்ந்து அங்கிருந்தபடியே அவளை தேடினேன். என் கண்களில் படவில்லை.



நிறைய கார்கள், நிறைய பெரிய மனிதர்கள். பானுவின் அப்பா மிகவும் சோர்வாக காணப்பட்டார். இருந்தாலும் அங்கும் இங்கும் அலைந்தபடி அவர் இருப்பதை காண பரிதாபமாக இருந்தது. பானுவின் குழந்தை என்று நினைக்கிறேன். ஓரிரு தடவை மட்டும் பார்த்ததால் எனக்கு சரியாக தெரியவில்லை. அது அந்த ஐஸ்பெட்டியை தொட்டு அதன் குளிர்ச்சியை தடவி சிரித்து விளையாடிக்கொண்டிருந்தது. நல்லவேளையாக சரசுவை கூட்டி வரவில்லை என்று மனதில் நினைத்துக்கொண்டேன். குழந்தையை பார்த்தவுடன் அவள் மனமே வெடித்திருக்கும்.

சிகரெட் பிடிக்கவேண்டும் போல இருந்தது. வெளியே சென்றுவரலாம் என்று எழ, செல்வம் வீட்டுக்குள் இருந்து என்ன என்று கேட்டான். விரல்களால் சைகை காட்டினேன். அவன் கை காட்டி கூப்பிட்டான். தயங்கியபடி வீட்டிற்குள் நுழைந்தேன். பானுவின் கோலத்தை எப்படி மனதில் ஏற்றுக்கொள்வேன் என்று படபடப்பாக இருந்தது. வாழ்வின் மிகக்கொடுமையான கணங்களாக உணர்ந்தேன். ஆனால் வீடு வெறிச்சோடி இருந்தது. ஓரிருவர் மட்டும் உள்ளும் புறமுமாக நடந்துகொண்டிருந்தார்கள்.
"பானு இல்லையா...செல்வம்?"

"அவங்க ரூம்ல இருப்பாங்க போலடா... அவங்களை பார்க்க வேணாம்... மாடியில சிலபேர் தம் போட்டு இருக்காங்க. அதான் கூப்பிட்டேன்" என்றான் செல்வம்.

படிகளில் ஏறினோம். வாசலை ஒட்டி மாடிக்கு ஏறும் படி அது. வந்திருந்தவர்களில் ஒரு சிலர் அங்கே ஒதுங்கி சிகரெட் பிடித்தபடி இருந்தார்கள். பால்கனியில் சென்று சேர்ந்தது அந்த படி. அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்து நானும் செல்வமும் பற்ற வைத்தோம்.

"பாவம்தான் இல்ல...?" என்றேன் நான்.

"பரிதாபம்டா... இது ரொம்ப கொடுமை....சின்ன வயசுடா...அந்த குழந்தைய பார்த்தியா...."

"அதை சொல்லாதே.... அழுகையா வருது எனக்கே..."

"இல்லல்ல, நீ தைரியமா இரு. என்ன? இந்தாள் இப்ப போயிட்டான்... கொஞ்ச வருஷம்தான்... நாம எல்லோரும் போகவேண்டியவங்கதான்... எதுவும் நிரந்தரமில்ல. அதை நினைச்சு தைரியமா இரு. இப்ப நாம நினைக்க வேண்டியது, கொஞ்சநாள் கழிச்சு... இந்த பெண்ணுக்கு என்ன செய்யணும்னுதான்..."

"இன்னொரு கல்யாணம் பண்ணி வச்சிருலாம்... அவங்க சொந்தக்காரங்ககிட்ட எல்லாம் பேசி...."

"அது சரிதான். நமக்கு முன்னயே அதை எல்லோரும் யோசிச்சிருப்பாங்க... ஆனா பானுவோட விருப்பம்னு ஒண்ணு இருக்கில்ல... அதை மறந்திடக்கூடாது... அதான் முக்கியம்"

"நீ அவளை பார்த்தியா?... இப்ப?"

"ம்... வந்தவுடனே வாசலுக்கு பக்கம்தான் இருந்தா....பாவம். ரொம்ப இடிஞ்சு போயிருந்தா. என்னாலேயே கொஞ்ச நேரம்கூட பேச முடியலை..."
"அவ பேசினாளா....?"

"குழந்தையை பார்த்துக்குங்க... அப்பாவுக்கு உதவி பண்ணுங்க... இதான்... அப்புறம்.... உன்னைய கேட்டாடா... வருவியான்னு கேட்டா..."

"நிஜமாவாடா சொல்ற?....என்னையா?"

"ஆமாடா...ஏதோ உன்னை பார்த்தா அவளுக்கு ஆறுதலா இருக்கும்னு நினைச்சிருப்பா போல... போகும்போது பார்த்துட்டு போ..." என்றான் செல்வம்.

எனக்கு என்னை மீறி அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. மிகவும் சிரமத்தினூடே அதை அடக்கியவாறு தொடர்ந்து அடுத்த சிகரெட்டை பற்ற வைத்தேன்.



செல்வம் இறங்கி கீழே செல்ல, அந்த பால்கனியைச் சுற்றி என் கண்களை மேயவிட்டேன். வசதியான வீடு. அங்கிருந்த புகைப்படங்களில் விஜயராஜ், அவனது குழந்தை, கூடவே பானு என்று மிகப்பெரிதாக புகைப்படங்கள் மாட்டியிருந்தன. அழகாக சிரித்தபடி இருந்தாள் பானு. சற்று குண்டாக இருந்தாள். சில படங்கள் கிராஃபிக்ஸ் செய்யப்பட்டிருந்தன. சிலது வரையப்பட்டிருந்தன. எழுந்து கீழே கவனித்தேன். கும்பல் வந்துகொண்டே இருந்தது. விஜயராஜ் பிரபலமானவன்தான் என்று தோன்றியது.

கீழே இறங்கலாம் என்று நினைக்கும்போது யாரோ என்னையே உறுத்துப்பார்ப்பதாகத் தோன்ற சற்று நிதானித்து பார்வையை சுழலவிட்டேன். நானிருந்த இடம் ஆழ்ந்து கவனித்தாலே என்னை தெரியும் விதமாக மாடியில் சற்றே ஒதுங்கியிருந்தது. கும்பலில் தெரிந்தமுகம் யாரும் இல்லை. விஜயராஜை கிடத்தியிருந்த வாசலின் கிழக்குப்புறமாய் இருந்த ஓரிடத்தில் சில பெண்கள் இருப்பதை கவனித்தேன். அங்கிருந்து பானு என்னையே பார்த்துக்கொண்டிருப்பது தெரிந்தது.

சிகரெட்டை கீழே போடப்போனவன் போடாமல் அப்படியே இழுத்தேன். பானு என்னை பரிதாபமாக பார்த்துக்கொண்டிருந்தாள். என்மனதில் ஏன் அப்படி ஒரு சாத்தான் புகுந்ததோ தெரியவில்லை. அவளை பார்த்து கண்கள் வெறிக்க சட்டென்று சிரித்தேன். என் சிரிப்பை கண்டு அதிர்ந்துபோனாள் அவள்.

# நிஸ்வாவின் நிழலில் பகுதி – 6 : கணவாயும் குளங்களும்!!!



• இளங்கோ ராமசாமி

இத்தனை நாட்களாக உங்களை அழைத்துக் கொண்டு நிஸ்வாவின் பெருமையான வரலாற்றுச் சின்னங்களையும் கலாச்சாரப் பெருமைகளையும் சுற்றிக் காட்டியதெல்லாம் கால் தூசுக்குக் கூடப் பெறாது என கால் வைத்த கணம் “தேவதையைக் கண்டேன் காதலில் விழுந்தேன்” என மனம் உற்சாகத்தில் பாட்டுப் பாடத் துவங்கி விடும் இடம் “வாதி முஹைதீன்”.

ஓமான் இயற்கையால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு சொர்க்க பூமி. இங்கு அழகிய கடற்கரைகள் உண்டு; ஓங்கியுயர்ந்த கரடு முரடான மலைத் தொடர்கள் உண்டு, பரந்து விரிந்த பாலை நிலமும், மணற் குன்றுகளும் உண்டு ஆனால் இவையனைத்தையும் விட இங்குள்ள நெடிந்துயர்ந்த நம்மை மலைக்க வைக்கும், “வாதி” என்றழைக்கப்படும் கணவாய்களே என் மனம் கவர்ந்தவை.

இங்குள்ள ஒவ்வொரு கணவாயும் தனித்தன்மையானவை. அவற்றின் பிரம்மாண்டம் மயிர்கூச்சரியச் செய்யக் கூடியது. எத்தனை முறை சென்றாலும் இரு புறமும் ஓங்கியுயர்ந்து, வளைந்து நெளிந்து செல்லும் கணவாய்களும், அண்ணாந்து பார்த்தால் பளிச்சென்ற நீல நிறத்தில் கண்ணைப் பறிக்கும் வானும் ஆங்காங்கே தென்படும் பேரீட்சை, வாழை, மா, எலுமிச்சை மற்றும் இலந்தை மரங்களும், பெரும் பெரும் பாறைகளும், பளிங்கு போன்ற நீரோடைகளும், மரகதப் பச்சை அல்லது துத்தநாக ஊதா நிறக் குளங்களும் அவற்றின் ஆழத்தில் கிடக்கும் கூழாங் கற்களும், நீந்திக் கொண்டிருக்கும் சிறு சிறு மீன்களும் நம் விழிகளை விரிய வைப்பன.



நிஸ்வாவில் நாங்கள் வசிக்கும் கல்லூரி வளாகத்தில் இருந்து பதினைந்தே நிமிடத் தொலைவில் இருக்கும் "வாதி முஹைதீன்" என்ற கணவாய்க்குள் தான் நான் இன்று உங்களை அழைத்துச் செல்லப் போகிறேன். கடந்த அத்தியாயத்தில் நாம் கண்டு ரசித்த "அல் கத்மீன்" ஃபலஜ்ஜில் இருந்து "ஜபல் அக்தர்" என்ற மலைப் பிரதேசத்திற்குச் செல்லும் சாலையில் மூன்று கி.மீ தூரம் சென்ற பிறகு இடது புறம் இறங்கினால் அந்தக் கணவாய்க்குள் செல்லும் மண் சாலையைக் காண முடியும்.

கரடு முரடான அந்தப் பாதையில் புழுதியைக் கிளப்பிக் கொண்டு செல்லும் ஒரிரு வாகனங்களின் பின்னணியில் நீல வானம் வரை நெடிந்துயர்ந்து நின்று மிரட்டும் மலை முகடுகள் இயற்கையின் முன் நாம் எவ்வளவு அற்பமானவர்கள் என்பதை உணர்த்தும். ஆங்கில எழுத்தான V போலத் தோன்றும் கணவாயின் அகன்ற முகப்பு நாம் உள்ளே செல்லச் செல்ல மேலும் மேலும் அகன்று நம்மை ஒரே சமயத்தில் திகைப்பிற்குள்ளும், ஆச்சரியத்திற்குள்ளும் ஆழ்த்தும்.

பல இடங்களில் நாம் காணும் அழகிய பாறை மடிப்புகளின் நிழல் அப்படியே பாயை விரித்துப் போட்டுப் படுத்துக் கொள்ளலாம், வேறு எங்கும் செல்ல வேண்டாம் எனச் சுண்டி இழுக்கும். காலை, மாலை, இரவு, நண்பகல் என எந்த நேரத்தில் சென்றாலும் சூழல் அவ்வளவு ரம்யமாகவும், நிசப்தமாகவும் இருக்கும்.

சாலையின் முடிவில் தோப்புகளும், ஒரு சில வீடுகளும் இருக்கின்றன. மீறிப் போனால் பத்துப் பதினைந்து குடும்பங்கள் வாழக் கூடும். ஆடு மேய்ப்பதும், பேரிட்சை மரங்களைப் பர்த்துக் கொள்வதும் அவர்களது பிரதான தொழில்.

ஒரு கட்டத்திற்கு மேல் சிறிய செடான் கார்களை உள்ளே ஓட்டிச் செல்ல முடியாது. அதனால் தோப்புகள் இருக்கும் இடத்தில் வண்டியை நிறுத்திவிட்டுக் கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் தொலைவு நடக்க வேண்டும். இதுவே ப்ராடோ அல்லது லேண்ட் க்ரூசர் போன்ற கனமான 4 x 4 வாகனங்களில் வருவோர் கடைசி வரை காரிலேயே செல்ல முடியும். இடைப்பட்ட ரகமான நமது வாகனம் செடான் கார்களை விட ஐநூறு மீட்டர் தூரம் உள்ளே செல்லும்.



பழங்கள், நொறுக்குத் தீனிகள், பானங்கள், மாற்றுடைகள், பிரித்துப் போட்டு அமர்வதற்குத் தேவையான பாய்கள், தரைவிரிப்புகள் என தேவையான பொருட்களை ஆளுக்கொன்றாகத் தூக்கிக் கொண்டு வளைந்து நெளிந்து செல்லும் வாய்க்கால் மீதே நடந்து செல்வது முதல் முறை செல்வோருக்கு ஒரு திகிலான அனுபவத்தை வழங்கும்.

தரையில் இருந்து பத்தடி உயரத்தில் ஒரு சிறு வாய்க்காலின் மீது நடப்பது சிலருக்குக் குலை நடுக்கத்தை ஏற்படுத்தக் கூடுமென்பதை அனுபவத்தில் உணர்ந்திருக்கிறேன்.

'வாதி முஹைதீன்' ஆண்டு முழுவதும் வற்றாத நீரோடைகளையும், பளிங்கு போன்ற குளங்களையும் கொண்டது. நாம் நடந்து செல்லும் வாய்க்கால் வாதியின் நீராதாரத்தோடு இணைவதை இங்கு வெகு எளிதாகக் காண முடியும். பல வாதிகளில் இந்த வாய்க்கால்கள் தோப்புகள் வழி வெகுதூரம் உள்ளே செல்லும். அவற்றின் துவக்கப் புள்ளியைக் கண்டறிவது கடினம். ஆனால் இங்கு அதனை வெகு எளிதாகக் காண முடியும்.

இந்த வாதி அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்றது. அதிக தொலைவு நடக்க முடியாதோர், பெரியவர்கள், அச்ச உணர்வுடையோர் துவக்கத்தில் இருக்கும் குளத்திலேயே நீந்தி மகிழலாம். தனிமையும் ஆழமான நீண்ட குளங்களையும் விரும்பும் உடல் வலுவும் துணிச்சலும் கொண்டோர் தொடர்ந்து முன்னேறலாம். கயிறுகளைக் கட்டி மலையேறும் பயிற்சியும், உடல் வலுவும் கொண்டோர் இந்த வாதியின் வழியாகவே ஜபல் அக்தரில் இருந்து பிர்கித் அல் மௌஸிற்கு இறங்க முடியும். அப்படி ஒரு குழுவினரோடு இறங்கியபோதுதான் இந்த வாதிக்குள் நுழையும் வழியை அறிந்து கொண்டேன்.

நீரோடைகளின் வழியே உருண்டு கிடக்கும் பெரும் பாறைகள் மீது தாவி ஏறியும், தாண்டியும் செல்வது குழந்தைகளுக்குப் பெரு மகிழ்ச்சியளிப்பதாக இருக்கும். செல்போன்களில் இருந்தும், கணிணித் திரைகளிலிருந்தும் கண்களை அகற்ற மறுக்கும் குழந்தைகளை இது போன்ற இயற்கை எழில் கொஞ்சம் இடங்களுக்கு அழைத்துச் சென்றால் நாள் முழுவதும் குதூகலமாக விளையாடிக் கொண்டிருப்பர்

இந்தக் கணவாயின் வலது புறம் மேலேறினால் பழைய இடிபாடுகளைக் காண முடியும். சிதிலமடைந்து கிடக்கும் மக்கள் வாழ்ந்த பழைய மண் வீடுகளைப் புனரமைத்தால் மிக அற்புதமான தங்கும் விடுதிகளாக மாறி வருமானத்தைக் கொட்டிக் கொடுக்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. ஏராளமான ஓமானி கிராமங்களும், நகரங்களின் சிதிலமடைந்த கைவிடப் பட்ட பழைய குடியிருப்புப் பகுதிகளும் இது போல புரைமைக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருகின்றன.

ஐம்பது டிகிரி வெயில் கொளுத்தும் கோடையின் உச்சமான ஜுலை ஆகஸ்டு மாதங்களிலும் இது போன்ற வாதிகளுக்குள் நுழைந்தால் அங்குள்ள குளிர்ந்த நீரோடைகளிலும் சிறு சிறு குளங்களிலும் நேரம் போவது தெரியாமல் ஊறிக் கொண்டிருக்கலாம். வாதி முஹைதீனின் குளங்கள் நீந்தத் தெரியாதவர்களுக்கும், குழந்தைகளுக்குமானவை. மற்ற புகழ்பெற்ற வாதிகளைப் போல அளவில் பெரிய ஆழமான நீச்சல் தெரியாது கடக்க முடியாத நீளமான குளங்கள் இந்த வாதியில் கிடையாது.

இக்கணவாய்க்குச் செல்லும் தொண்ணூறு சதவிகித மக்கள் நுழை வாயிலில் இருக்கும் ஒரு சில குளங்களோடு நின்று விடுவர். அப்படியே தொடர்ந்து நீண்ட, ஆழமான குளங்களை நாடி வெகு தூரம் உள்ளே செல்லும் கொஞ்சநஞ்ச சாகசக் காரர்களும் தவற விடும் ஒரு ரகசியக் குளம் இங்கு இருக்கிறது. அதுவும் 20 நிமிடங்களில் அடைந்து விடக் கூடிய தொலைவில் இருக்கும் அந்தக் குளம் ஓமானின் மிகச் சிறந்த பத்து இயற்கைக் குளங்களில் ஒன்று என என்னால் அடித்துச் சொல்ல முடியும்.





கணவாயின் இடது புறம் மூன்று மிகப் பெரிய பாறைகளால் சூழப்பட்டு ஒரு அழகிய நீர் சுழித்து ஓடும் இயற்கையான ஜக்கூஸி போல இருக்கும். "“வாதி ஷாப்”, “வாதி பாணி காலித்” போன்ற ஓமானின் மிகப் புகழ் பெற்ற கணவாய்கள் அளவிற்கு வாதி முஹைதீன் கவர்ச்சிகரமானதல்ல. ஆனால் அதன் காரணமாகவே இந்தக் கணவாய்க்குள் இன்று வரை வத வத வெனக் கூட்டம் இறங்காமல் இருக்கிறது. அது மட்டுமின்றி நான் குறிப்பிடும் இந்த ரகசியக் குளம் இது வரை பிரபலமடையாததும் எங்களைப் போன்ற உள்ளூர் வாசிகளுக்குப் பெரிய அனுகூலம்.

"“குணா” திரைப்படத்தில் உலக நாயகன் தனது காதலி குளிக்க வேண்டும் எனக் கேட்டவுடன் ஒரு அழகிய குளத்திற்கு அழைத்துச் செல்வாரில்லையா?, அதற்கொப்பான சொல்லப் போனால் அதை விட அழகான குளமிது. உங்கள் மனதிற்குப் பிரியமானவர்களை அசத்த வேண்டுமென நினைத்தால் அவர்களை இந்தக் குளத்திற்கு அழைத்துச் செல்ல முயற்சி செய்யுங்கள். அப்படிச் செய்தால் அவர்களிடம் நீங்கள் வேண்டும் வரமனைத்தும் போதும் போதுமெனத் திகட்டத் திகட்டக் கிடைக்கும்.

இப்படி வாதி முஹைதீனின் தெளிந்த நீரோடைகளில் வேண்டிய மட்டும் ஆட்டம் போட்டுக் களைத்த பின்னர் வண்டியேறி இசை ஞானியின் இசையின் துணையோடு மெல்ல ஜபல் அக்தர் மலையேறலாம். ஜேம்ஸ் பாண்ட் திரைப்படங்களில் வருவதைப் போன்ற அற்புதமான மலைப் பாதை. 2000 மீட்டர் உயரத்தில் இருக்கும் ஜபல் அக்தர் என்ற மலைப் பகுதியில் நிறைய சிறு சிறு கிராமங்கள் இருக்கின்றன.

ஆயிரத்து நூறு சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இம் மலைப் பகுதியில் ஐம்பதிற்கும் மேற்பட்ட சிறு சிறு கிராமங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட “அல் சோவ்க்ரா” (Al Sowgra) என்ற ஒரு அழகிய சிறு மலைக்கிராமத்திற்குத் தான் உங்களை அழைத்துச் செல்வதாகத் திட்டம். அக்கிராமத்தில் மொத்தமே ஐந்து குடும்பங்கள் மட்டுமே வாழ்கின்றன. அங்குள்ள ஒரு புகழ் பெற்ற “தி க்ளிஃப்” (The Cliff) என்ற விடுதியில் ஓரிரவு உங்களைத் தங்க வைத்துக் களிப்படையச் செய்ய விரும்புகிறேன்.

கணவாய்ப் பயணத்தில் கால்களுக்கும், உடலுக்கும் ஏற்பட்ட களைப்பிற்கு அழகிய மலைப் பாதையும்,



மனதை வருடும் இனிய இசையும் மருந்தாகட்டும். மதிய உணவிற்கு நாம் அந்த ஸ்வாக்ரா கிராமத்தைச் சென்றடைந்து விடலாம்.
அந்தக் கிராமம் குறித்தும் ஜபல் அக்தரின் பிற சிறப்புகள் குறித்தும் அடுத்த முறை விண்மீன் உதிக்கும் போது கதைக்கிறேன்.

# மீளுமா அந்த நிமிஷங்கள்

- பாத்திமா ஹம்தா




**நா**ன் பயணித்துக் கொண்டிருந்த பஸ் திடீரென நின்றது, காரணம் இளம்பெண்ணொருத்தி விபத்துக்குள்ளாகியிருந்தாள்.

வீதியெங்கும் இரத்தவெள்ளம். எல்லாரையும் போல் நானும் யன்னலுக்கு வெளியே எட்டிப்பார்த்தேன். அவள் முகத்தை பார்த்ததும் தான் தாமதம் பஸ்ஸிலிருந்து பாய்ந்து இறங்கி ஓடினேன் அவளுக்கருகில்... உள்ளம் பதறியது.

"எம்பூலன்ஸ்க்கு யாராவது போன் பண்ணுங்களேன்" என கத்தியப்படி அவளைத் தூக்க முயற்சித்துக் கொண்டிருந்தாள் ஒருத்தி.

அவள் ஆனந்தி.

என் ஆபீஸில் பணிபுரிபவள்.

"கலை சார் மலருக்கு ஆக்சிடண்ட் ஆயிடுச்சி..." பயத்தில் அவள் குரல் நடுங்கியது.

நான் எதுவுமே பேசாமல் மலரைத் தூக்கி அருகில் நின்ற ஆட்டோவில் ஏற்றினேன்.

ஆட்டோ ஹோஸ்பிட்டலை நோக்கி விரைந்தது.

ஆட்டோக்குள் ஆனந்தியும் இருந்தாள்.

'...மலர்... மலர்... எழுந்திரு...'வென என் கரங்களிலிருந்த மலரின் கன்னங்களைத் தட்டிக்கொண்டே வந்தாள். மலர் முற்றிலும் மயங்கியிருந்தாள்.

மலர் என் தாய்மாமன் மகள். மாமா இறந்து போயி மூன்று வருஷமாயிடுச்சு. மலருக்கு எல்லாமே அவள் தாய் மாமா தான். அவளும் என் அலுவலகத்தில்தான் பணிபுரிகிறாள்.

அவளின் அழகும் குணமும் என் அம்மாவை கட்டிப்போட்டிருந்தன. அதனால் அவளையே கல்யாணம் செய்துக் கொள்ள வேண்டுமென்று விடாப்பிடியாக இருக்கிறாள்.

மலரை அட்மிட் பண்ணிவிட்டு நானும் ஆனந்தியும் வெளியே காத்துக் கொண்டிருந்தோம்.

எனக்கருகில் அமர்ந்திருந்த ஆனந்தி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

"என்ன அவசரமாய் பேச்சு இவளுக்கு... கவனமாக வரத்தெரியாது..." என முணுமுணுத்தப்படி இருந்தேன்.

அது ஆனந்திக்கு கேட்டிருக்க வேண்டும் என்னை திரும்பி பார்த்தவள், "கலை சார்... அவள் உங்களைப் பார்க்கத்தான் வந்தாள்" என்றாள்.

நான் ஒரு கணம் திகைத்தேன்.

பின் அலட்சியமாக "ஏன் என்னைப் பார்க்க வரணும். நான் அன்றைக்கே சொல்லிட்டன்... மலர கல்யாணம் பண்ணிக்க சம்மதம் இல்லன்னு.. அதை பற்றி பேச வந்திருப்பாள்..." என்றேன் காரமாக..

"அது இல்ல சேர்" என்றவாறு அங்குமிங்குமாக ஏதோ தேடினாள்.

ஆனந்தி மலரின் பைக்குள் இருந்து ஒரு பொதியை கையில் தந்துவிட்டு "சேர் மலர் இன்றைக்கு லீவு எடுக்கிறதா என்னட்ட சொன்னாள். ஆனா நீங்க டிபன் பாக்சை வைச்சிட்டு போயிட்டதா உங்கம்மா போன் பண்ணி சொல்லவும், சீக்கிரமா டிபனை ரெடி பண்ணி நீங்க வந்த பஸ் பக்கமா ஓடி வரும்போது ஆட்டோல பட்டு ஆக்சிடண்ட் ஆகிடுச்சு ".



நான் சற்று தடுமாறினேன்.

அதை காட்டிக்கொள்ளாமல் "எனக்கு நேரமாயிடுச்சு. ஆபீஸுக்கு போகணும். மலர் முழிச்சதுக்கு அப்பறம் ஒரு போன் பண்ணுங்க ஆனந்தி" என்றுவிட்டு அவள் பதிலுக்கு கார்த்திராமல் வெளியேறி, பஸ் ஏறி மின்னல் வேகத்தில் ஆபீஸை அடைந்தேன்.

இன்று காலையிலும் கூட மலர் போன் பண்ணியிருந்தாள்.

"ஹலோ... கலை கொஞ்சம் உங்களோட பேசணும்" என்றாள்.

"எனக்கு நேரமில்ல மலர். நான் ஆபீசுக்கு கிளம்பிட்டு இருக்கன் " என அவள் அழைப்பைத் துண்டித்தேன்.

மீண்டும் போன் சிணுங்க "என்ன" என்றேன் அலட்சியமாக.

"பிளீஸ் கலை அஞ்சு நிமிஷம்.... எதுக்காக இன்னும்கூட கோவிச்சுட்டு இருக்க. நீங்க உங்க மனசுக்கு புடிச்ச பொண்ணா பார்த்து கட்டிக்கங்க... ஆனா இந்த மலர வெறுக்காதீங்க" எனும் போதே போனை கட் பண்ணி பாக்கெட்ல போட்டுக்கொண்டேன்.

"கலை இந்த பைலை சீக்கிரமா ரெடி பண்ணி கொடு" என் மேஜை மேல் பைல் கட்டோன்றை வைத்தார் மேனேஜர். நான் தலையசைத்தேன். அவர் போய் விட்டார்.

மலர் நிஜமாவே பூ போன்று மென்மையானவள். என்னிடம் ஒருமுறைகூட காரமாக பேசியதில்லை. நா அவளை வெறுக்கவில்லை. ஆனால் ஒரு சிறு சம்பவத்தை சாட்டாக வைத்துக்கொண்டு என் மனம் அவளை புறக்கணிக்கிறது.

...மலர்... மலர்... எழுந்திரு...'வென என் கரங்களிலிருந்த மலரின் கன்னங்களைத் தட்டிக்கொண்டே வந்தாள். மலர் முற்றிலும் மயங்கியிருந்தாள்.

மலர் என் தாய்மாமன் மகள். மாமா இறந்து போயி மூன்று வருஷமாயிடுச்சு. மலருக்கு எல்லாமே அவள் தாய் மாமா தான். அவளும் என் அலுவலகத்தில்தான் பணிபுரிகிறாள்.

அவளின் அழகும் குணமும் என் அம்மாவை கட்டிப்போட்டிருந்தன. அதனால் அவளையே கல்யாணம் செய்துக் கொள்ள வேண்டுமென்று விடாப்பிடியாக இருக்கிறாள்.

மலரை அட்மிட் பண்ணிவிட்டு நானும் ஆனந்தியும் வெளியே காத்துக் கொண்டிருந்தோம்.

எனக்கருகில் அமர்ந்திருந்த ஆனந்தி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

"என்ன அவசரமாய் பேச்சு இவளுக்கு... கவனமாக வரத்தெரியாது..." என முணுமுணுத்தப்படி இருந்தேன்.

அது ஆனந்திக்கு கேட்டிருக்க வேண்டும் என்னை திரும்பி பார்த்தவள், "கலை சார்... அவள் உங்களைப் பார்க்கத்தான் வந்தாள்" என்றாள்.

நான் ஒரு கணம் திகைத்தேன்.

பின் அலட்சியமாக "ஏன் என்னைப் பார்க்க வரணும். நான் அன்றைக்கே சொல்லிட்டன்... மலர கல்யாணம் பண்ணிக்க சம்மதம் இல்லன்னு.. அதை பற்றி பேச வந்திருப்பாள்..." என்றேன் காரமாக..

"அது இல்ல சேர்" என்றவாறு அங்குமிங்குமாக ஏதோ தேடினாள்.

ஆனந்தி மலரின் பைக்குள் இருந்து ஒரு பொதியை கையில் தந்துவிட்டு "சேர் மலர் இன்றைக்கு லீவு எடுக்கிறதா என்னட்ட சொன்னாள். ஆனா நீங்க டிபன் பாக்சை வைச்சிட்டு போயிட்டதா உங்கம்மா போன் பண்ணி சொல்லவும், சீக்கிரமா டிபனை ரெடி பண்ணி நீங்க வந்த பஸ் பக்கமா ஓடி வரும்போது ஆட்டோல பட்டு ஆக்சிடண்ட் ஆகிடுச்சு ".

காரணம்....



அது அவள் பத்தாம் வகுப்பில் படித்த காலம். அன்று அவளின் சக வகுப்பு மாணவன் வரண் ஏதோ ஒரு காகிதத்தை அவளிடம் கொடுத்தபோது அவள் அதை சிரித்தப்படி வாங்கிக்கொண்டாள்.

என் மனம் அக்காட்சியை சந்தேகக் கண்கொண்டு பார்த்தது. அவளோ "அது என்ட கணக்கு பேப்பர் கலை. நா மறந்து வைச்சிட்டு வந்ததால வரண் கொண்டு வந்து கொடுத்தான்" என அவள் விளக்கம் கொடுத்தும் என் மனம் அவளை வேண்டுமென்றே புறக்கணித்தது.

இச்சம்பவத்திற்கு பின் மலர் மன்னிப்பு கேட்பதும் நான் நிராகரிப்பதும் வழமை.

மேனேஜர் கொடுத்த வேலையை அவசரமாக முடிக்க முயன்று கொண்டிருந்தேன்.

கடந்த காலத்தை ஒருமுறை மீட்டிப்பார்த்தது என் உள்ளம்...

அது எவ்வளவு இன்பமான காலம் . நானும் மலரும் பட்டாம் பூச்சிகளாய் எம் தோட்டத்தை சுற்றி திரிந்த அழகிய காலமது. பதின்ம வயது தாண்டியதும் தான் நாங்கள் இருவரும் தனித்தனியானோம் .

மீண்டும் இந்த இருபத்தைந்து வயதில் அவளுடன் தோட்டம் சுற்றினாலென்ன... . இருவரும் ஓர் உலகமானால் தான் என்ன ... ஆழ்மனம் சொல்லியது.

என் இதயகண்ணில் மலர் வந்துப்போனாள் .



மலர் எவ்வளவு அழகான பெண். படித்த பெண்ணும் கூட.... அவள் எனக்காக இன்று வந்திருக்கிறாள் என்றால் அதற்கு என் மீது அவளுக்கு இருக்கும் தனி அன்புதான் காரணம் .

என் இதயம் இளகிப்போனது . அவள் மீது எனக்கு இப்போது காதல் மலர் பூத்தது .

"கலை பிளீஸ் அஞ்சு நிமிஷம்" அவளின் குரல் இப்போதும் என் காதருகில் ரீங்காரிக்கிறது.

ஆபீஸ் முடிந்து மலரை பார்க்க ஹோஸ்பிட்டல் போகணும். என் கரங்கள் வேகமாய் இயங்கின.
என் இதயம் முழுக்க அவள் எண்ணங்களால் நிறைத்தேன்.

என்றுமில்லாதவாறு தனியே புன்னகைத்தப்படி என் மேஜை மேல் பேனாவால் கிறுக்கிக்கொண்டிருந்தபோது அந்த போன் வந்தது.

அழைப்பில் ஆனந்தி. "சொல்லுங்க ஆனந்தி... மலர் முழிச்சிக்கிட்டாளா?..." என்றேன் அவசரமாக.


ஆனந்தி பேசினாள்.

என் உதிரம் ஒருகணம் உறைந்து போனது.

அவள் சொன்னது.

மலரின் மரணச்செய்தி..

என் பேனா நழுவியது.



# 2025 வாசித்த புத்தகங்களில் கவர்ந்தது எது..? ஏன்..?

இப்படி ஒரு தலைப்பைக் கொடுத்து பத்து வரிகளில் எழுதச் சொல்லிக் கேட்டோம். அதுவும் பொங்கலுக்கு முதல் நாள் மதியம் அமீரக நேரம் இரண்டு மணிக்கு மேல் தான் நட்பு வட்டத்தில் கேட்டோம். அன்றிரவுக்குள் நாங்கள் கேட்டவர்களில் பலர் எழுதி அனுப்பினார்கள். அத்தனை வேலைகளுக்கும் இடையில் தாங்கள் வாசித்த புத்தகம் பற்றி எங்களுக்கு எழுதி அனுப்பிய எழுத்தாளர்கள், வாசிப்பாளர்களுக்கு மிக்க நன்றி.

சௌம்யா இராஜாராம், மாணவி
பாரதி நகர், முகவை

உன்மத்தம்




கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்கு கருத்தினையும் தருவது கலையாகும். அக்கலைகள் பண்பாட்டு தளத்தின் கருத்துக் கருவூலமாக விளங்குவதால்தான், கருத்துடன் கலைத்திறனை நோக்காகக் கொண்டு காலவெள்ளத்தைக் கடந்து இன்றளவும் நிலைத்து நிற்கிறது. சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப்பார்க்க இயலாக் கூறுகளாக திகழ்பவை நிகழ்கலைகள். அப்படிப்பட்ட கலைகளுள் ஒன்றான தெருக்கூத்து பார்ப்பதற்கு ரசிக்கும்படியாக இருந்தாலும் அந்தக் கலைஞர்களின் வாழ்வு ரசிக்கும்படியாக இருப்பதில்லை .அப்படியான ஒரு கதைகளத்தில் அமைந்ததுதான் உன்மத்தம்.

ராஜவேலு என்னும் கூத்துக்கலைஞர்தான் இக்கதையின் முக்கிய கதாப்பாத்திரமாக திகழ்கிறார். அவருடைய வாழ்வில் அக்கலை ஏற்படுத்திய தாக்கம், கலைக்கும் கலைஞனுக்கும் இடையே உள்ள உறவு, அக்கலையால் அவர் சந்தித்த எதிர்ப்புகள் என எல்லாவற்றையும் எழுத்தில் உள்ளடக்கி இருக்கிறார் இந்நூலாசிரியர். குடும்ப சூழ்நிலையால் உடலளவில் அக்கலையை பிரிந்திருந்தாலும் மனதளவில் அக்கலையை பிரியமுடியாமல் தவிக்கும் ஒரு கலைஞனின் மனப்போராட்டத்தை விவரிக்கிறது இந்நாவல். ஒரு விஷயத்தை கலைநோக்கோடு அணுகி, கற்பனையும் கலந்து தன்னுடைய மண்சார்ந்த எழுத்துகளால் வெற்றிகரமாக அமைத்து கொடுக்கும் பாணி கொண்ட எழுத்தாளர் பரிவை சே. குமார். நான் படித்த புத்தகங்களில் எனக்கு பிடித்த புத்தகமாக நான் கருதுவது உன்மத்தம்.

எழுத்தாளர் நத்தம் எஸ்.சுரேஷ் பாபு
தேன்சிட்டு இதழ் ஆசிரியர்

இறையுதிர் காடு

ஆன்லைனில் இந்திரா சவுந்திர ராஜன் எழுதிய இறையுதிர் காடு வாசித்தேன்.

அமானுஷ்ய நாவல்கள் வாசிக்க எனக்கு மிகவும் பிடிக்கும். அந்த வகையில் இந்திரா சவுந்திரராஜன் என் அபிமான எழுத்தாளர்.

புஸ்தகா தளத்தில் அவரது இறையுதிர்காடு நாவல் வாசித்து பிரமித்துப் போனேன்.

நிகழ்காலத்திலும் முன் காலத்திலும் என இரு பாதைகளில் பயணிக்கும் நாவல் இறுதியில் ஒன்றினைந்து நமக்குத் தெரிவிக்கும் தகவல் அற்புதமானது.


சித்தர்களின் வாழ்வியல் ஒழுக்கநெறிகள், கட்டுப்பாடுகள் என இந்த நாவலில் எழுத்தாளர் சொல்லும் தகவல்கள் ஏராளம்.

ஒவ்வொரு அத்தியாயத்திலும் விறுவிறுப்புக்கு பஞ்சமில்லை. இறுதியில் டிவிஸ்டுக்கும் குறைவில்லை.

சித்தர்களின் புதையலை பாதுகாக்கும் பாம்பு நம்மை பயமுறுத்துகிறதோடு பாடமும் கற்பிக்கிறது.

போகர், அவரது மாணவர்கள் புலிப்பாணி உள்ளிட்ட பல சித்தர்களோடு உடன்பயணிக்கும் உணர்வை தந்த அருமையான நாவல்.

அனைவரும் படிக்க வேண்டிய சுவையான நாவல். புஸ்தகா இணைய தளத்தில் கிடைக்கிறது. நன்றி.



எழுத்தாளர் லி .நௌஷாத் கான், அபுதாபி

நினைவுகளின் நதி (கவிதை தொகுப்பு )-

கதைகளை போல் கவிதைகளை பெரும்பாலான வாசகப்பெருமக்களுக்கு பிடிப்பதில்லை அதற்கு முக்கிய காரணம் பல எழுத்தாளர்களின் கவிதைகள் வெறும் வார்த்தைகளால் நிரம்பி இருப்பதே ஆனால் எழுத்தாளர் மீ.யூசூப் ஜாஹிரின் நினைவுகளின் நதி என்னும் கவிதை தொகுப்பு அப்படியெல்லாம் இல்லை. படிக்கும் ஒவ்வொரு கவிதையும் நம்மை சிந்திக்க வைக்கும், உறவுகள் மற்றும் காதலின் மேன்மையை சொல்ல வைக்கும். என் மனம் கவர்ந்த ஒரு மூன்று கவிதைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன் .

மறக்கவே முடியாத காயங்கள் தான்
உன் கைப்பிடியிலிருந்து
என்னை விடுவித்துக் கொள்கிறது


அன்பு தரும் துரோகங்களை இதை விட எப்படி சிறப்பாய் சொல்லி விட முடியும்

விடுதலையை யாரும்
விரும்புவதில்லை
அலைபேசிகளிடம் மட்டும்!

ஆண்ட்ராய்டுகளில் நாம் சிக்கி இருப்பதை, அடிமைப்பட்டு கிடப்பதை யதார்த்த சொற்களின் மூலம் அழகாக்கி இருக்கிறார்.

அழ நினைக்கும் போதெல்லாம்
ஆறுதலாய்
அழுது விடுகிறது
மழை

மனதின் இரணங்களை மழையின் மூலம் நிவாரணமாக்கி இருக்கிறார். நினைவுகளின் நதியை நோக்கி கவிதைகளின் காதலர்கள் நிச்சயம் படையெடுப்பார்கள்.




ஸ்ரீராம் பாலசுப்ரமணியன், சென்னை
நிர்வாகி, எங்கள் பிளாக் வலைப்பூ

வாடியது கொக்கு

2025 ஆம் வருடம் படித்தவை கொஞ்சம் குறைவுதான். அரியர்ஸே ஏராளம் இருக்க, சென்ற வருடம் புத்தகக் கண்காட்சி சென்று மேலும் சில புத்தகங்கள் வாங்கி வந்தபோது அரியர்ஸ் கிடக்கட்டும் அப்புறம் பார்க்கலாம், இவற்றை முதலில் படித்துவிட வேண்டும் என்று நினைத்துதான் வைத்தேன். இதுவரை தொடவில்லை. ஆயினும் அண்ணன் மூலம் வந்த சில புத்தகங்களும், உறவின் மூலம் வந்த சில புத்தகங்களும் காலக்கெடுவுக்குள் திருப்பிக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் படித்து முடித்தாலும் மனதில் எதுவும் நிற்கவில்லை.

உளவுக்கு 1000 கண்கள், மயிலங்கியின் மரகதப்பெட்டி, சிவாஜி கணேசன் மூன்று பாகம் ஆகியவை இதில் அடங்கும். சிவாஜியின் புத்தகம் படிக்க சுவாரஸ்யம். எனினும் மீள் வாசிப்பாய் வாசித்த முத்து காமிக்ஸ் மாயாவி புத்தகங்களும், தேவனின் துப்பறியும் சாம்புவும் மனதில் நிற்கிறார்கள். துப்பறியும் சாம்புவை விட ஸ்ரீமான் சுதர்சனம் இன்னும் நன்றாயிருக்கும் என்று தோன்றியது. சாம்பு கொஞ்சம் போர் அடிக்க காரணம் காலம். டூ மச் ஆஃப் கோயின்ஸிடன்ஸ்!

ஏதோ ஒரு ரீல்ஸில் பர்வீன் சுல்தானா பரிந்துரைத்த 'வாடியது கொக்கு' கவிதைப் புத்தகம் வாங்கினேன். கவர்ந்தது. அந்த ஆர்வத்தில் நானும் சில முயற்சித்தேன். சமீப காலமாக கவிதைப் புத்தகங்கள் பக்கம் பார்வை போகிறது. வாடியது கொக்கு புத்தகத்திலிருந்து சாம்பிள்.

காற்றுக்கு சலிப்பதேயில்லை
ஒரே புத்தகத்தை
ஓராயிரம் முறை புரட்டுகிறது


பனி நிறைந்த கண்ணாடியில்
கண்கள் வரைந்தேன்
கண்ணீர் வழிகிறது.

தூண்டிலில் சிக்கிய
மீனின் கண்களில்
விடைபெறும் நதி

எந்தக் கிளி
ஏமாற்றிச் சென்றதோ
தாடியுடன் ஆலமரம்

அந்த மயானத்துக்கு
உயிர் தந்தது
ஒரு பிணம்




கவிஞர் தமிழ்க்காதலன், பெரம்பலூர்
நிர்வாகி, தமிழ்க்குடில் சமூகசேவை அமைப்பு

ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்

தற்போது படித்த ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம் – ஜான் பெர்க்கின்ஸ் என்ற நூலிலிருந்து உங்களுடன் பகிர உண்மைகளும், என் உணர்வும் இங்கே தமிழில் தருகிறேன்.

நாம் வாழும் புவியில் வளர்ந்த நாடுகளின் (வல்லரசுகள்) பொருளாதார நிலைத்தன்மையை நீண்டகாலம் நீட்டிப்பதற்கும், பொருளாதாரத்தின் மூலங்களாக திகழும் முதலாளித்துவமும் கைக்கோர்த்துக் கொண்டதன் விளைவாக இந்த உலகம் எந்த வகையான சூழலுக்கும், இழிநிலைக்கும் தள்ளப்படும் சூழ்ச்சிக்குள் சிக்கி இருக்கிறோம் என்பது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இயற்கை வளங்களுக்காவும், உலகின் 10% மேட்டுக்குடிகளின் ஆடம்பர வாழ்க்கைக்காகவும் பேரரசு எவ்வாறு கொடூரமாக திட்டமிட்டு, உலக தலைவர்களின் கொலைகள், சொந்த மண்ணுக்காக போராடுபவர்களின் தலைமறைவு, அல்லது கொலைகள், பொம்மை அரசாங்கங்கள் உருவாக்கப்படுதலும், உலக மக்களை தொடர்ந்து ஏழ்மை நிலைக்குத் தள்ளி, உழைப்பாளர்களாகவே வைத்து அவர்களின் உழைப்பை

சுரண்டுவதையும், நாடுகளுக்கு கடன்களை கொடுத்து மீளமுடியா அடிமைத் தன்மைக்குத் தள்ளி அதன் மூலம் வளங்களைச் சுரண்டி பெரும் இலாபத்தை அடைவதைத் துல்லியமாக உலக பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் தங்கள் குறிக்கோளாக வைத்துக்கொண்டு செயல்படுகின்றன என்பதை தெளிவாக விளக்கி இருக்கிறார்.




சமூக வாழ்வியல் பண்பாடுகளின் மீது நவீனம் என்ற பெயரில் கல்வி, மருத்துவம், அடிப்படை வசதிகளை தங்களுக்கு சாதகமாக எப்படி பயன்படுத்தி மக்களின் வாழ்வியலை சிதைத்து, சிந்திக்க முடியாதவண்ணம் தொடர்ந்து பொருளாதாரத்தை நோக்கி மக்களை ஓட வைக்கும் சதிகளையும் தோலுரித்துக் காட்டியுள்ளார். மொத்த உலகையும் அடிமைபடுத்துவதே பேரரசின் பெரும் நோக்கமாக இருக்கிறது.

மக்களுக்கு இயற்கையாக கிடைத்துக் கொண்டிருந்த வாழ்வாதாரங்களான நிலம், நீர், காற்று, நெருப்பு ஆகியவற்றின் கதவுகளை அடைத்து எல்லாவற்றுக்கும் விலை வைத்து விற்பதன் மூலம் கொள்ளையடிக்கும் நுட்பத்தையும், அறிவியல் வளர்ச்சி என்ற கவர்ச்சிகரமான வார்த்தைகளின் மூலம் மக்களை முட்டாளாக்கும் திட்டங்களை எப்படி செயல்படுத்துகிறார்கள் என்ற சதிவலையையும் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். நம்மை விழிப்படைய வைக்கும் வாக்குமூலத்தை நீங்களும் படித்து நல்ல உலகம் உருவாக உறுதுணையாக இருக்க வேண்டுகிறேன்

சதீஷ்குமார், அபுதாபி
அமீரகத் தமிழகம், நிர்வாகக்குழு உறுப்பினர்

பசித்த மானுடம் (1978)
ஆசிரியர்: கரிச்சான் குஞ்சு




சிறந்த நாவலாகப் பல இலக்கியத் தளங்களில் பரிந்துரைக்கப்பட்ட கரிச்சான் குஞ்சுவின் "பசித்த மானுடம்" நாவலை வாசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நானும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதாலும், இந்த நாவலின் கதைக்களம் தஞ்சையை ஒட்டியே நகர்வதாலும் அறிமுகமான ஊரின் மண்வாசனையோடு நகரும் காட்சிகள், வாசிப்பை இன்னும் இனிமையாக்கின.


நாவலைத் தொடங்கும் போது அதன் கருப்பொருள் என்னவென்று புரியவில்லை என்றாலும், வாசிக்க வாசிக்க மனிதர்களின் உடல், பணம் மற்றும் அதிகாரம் சார்ந்த ஆசைகள் (பசிகள்) ஒருவரது வாழ்க்கையை எப்படியெல்லாம் புரட்டிப் போடுகின்றன என்பதை நாவல் மிக அழகாகக் காட்டுகிறது. இத்தகைய துணிச்சலான கதைக்கருவை அந்தக்காலத்திலேயே தேர்ந்தெடுத்தது பெரிய சலசலப்பை ஏற்படுத்தியிருக்கக்கூடும். குறிப்பாக, அன்றைய காலக்கட்டத்தில் ஓர்பாலின உறவு குறித்துப் பேசிய மிக முக்கியமான படைப்பாக இது கருதப்படுகிறது.

கணேசன் மற்றும் கிட்டா என்ற இரு நண்பர்களின் வாழ்க்கை பயணமே இக்கதையின் மையக்கருவாகும். கிட்டா சிறுவயது முதலே பணத்தின் மீது தீராத தாகம்கொண்டு, கடினமாக உழைத்து ஒரு பெரிய தொழிலதிபராக மாறுகிறான். ஆனால், அவனது ஓட்டத்தில் பணம் மட்டுமே குறிக்கோளாக இருந்ததால், இறுதியில் குடும்ப அன்பையும் நிம்மதியையும் இழக்கிறான். ஒருகட்டத்தில் அவனது சொந்த மகனே அவனை வெறுத்து அடிக்கும் நிலைக்குத் தள்ளப்படுவது அவனது வாழ்வின் சோகம்.

கணேசன் ஆரம்பத்தில் படிப்பில் சிறந்தவனாகவும், அனைவராலும் நேசிக்கப்படுபவனாகவும் இருக்கிறான். ஆனால், அமைதியான குணமுடைய கணேசன், ஒரு பணக்காரரின் சகவாசத்தால் திசைமாறிச் செல்கிறான். அதன் விளைவாக வாழ்க்கையில் பல துன்பங்களை அனுபவித்து, இறுதியில் தொழுநோயால் பாதிக்கப்பட்டுத் தனிமைப்படுத்தப்படுகிறான். இவர்களின் வாழ்வியல் மாற்றங்களை எந்தவித ஒளிவுமறைவுமின்றி இந்த நாவல் வெளிப்படையாகப் பேசுகிறது.

கதையின் சில பகுதிகள் மிகவும் வெளிப்படையாகவும் ஒருவிதமான மன அழுத்தத்தைத் தரக்கூடியதாகவும் இருப்பதை உணர முடிகிறது. இது ஒரு சராசரி நாவலைப் போல மகிழ்ச்சியான முடிவைத் தருவதில்லை; மாறாக, வாசித்து முடித்த பிறகு ஒருவித கனத்த மனநிலையையும், வாழ்க்கையைப் பற்றிய நீண்ட சிந்தனையையுமே நமக்குள் விட்டுச் செல்கிறது.

அதீத ஆசைகளுடன் எதன் பின்னாலாவது ஓடிக்கொண்டே இருந்தால், இறுதியில் நிம்மதி கிடைக்காது என்பதையும், ஒருகட்டத்தில் மிஞ்சுவது வெறுமைதான் என்பதையும் இந்த நாவல் ஆழமாக உணர்த்துகிறது.




எழுத்தாளர், மருத்துவர் பிரியதர்ஷினி,
களியக்காவிளை, கன்னியாகுமரி

ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்.

சபாபதிப் பிள்ளையால் தன்னை விட்டுப் பிரிந்து இன்னொருவருடன் சென்ற மனைவியை அவமானப் படுத்த முடியவில்லை. தானும் அவமானப்பட விரும்பவில்லை. அப்படியே வீட்டைப் பூட்டி விட்டு ஊரை விட்டு கிளம்புகிறார்.

நெருங்கிப் பழகிய நண்பன் இறந்து விடுகிறார். அவருடைய மனைவியுடனும் புதிதாகக் கண்டெடுத்த குழந்தையுடனும் வாழ்கிறார். அந்தக் குழந்தை ஹென்றியாக வளர்கிறான். தன்னுடைய எல்லா சொத்துக்களுக்கும் ஹென்றியை சட்டப்படி வாரிசாக்குகிறார். ஹென்றி அவரை பப்பா என்று அழைக்கிறான். பப்பா இறந்த பிறகு பப்பாவின் சொந்த ஊருக்கு வருகிறான் . எந்தவித சச்சரவுகளும் இன்றி பப்பாவின் தம்பி ஹென்றியை ஏற்றுக் கொள்கிறார். எல்லோரும் சேர்ந்து பாழடைந்த பப்பாவின் வீட்டைப் புதுப்பிக்கிறார்கள். மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்.

இதன் ஊடாக வரும் கிளியாம்பாள், அக்கம்மாள், மனநலம் குன்றிய பேபி, மணியக்காரர், மண்ணாங்கட்டி, பாண்டு எல்லோரும் வாழ்கிறார்கள். ஊரிலிருந்து தன்னை அந்நியமாகக் காட்டிக் கொள்ள விரும்பும் தேவராஜனும் ஹென்றியுடன் சேர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக ஊருடன் கலந்து விடுகிறான்.

கதை முடிந்த பிறகும் சோப்பெங்கப்பா... சோப்பெங்கப்பா பாடலை மறக்க முடியவில்லை. மணியக்காரர் மரணம், அது சார்ந்த பிரச்சினைகள் தவிர திடீர் திருப்பங்களோ, வன்மங்களோ, எதுவுமில்லாத அற்புதமான நாவல். கதை முழுவதும் அன்பும் நேர்மறை சிந்தனைகளும் நிரம்பி வழிகிறது.



படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட புத்தகங்களில் ஒன்று ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம். இப்போதுதான் வாங்கிப் படித்தேன்.

கோட்பாடுகள் எதுவுமின்றி மகிழ்ச்சியாக வாழும் மனிதர்களை மிகவும் அழகாகப் படைத்திருக்கிறார் எழுத்தாளுமை மதிப்புக்குரிய ஜெயகாந்தன். அவருடைய ஆடும் நாற்காலிகள் ஆடுகின்றன படித்து விட்டு நானும் ஆடிப் போய்விட்டேன். ஆனால் இந்த நாவலை முடிக்கும் போது எல்லோரும் இப்படி இருந்தால் நன்றாக இருக்குமே என்ற ஆசையும் மகிழ்ச்சியும் தோன்றியது. சுற்றிலும் நிறைய நல்ல மனிதர்களுடன் வாழ்ந்த திருப்தி ஏற்பட்டது.

எழுத்தாளர் ஜி.ஏ.பிரபா, கோயம்புத்தூர்
சங்கப் பலகை நிர்வாகி

கலைமகள் கதம்பம்

சமீபத்தில் நான் படித்தது கலைமகள் கதம்பம் என்று ஒரு தொகுப்பு. இது தொகுப்பு என்று சொல்ல முடியாது. ஒரு பொக்கிஷம் சிறுகதைகள் இலக்கியம் விஞ்ஞானம், சமயம் ,நுண்கலை, கவிதை என்று பல்வேறு தலைப்புகளில் பலவகை எழுத்தாளர்கள் எழுதிய கதைகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார்கள்.
வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு வெளியாகிய இந்தத் தொகுப்பில்தான் எத்தனை விதவிதமான கதைகள். ராஜாஜி, புதுமைப்பித்தன், கு.பா.ரா, அகிலன், தி. ஜானகிராமன் ராஜம் கிருஷ்ணன் போன்றவர்களின் கதையோடு, இலக்கிய கட்டுரைகளும் நிறைந்திருக்கிறது. படிக்கப் படிக்கச் சுவையான தமிழ் நடை. அந்த தமிழ் எழுத்துக்களும், சாதாரண விஷயத்தில் கூட கற்பனையைச் சேர்த்து அதை ஒரு சிறுகதையாக்கிய திறமை, ஒரு எழுத்து என்பது எப்படி சுவாரஸ்யமாக இருக்க வேண்டும்,நல்ல எழுத்து நடையுடன் சம்பவக் கோர்வைகளுடன் செல்ல வேண்டும் என்பதை நமக்கு புகட்டிய கதைகள். ஒரு அழகான பட்டு. நூலில் கோர்க்கப்பட்ட நவரத்தினமணிகளைப் போல இந்தக் கட்டுரைகள் ஒவ்வொன்றும் ஜொலித்தது.




கதைகள் ஒவ்வொன்றும் புதிதாக எழுதவரும் எழுத்தாளர்களுக்கான பாடம் என்றால் அது மிகை இல்லை. கற்பனை இல்லாமல், புனைவில்லாமல், உள்ளதை உள்ளபடிச் சொல்லிச் சென்ற அந்த கதைகள் ஒவ்வொன்றும் படிக்கப் படிக்க நமக்கு ஆனந்தத்தைத் தந்தது. நான் இப்போது அதில் உள்ள நுண் கலைகள், கவிதை பகுதிகளை படித்துக் கொண்டிருக்கிறேன். தற்போது இது விற்பனைக்கு கிடைக்குமா என்று தெரியவில்லை. ஆனாலும் இது என்னுடைய பொக்கிஷம்.

# ராம்பிரசாத் கவிதைகள்

## உலகார்ந்த பறவை

நாடுகள், மொழிகள், இனங்கள்
என்று பிரிந்துவிட்ட பிறகு
கடவுச்சீட்டிலும் விசாவிலும்...
பறவையாதலின் சாத்தியங்களைத்
தேட நிர்பந்திக்கப்பட்டிருக்கும்
என் தோட்டத்து புல்வெளியையா
கிரகத்தையே ஒற்றை நாடாக,
ஆகாயப் புழங்குவெளியில்
கட்டற்ற சுதந்திரத்தை புசிக்கும்
சிட்டுக்குருவியொன்று
தன முட்டைகளையிடத்
தேர்வு செய்யவேண்டும்?
அது என் குறித்து என்ன நினைத்திருக்கும் ?
'சர்வாதிகாரி' என்றா?
'மதி கெட்டவன்' என்றா?
'கோழை' என்றா?
அதற்கு உணவும், நீரும் வைத்தேன்...
இத்தனை மருந்துகளால்
ஆற்றுப்படுத்திவிடக்கூடியதா
குற்ற உணர்வென்னும் நோய்மை?

## காலப்பயணம்

பதில் ஒன்று கிட்டியிருந்தது...
கேள்விக்காக
காத்திருக்க முடியுமா என்ன?
கிடைத்த பதிலை
முகநூலில் இட்டுவிட்டேன்...
இனி அந்தக் கேள்வி,
தான் கேட்கப்பட,
யாரைத் தேர்வு செய்ய இருக்கிறதோ?
இன்னமுமா கடந்த காலத்திற்கு
காலப்பயணம் சாத்தியமில்லையென்று
நம்புகிறீர்கள்?

# GALAXY BOOK
## SELLERS & PUBLISHERS




& Many....

**WhatsApp 9994434432**